விலை : 20.00
பக்கங்கள் : இருபது
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 08 திங்கட்கிழமை (21.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 123

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

# சர்வதேச விசாரணையில் நவநீதம்பிள்ளை தீவிரம்

## பான் கீ மூனை சந்தித்து விரைவில் பேச்சு

(கொழும்பு)

இலங்கை மீதான சர்வதேச மனிதாபிமான மற்றும் மனிதவுரிமை சட்ட மீறல்கள் தொடர்பில் விசாரணையை மேற்கொள்வதற்கான விசாரணைக் குழுவின் நியமனம் குறித்து அதிகாரபூர்வமாக அறிவிப்பதற்கு முன்னர் ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ மூனை ஐ.நா. மனித்வுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சந்தித்துப் பேசவுள்ளார்.



இத்தகவலை ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகளை மேற்கோள்காட்டி தகவல் ஒன்று வெளியாகியுள்ளது. இத்தகவலின்படி இலங்கை மீதான விசாரணைகளை மேற்கொள்வதற்கான விதிமுறைகளை உருவாக்குவதில் ஐ.நா. மனிதவுரிமைகள் ஆணையாளர் பணியகம் தீவிரமாக ஈடுபட்டுள்ள

19 ஆம் பக்கம் பார்க்க..

## மயங்கி விழுந்த விவசாயி உயிரிழப்பு

(யாழ்ப்பாணம்)

கடும் வெயிலின் மத்தியில் தோட்டவேலையில் ஈடுபட்டிருந்த விவசாயி ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் அச்சுவேலி வடக்கு பகுதியில் இந்த பரிதாப சம்பவம் இடம் பெற்றது.

அதேபகுதியைச் சேர்ந்த வரப்பிரகாசம் செல்லத்தம்பி (வயது 67) எனற குடும்பஸ்தரே மரணமடைந்தவராவார். சனிக்கிழமை மதியம் வழமை போனறு இவ்ர்தோட்டவேலை

20 ஆம் பக்கம் பார்க்க..

## பாக்.பிரதிநிதிகள் இலங்கை வருகை

(இஸ்லாமாபாத்)


பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் 21 பிரதிநிதிகள், இன்று கொழும்புக்கு விஜயம் செய்ய உள்ளதாக இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் அறிவித்துள்ளது.

இந்த உயர்மட்ட இராணுவக் குழுவுக்கு மேஜர் ஜெனரல் நோயேல இஸ்ராயேல் கோபார் தலைமை தாங்கவுள்ளார்.

ஒருவார காலம் தங்கியிருக்கும் இவர்கள் இலங்கையின் பாதுகாப்பு, பொருளாதாரம், தேசிய மற

20 ஆம் பக்கம் பார்க்க..

## விக்கி-டக்ளஸ் இணைத்தலைமையில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இன்று



(கொழும்பு)

வடக்கு மாகாணசபையின் முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மற்றும் பாரம்பரிய் கைத்தொழில்கள் மற்றும் சிறுகைத்தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தாவின் இணைத்தலைமையில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் முதன்முறையாக இன்று 21 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மாவட்டச்செயலகத்தில் இடம்பெறவுள்ளது.

வடக்கு மாகாணசபைக்கு முதன முறையாக தேர்தல் நடைபெற்று மாகாணசபை அமைக்கப்பட்ட பின்னர் கடந்த ஆண்டு நவம்பர்

20 ஆம் பக்கம் பார்க்க..

## இந்து ஆலய புனரமைப்பிற்கு பௌத்த பிக்குகள் எதிர்ப்பு

### தடைப்பட்ட நிலையில் பணிகள்

(திருகோணமலை)

திருகோணமலை மாவட்டத்தில் இந்து ஆலயமொன்றின் புனரமைப்புக்கு அரசாங்க அதிபரால் அனுமதியளிக்கப்பட்டுள்ள போதிலும் கடும் போக்குடையு பௌத்த பிக்குகளினால் புனரமைப்பிற்கு தடை ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன.

மூதூர் பிரதேசத்திலுள்ள கங்குவேலி அகத்தியர் வழிபாட்டு தலத்தின்புனரமைப்பு பணிகளுக்கு பௌத்த பிக்குகள் உட்பட சிலரால் ஏற்படுத்தப்பட்டுள்ள இந்த தடை காரணமாக ஆலய புனரமைப்பு பணிகள் நிறுத்தப்பட்டு உடைமைகளுக்கு பொலிஸாரின் பாதுகாப்பும் வழங்கப்பட்டுள்ளது.

அகத்தியர் வழிபாட்டு மையம் எனப்படும் இந்த ஆலயத்தில் அகத்திய முனிவர் சிவலிங்கம் வைத்து வழிபாடு செய்ததாக இந்துக்கள் நம்புகின்றனர்.

போர் மற்றும் இன வன்முறைகளையடுத்து கடந்த காலங்களில் இந்த ஆலயம் கைவிடப்பட்டு வழிபாடுகளும் தடைப்பட்டிருந்தன. போருக்கு பின்னர் ஆலய நிர்வாகம் புனரமைப்பு பணிகளை ஆரம்பிக்கத் தயாரான போது அண்மித்த பகுதியிலுள்ள பௌத்த பிக்குகள் உட்பட சிலரால் விடுக்கப்பட்ட அச்

20 ஆம் பக்கம் பார்க்க..

## கிளிநொச்சி விவசாயிகள் உண்ணாவிரத போராட்டம்

### உறுதிமொழியை அடுத்து கைவிடப்பட்டது



(கிளிநொச்சி)

கிளிநொச்சி விவசாயிகள் முன்னெடுத்த இரணைமடு குளத்து நீரை யாழ்ப்பாணத்திற்கு கொண்டு செல்வதற்கு எதிரான அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்று நடைபெற்றது.

காலை 9.30 மணியளவில் கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபை மண்டபத்தில் இரணைமடு விவசாயிகள் சம்மேளனத்தின் ஏற்பாட்டில்நடைபெற்ற அடையாள உண்ணாவிரதப் போராட்டத்தில் நூற்றுக்

20 ஆம் பக்கம் பார்க்க..

## தடைசெய்யப்பட்டோரை கைது செய்ய சர்வதேச உதவியை இலங்கை நாடும்!


(கொழும்பு)

தடைசெய்யப்பட்ட புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் தொடர்புடைய நபர்களையும், சர்வதேச பொலிஸாரால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளவர்களையும் கைது செய்ய உதவுமாறு சர்வதேச சமூகத்திடம் இலங்கை அரசாங்கம் கோரிக்கை விடுக்கவுள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மற்றும் தனிநபர்கள் மீதான தடை மற்றும் விடுதலைப் புலிகளின் மீண்டும் ஒருங்கிணைவது தொடர்பில் சர்வதேச சமூகத்துக்கு இலங்கை அரசாங்கம் எதிர்வரும் 24 ஆம் திகதி வியாழக்கிழமை காலை விளக்கம் அளிக்கவுள்ளது.

இதன்போதே வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள் மற்றும் இராஜதந்திரிகளுக்கு இந்தக் கோரிக்கையை விடுக்கவுள்ளதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வெளிவிவகார அமைச்சு மற்றும படைத்துறை அமைச்சு ஆகியவற்றின் ஏற்பாட்டில் இடம்பெறவுள்ள இச்சந்திப்பில், ஐ.நா. சாசனத்துக்கு அமைவாக புலம்பெயர் 16 தமிழ்




20 ஆம் பக்கம் பார்க்க..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# காதலியின் நிர்வாணப் புகைப்படங்களை பேஸ்புக்கில் பிரசுரித்த காதலன் கைது




(கொழும்பு)

பேஸ் புக் சமூக இணையத்தளம் ஊடாக அறிமுகமான 24 வயது யுவதியொருவரை காதலித்த 19 வயதான இளைஞர் ஒருவர் குறித்த காதலியின் நிர்வாண புகைப்படங்களை இணையத்தில் வெளியிட்டார் என்ற குற்றச் சாட்டின் பேரில் கலேவலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கலேவலை பிரதேசத்தைச் சேர்ந்த 24 வயதான குறித்த யுவதி செய்த முறைப்பாட்டுக்கு அமைவாகவே குறித்த இளைஞரை பொலிஸார் கைது செய்தனர்.

சுமார் 10 மாதங்கள் வரை நீடித்த இவ்விருவருக்கும் இடையிலான காதல் தொடர்பு முறிவடைந்துள்ள நிலையிலேயே போலி பேஸ்புக் கணக்கொன்று ஊடாக இந்த நிர்வாண புகைப்படங்கள் இணையத்துக்கு தரவேற்றம செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த புகைப்படங்களை வைத்து யுவதி அச்சுறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில தெரியவந்துள்ளது.

முறிந்து போன காதல் தொடர்பை மீண்டும் தன்னுடன் ஆரம்பிக்குமாறும் அவ்வாறு செய்யாது விடத்து மேலும் பல நிர்வாண புகைப்படங்களை வெளியிடப்போவதாகவும் குறித்த இளைஞர் மிரட்டியுள்ளதாக யுவதியின் முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

முன்னதாக காதலிக்கும் சந்தர்ப்பத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டதாக கூறப்படும் யுவதியின் நிர்வாண புகைப்படங்களே இவ்வாறு இணையத்துக்கு தரவேற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில தெரியவந்துள்ளது.

இந் நிலையில் குருணாகலை நகருக்கு குறித்த இளைஞரை வரவழைத்த யுவதி பொலிஸாரின் திட்டத்துக்கு அமைவாக பொலிஸ் குழுவுடன் நேற்று அங்கு சென்றுள்ளார். இதன் போது முச்சக்கரவண்டியொன்றில் காத்திருந்த குறித்த இளைஞர் உடனடியாக யுவதியை அவ்வண்டியில் ஏற்றிக் கொண்டு செல்ல முற்பட்ட போது உடன் சென்ற பொலிஸ் குழு இளைஞரை கைது செய்தது.

இதனை அடுத்து தம்புள்ளை நீதிவான் நீதிமன்றில் குறித்த இளைஞர் ஆஜர்படுத்தப் பட்டுள்ளதுடன் அங்கு வைத்து அவர் தனது குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து எதிர் வரும் 22 ஆம் திகதிவரை அவரை விளகக மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர். (செ-6)

# வாகன விபத்தில் இருவர் காயம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பருத்தித்துறை ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவிலுக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்றுள்ள வாகன விபத்தில் படுகாயமடைந்த இருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

சைக்கிளொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் மோதியதில் இவ்விபத்து சம்பவித்துள்ளது. மோட்டார் சைக்கிள் சென்று கொண்டிருந்தபோது சைக்கிளில் சென்றவர் திடீரென திருப்ப முற்பட்ட வேளையிலேயே இவ்விபத்து சம்பவித்ததாக பருத்தித்துறை பொலிஸார் கூறினர்.

இதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பருத்தித்துறை மணல் ஒழுங்கையைச் சேர்ந்த இருதய மனோகரன் சியாம் (வயது-22), குணசீலன் பிரேம்குமார் (வயது- 20) ஆகியோரே படுகாயமடைந்தனர்.

விபத்துத்தொடர்பானவிசாரணைகளைபருத்தித்துறைபொலிஸார்மேற்கொண்டுள்ளனர்.(செ-6)

# மீனவர் பேச்சுவார்த்தைக்கு முன் அமைச்சு மட்டத்தில் பேச்சு - ராஜித

இலங்கை - இந்திய மீனவர் பேச்சுவார்த்தைக்கு முன்னர் அமைச்சு மட்டப் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும் என மீன் பிடித்துறை மற்றும் கடல் வள அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

இலங்கை -இந்திய மீனவர்கள் அத்து மீறலகளில் ஈடுபடுதல் மற்றும் கைதுகள் தொடர்பில் இரு நாடுகளினதும் அமைச்சு ரீதியான பேச்சுவார்த்தை நடத்தப்பட வேண்டியது அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை எதிர்வரும் மே மாதம் 12,13ம் திகதிகளில் இலங்கை - இந்திய மீனவர் பேச்சுவார்த்தை கொழும்பில் நடத்தப்பட உள்ளதாக தமிழக அரசாங்கம் அறிவித்துள்ளது.

எனவே இதற்கு முன்னராக அமைச்சு ரீதியான பேச்சுவார்த்தை ஒன்றை நடத்த வேண்டும் என இந்திய மத்திய அரசாங்கத்திற்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

எனினும் இது குறித்து இலங்கை அரசாங்கத்திற்கு உத்தியோகப்பூர்வமாக எவ்வித தகவல்களும் வழங்கப்படவில்லை எனவும் மீனபிடித்துறை அமைச்சு அறிவித்துள்ளது.(செ-6)

# கனேடிய அரசின் நடவடிக்கை வரவேற்கப்பட வேண்டியது

(கொழும்பு)

கனேடிய அரசாங்கத்தின் நடவடிக்கைகள வரவேற்கப்பட வேண்டியது என கனேடிய தமிழ் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்கு வழங்கப்பட்டு வந்த நிதி உதவியை கனேடிய அரசாங்கம் இடைநிறுத்திக் கொண்டுள்ளது.


வருடாந்தம் தன்னார்வ அடிப்படையில் 10 மில்லியன் டொலர்கள் நிதி உதவியாக வழங்கப்பட்டு வந்தது.

இந்த உதவியை எதிர்வரும் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப் போவதில்லை எனவும், இலங்கை மனித உரிமை நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படாமையே உதவு தொகை நிறுத்தப்பட்டமைக்கான காரணம் எனவும் கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயார்ட் தெரிவித்துள்ளார்.

திட்டமிட்ட அடிப்படையில் இலங்கையில் முன்னெடுக்கப்பட்டு வரும் மனித உரிமை மீறல்களை தடுக்க கனேடிய அரசாங்கம் எடுத்துவரும் இத்தகைய முனைப்புக்கள் பாராட்டுக்குரியவை என கனேடிய தமிழ் காங்கிரஸ் குறிப்பிட்டுள்ளது.

கனடாவின் முன்மாதிரியை ஏனைய பொதுநலவாய உறுப்புநாடுகளும்பின்பற்றுமென எதிர்பார்ப்பதாக அது தெரிவித்துள்ளது.(செ-6)

# சதுரங்கப் போட்டி



(யாழ்ப்பாணம்)

வட மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் நடத்தப்படும் சதுரங்கப் போட்டியை ஆரம்பித்து வைக்க கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நாளை மறுதினம் 23 ஆம் திகதி யாழ்ப் பாணத்திற்கு வருகை தரவுள்ளார் என ஆளுநரின் செயலாளர் எல்.இளங்கோவன் அறிவித்துள்ளார்.

இதேவேளை வட மாகாண ஆளுநர் அலுவலகத்தினால் நாளை 22 ஆம் திகதி நடைபெறவிருந்த மாகாண மட்ட சதுரங்கப் போட்டி தவிர்க்க முடியாத காரணத்தினால் 23 ஆம் திகதி காலை 8.30 மணிக்கு யாழ் இந்தக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

போட்டியில் பங்குபற்றும் போட்டியாளர்கள் காலை 8 மணிக்கு முன்பதாக பாடசாலைக்கு சமுகம் தருமாறு ஆளுநரின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (செ-6)

# இனங்களின் இணைவினூடாகவே அபிவிருத்தியை அடையமுடியும்

## பிரதி அமைச்சர் பண்டு யாழில் தெரிவிப்பு

தமிழர், சிங்களவரென்ற பேதமின்றி அபிவிருத்திக்காக உழைக்க வேண்டும். இனங்களின் இணைவினூடாகவே அபிவிருத்தியை அடையமுடியுமென பாரம்பரிய சுதேசிய வைத்திய பிரதி அமைச்சர் பண்டு பண்டாரநாயக்க தெரிவித்தார்.

யுத்தம் நிறைவடைந்த பின்னர் பல அபிவிருத்திகள் நடைபெறுகின்றன. அபிவிருத்தியின் நன்மைகளை தமிழ் மக்கள் அனுபவித்து வருகின்றார்களெனவும் அவர் கூறினார்.

யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற சித்திரை புத்தாண்டு கோடைகால விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இதில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில், "யுத்தம் நிறைவடைந்த பின்னர் இங்கு வந்தபோது போதிய அபிவிருத்திகள் இருக்கவில்லை. போக்குவரத்து மேற்கொள்வதில் கூட மிகவும் சிரமம் காணப்பட்டது. ஆனால், தற்போது கொழும்பிலிருந்து கூட 6 மணித்தியாலங்களுக்குள் இங்கு வந்துவிடக்கூடிய வகையில் வீதிகள் செப்பனிடப்பட்டுள்ளன. போககுவரத்து எளிமைப்படுத்தப்பட்டுள்ளது. இது யுத்தம நிறைவடைந்ததால் ஏற்பட்ட நன்மையாகும்.

நான் தங்கியிருந்த இடத்திலிருந்து இங்கு வரை பாரம்பரிய மரபுக்கமைய வரவேற்பளித்து அழைத்து வந்தமை எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இது இனங்களுக்கிடையிலான நட்புறவு வெளிப்பாட்டின் உறவுகளை நேசிப்பதாக இருந்தது. இனங்களுக்கிடையிலான ஐக்கியத்தினூடாகவே எமது நாட்டினை கட்டியெழுப்பமுடியும்.

தமிழர்களாகிய நீங்கள் இன்று மகிழ்ச்சியாக வாழ்வதற்கு ஜனாதிபதியின் முயற்சியால உங்களுக்கு சுதந்திரத்தை வழங்கியுள்ளார். பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை மேற்கொண்டு வருகிறார். இப்புத்தாண்டு விழாவை நடத்துவதற்கு ஒழுங்கமைத்த தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் யோகராஜனுக்கு எனது நன்றி. எனது தந்தையார் யாழ்ப்பாணத்துக்கு வந்து சேவையாற்றினார். யாழ். மக்கள் மீது கொண்ட அன்பின் வெளிப்பாட்டுடன் விரும்பி பணியாற்றியுள்ளார். தொழில்நுட்பக் கல்லூரியின் பணிப்பாளர் ந.யோகராஜன் சித்த ஆயுர்வேதத்துடன் இணைந்து உங்களுக்கு சேவை செய்கிறார்.

தற்போதைய இம்மகிழ்ச்சிகரமான சமாதானச் சூழலில் நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும். இனிவரும் காலத்தில் நாம் இணைந்து சேவையாற்றுவோம். அனைவரும் இணைந்து பணியாற்றுவதனூடாக எமது நாட்டை அபிவிருத்தி அடையச் செய்வதுடன், சுபீட்சமான வாழ்வையும் நாம அமைத்துக்கொள்ள முடியும். இதற்காக நாம் அனைவரும் இணைந்து பணியாற்ற வேண்டும் என்றார். (செ-6)

# கடும்போக்குவாதத்திற்கு நாட்டில் இடமில்லை

## அமைச்சர் ஹெகலிய தெரிவிப்பு

(கொழும்பு)

கடும்போக்குவாதத்திற்கு நாட்டில் இடமில்லை என ஊடக அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடும்போக்குவாதத்திற்கு எந்த வகையிலும் இடமளிக்கப்படமாட்டாது. நாட்டில் ஒரு சொற்பளவிலான தரப்பினர் மட்டுமே கடும்போக்குவாதத்தை ஊக்குவிக்கின்றனர்.

நாட்டில் யார் கடும்போக்குவாதிகள் அல்லது யதார்த்தமானவர்கள் என்பதனை மக்களே நிர்ணயிப்பார்கள்.

நாட்டின் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு கடும்போக்குவாதிகள் பெரும் தடையாக செயற்பட்டு வருகின்றனர்.

ஒரு முனையில் ஒரு தரப்பினரும் மறு முனையில் மற்றுமொரு தரப்பினரும் குரல் கொடுத்து வருவதால் அதன் நடுவில் நிற்பதற்கு நாம் முயற்சிக்கவில்லை என அவர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, முஸ்லிம் கடும்போக்கு வாதத்தை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜாதிக ஹெல உறுமய கட்சி தெரிவித்துள்ளது. (செ-6)

# விசா கால எல்லை குறித்து எமக்கு எதுவும் தெரியாது

## வெளிநாட்டு ஊடகவியலாளர் சங்கம் தெரிவிப்பு

இலங்கைக்கு அனுப்பப்படும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் விசாக்கள் தொடர்பில் கால எல்லையேதும் விதிக் கப்பட்டிருப்பதாக தமக்கு தெரியாதென வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

கொழும்பிலுள்ள பி.பி.சி ஊடகவியலாளரகளான சார்ல்ஸ் ஹவிலண்டனுக்கு ஒரு வருட விசா நீடிக்க மறுக்கப்பட்டதாக செய்தி வெளிவந்ததையடுத்து வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் இவ்வாறு கூறியுள்ளது.

இது தொடர்பில் வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில், இலங்கைக்கு தொழில் நிமித்தம் அனுப்பப்படும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் விசாக்கள் மீது எவ்வாறான கால எல்லையும் இருப்பதாக வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் சங்கம் அறியவில்லை.

ஆயினும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு வழங்கப்படும் விசாக்கள் பற்றி அடுத்த வாரமளவில் ஊடக அமைச்சு அறிவிக்குமென அதிகாரிகள் குறிப்பிடுவதை அவதானித்துள்ளோம். நாம் அதை ஆவலுடன் எதிர்ப்பார்த்துள்ளோம்.

இதேவேளை இலங்கை அதிகாரிகளால் கடைப்பிடிக்கப்படும் கொள்கைகளை வெளியுறவு அமைச்சின் இணையதளத்தில் காணலாம்.

இதில் ஒரு வெளிநாட்டு ஊடகவியலாளர் எவ்வளவு காலம் இலங்கையில் தங்கலாம் என்பது தொடர்பில் எதுவும் குறிப்பிடப்படவில்லை என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-6)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுப்புக்கூறப்படும் சந்தர்ப்பத்தில் உண்மையான சமாதானம் பிறக்கும்

## மன்னார் ஆயர் ஜோசப் வலியுறுத்து

(குருமன்காடு)

**உண்மை ஏற்கப்பட்டு நடந்த விடயங்களுக்கு பொறுப்புக் கூறப் படும் பட்சத்திலேயே உண்மையான சமாதானம் பிறக்கும். உண்மை இல்லாத பொய் உள்ள இடத்தில் உண்மையான அமைதி பிறக்காது.**



நீதி இல்லாத இடத்திலும் அவ் வாறான குழப்பமான சூழ்நிலை ஏற்படும். நல்லிணக்கம் ஏற்படும் என மன்னார் மறைமாவட்ட ஆயர் இராயப்பு ஜோசப்பு ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் புனித செபஸ்தியார் பேராலயத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற உயிர்த்த ஞாயிறு நள்ளிரவு திருப்பலியினை ஒப்புக் கொடுத்த போதே மன்னார் ஆயர் தனது உரையில் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்று கையில்,

"ஒற்றுமை, நல்லிணக்கம் தொடர்பில் பேசிக் கொண்டிருப்ப தில் எவ்வித பலனும் இல்லை. எமது நாட்டிற்கு மாற்றம் தேவை. அதனை உலக நாடுகள் அறிந்திருக்கின்றது. ஆனால் எமக்கு உதவி செய்ய வேண டும் என அந்த நாடுகள் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றன.

எனினும் அவற்றை எமது நாடு ஏற்றுக்கொள்வதாக இல்லை. இதனால் பல ஆண்டுகளுக்கு பின் நீதி இல்லாமல், உண்மை இல்லா மல் சமாதானம் இன்றி தவி த்த மக்களாக எமது இலங்கை நாட்டு மக்கள் வாழ்ந்து வருகின்ற னர்.

அந்த மக்களுக்குத் தேவையான அடிப்படை நீதியுடன் கூடிய சமா தானமான இந்த செல்வத்தைப் பெற் றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

வீதி அமைக்கப்படலாம், கட்டட ங்கள் கட்டப்படலாம் அவை அல்ல எங்களுக்குத்தேவை. எங்களுக்கு உண்மையான தேவை உலகத் தில் உள்ள மனிதர்கள் எல்லாம் உண் மையான சமாதானத்துடன், ஒறறுமையாக வாழ வேண்டும என்பதே.

கவலைகள், கஷ்டங்கள், வறு மைகள் இருக்கலாம். ஆனால் உண்மையான நீதியுடன் கூடிய சமாதானமே இந்த மக்களுக்குத் தேவை.

1920 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை இப்படியான ஒரு போராட்டம் இடம் பெற்று வருகின் றது. இதற்கு ஒரு உரிய பதிலை கொடுப்பதற்காக இந்த நாடுகள் எங்களுடன் சேர்ந்து குரல்கொடுத்து வருகின்றன.

சமாதானம் என்பது கடவுளின் உண்மையான கொடை. இந்த நாட்டின் சமாதானத்திற்காகவும், எங்களுக்காகவும் கேட்கப்படுகின்ற இந்த மன்றாட்டுக்கள் நிறைவேற் றப் பட வேண்டும் என்றார்.

இதேவேளை சிறைச்சாலைக ளில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட் டது. (அ-250)

## சீ.வீ.கே.சிவஞானம் பதவி விலகினார்

சிறுவருக்கான அபிவிருத்தி நிலையத்தின் தலைவராக கடந்த 17வருடங்களாக பதவி வகித்து வந்த முன்னாள் யாழ். மாநகர ஆணையாளரும் வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம் இந்த மாதம் 17ஆம் திகதி முதல் முழுமையாக தமது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

நீண்ட காலமாக பாதிக்கப்பட்ட மற்றும் வசதிகுறைந்த சிறுவர்க ளின் கல்வி வ்ளர்ச்சிக்காகவும் பெண் தலைமைத்துவக் குடும்பங்க ளின் வாழ்வாதாரத்தை மேம்படுத் தும் முகமாகவும் உள்நாட்டு மற் றும் வெளிநாட்டு நிறுவனங்களிட மிருந்தும் நன்கொடையாளர்க ளிடம் இருந்தும் உதவிகளை பெற்று பலதிட்டங்களை இந்நிறு வனம் செயற்படுத்தியுள்ளது.

சீ.வீ.கே.சிவஞானம் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங் களின் தலைவராக முன்பு பல காலம் பதவி வகித்துள்ளார் என்ப தும் குறிப்பிடத்தக்கது. வடக்கு மாகாண சபையின் செயற்பாடுகள் மற்றும் சமூக மற்றும் அரசியல் செயற்பாடு களில் கூடுதல் கவனம் செலுத்தும் பொருட்டே இந்த பதவியில் இருந்து விலகுவதாக அவர் தெரிவித் துள்ளார். (அ-6)

# கிராமப்புற மேம்பாடுகள் தொடர்பில் கிராமசேவகர்களுக்கு தெளிவூட்டல்

(கொழும்பு)

கிராமிய பிரதேசங்களில் வாழும் அடிமட்ட மக்களின் வாழ்வாதார த்தை மேம்படுத்தல் மற்றும் அப்ப குதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதி களைப் பெற்றுக் கொடுத்தல் போன்ற நடவடிக்கைகளை காத்தி ரமானதாக முன்னெடுப்பதற்காக நாடளாவிய 14 ஆயிரம் கிராம சேவையாளர்களுக்கு தெளிவூட்டும் செயற்றிட்டங்களை அரசாங்கம் முன்னெடுக்கவுள்ளது.

இதற்கிணங்க நாட்டின் அனை த்துப் பிரதேச செயலக பிரிவுகளை யும அடிப்படையாகக் கொண்ட செய ற்றிட்டங்கள் அடுத்த மாதத்தில் ஆரம் பிக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்தது.

கடந்த இரண்டு வருடங்களு க்கு முன் கிராம சேவையாளர்களுககு இது தொடர்பில் தெளிவூட்டும் நிகழ் வொன்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடத்தப்பட்டதுடன் அதன் பின்பு இச் செயற்றிட்டம் நடை முறைப்படுத்தப்படாமலிருந்தது.

மீண்டும் இச்செயற்றிட்டத்தை ஆரம்பிப்பதுடன் பிரதேச செயலகப் பிரிவுகளெங்கும் கிராம சேவகர் கள் ஒன்று கூட்டப்பட்டு இத்திட்டம் பற்றி அவர்களுக்கு தெளிவூட்டவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சு தெரிவித்தது.

நாடளாவிய ரீதியில் பெருமள விலான கிராம சேவகர் வெற்றிட ங்கள் கடந்த காலங்களில் நிலவிய போதும் அண்மையில் அரசாங்கம் 4ஆயிரம் புதிய கிராம சேவகர் நியமனங்களை வழங்கி வெற் றிடங்களை நிரப்பியது. புதிய கிராம சேவகர்களுக்கான மூன்று மாத பயிற்சிகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன.

அதனையடுத்து மேற்படி செயற் றிட்டம் தொடர்பாக அவர்களுக்குத் தெளிவூட்டும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

கிராமிய பிரதேசங்களை நகரப் புறங்களைப் போன்று சகல வச திகளுடன் கட்டியெழுப்புவதே ஜனா திபதியினதும் அரசாங்கததினதும் நோக்கமாகும்.

இந்த வகையில் கிராமிய மட்ட மக்களுக்கு நீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளைப் பெற்றுக் கொடுப்பதும் அப்பிரதேச உட்கட்ட மைப்பு வசதிகளை மேம்படுத்து வதும் மேற்படி செயற்றிட்டத்தின் நோக்கமாகுமெனவும் அமைச்சு தெரிவித்தது. (அ)

# இளைஞர்கள் மீது தாக்கு; மல்லாகத்தில் சம்பவம்

யாழ். மல்லாகத்திலுள்ள விசா லாட்சிமன்ற முன்றலில் நின்று கொண் டிருந்த இளைஞர்கள் மூவரை முக த்தை துணிகளினால் மறைத்துக் கொண்டு வந்த கும்பலொன்று தாக்கி யதால் படுகாயமடைந்த அம்மூவ ரும் தெல்லிப்பழை ஆதார வைத் தியசாலையில் அனுமதிக்கப்பட்டு ள்ளதாக தெல்லிப்பழை பொலி ஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இச்சம்பவத்தில் ஊரெழு பொக்கனையைச் சேர்ந்த இந்திர குமார் கஜீபன் (வயது 19), சின்ன ராசா கௌதமன் (வயது 21), ஜெயசீ லன் மயூரன் (வயது 21) ஆகிய மூவருமே படுகாயமடைந்தனர்.

தெல்லிப்பழை பொலிஸாரும் தெல்லிப்பழை பிரதேச செயலக மும் இணைந்து சித்திரைப் புத்தா ண்டு இசை நிகழ்ச்சியை மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் சம்பவதினம் நடத்தியது. இதன் போது இரு குழுவினருக்கிடையில் ஏற்பட்ட முரண்பாடே இத்தாக்குதலுக்கு காரண மென்று ஆரம்பக் கட்ட விசாரணை யில் தெரிய வந்துள்ளதாகவும் பொலி ஸார் கூறினர்.

இதேவேளை யாழ். மல்லாகம் பகுதியில் சுன்னாகம் சூராவத்தை யைச் சேர்ந்த தவனேஸ்வரன் நிரு பன் (வயது 30) என்ற இளைஞர் மீது மேற்கொள்ளப்பட்ட வாள்வெட் டில் படுகாயமடைந்த அவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனு மதிக்கப்பட்டுள்ளதாக தெல்லிப் பழை பொலிஸார் தெரிவித்தனர்.

அதேநாள் நள்ளிரவு இந்த இளை ஞர் வீதியால் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது மோட்டார் சைக் கிளில் வந்த இனந்தெரியாத நபர் கள் இருவர் இந்த வாள்வெட்டை மேற்கொண்டுள்ளதாகவும் பொலி ஸார் கூறினர்.

இச்சம்பவங்கள் தொடர்பிலான விசாரணைகளை தெல்லிப்பழை பொலிஸார் மேற்கொண்டுள்ள னர். (அ-4-23)

# இன்றைய இராசி பலன்

**21.04.2014**

**(சித்திரை 08, திங்கட்கிழமை)**

**சூரிய உதயம் காலை 6.01 மணிக்கு**
**சப்தமி பின்னிரவு 3.02 மணிவரை**
**பூராடம் மாலை 6.36 மணிவரை**
**இராகுகாலம் 7.31-9.01 மணிவரை**
**சுபநேரம் 12.01-01.31 மணிவரை**

வளவன்

**மேடம்** — தடைகள் அகன்று காரியங்கள் கைகூ டும், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், மறைமுக போட்டிகளை சமாளிப்பீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம்.

**இடபம்** — கேட்ட இடத்தில் உதவிகள் கிடை ப்பது அரிது, பிறருக்காக பொறுப் புச் சொல்வதை தவிர்ப்பது நல்லது, பயணங்களின் போது பொருட் களில் கவனம் அவசியம், வரவைக் காட்டிலும் செலவுகள் அதிகமாகும்.

**மிதுனம்** — பணத் தேவைகள் கடைசிநேரத்தில் பூர்த்தியாகும், நட்பு வட்டம் விரி வடையும், வெளியூர்த் தொடர்பு களால் நன்மையுண்டு, குடும்பத் தில் அந்நியோன்னியம் அதிகரிக் கும்,. போசன சுகமுண்டு.

**கடகம்** — சச்சரவை விட்டு சாதித்துக் காட் டுவீர்கள், உடல்நலன் சீராகி உற் சாகத்தோடு செயற்படுவீர்கள், பகைவர்கள் மனம் மாறுவர், சுவா ரஸ்யமான நாள், திடீர் பயணங் களால் நன்மையுண்டு.

**சிம்மம்** — சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர் கள், உள்ளம் மகிழும் சம்பவங் கள் இல்லத்தில் இடம்பெறலாம், பிள்ளைகளின் நீண்ட நாளைய கோரிக்கைகளை நிறைவேற்று வீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு.

**கன்னி** — பேச்சில் கனிவு பிறக்கும், கல்வி யில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பய முண்டு, பக்குவமாக நடந்து பாராட் டுப் பெறுவீர்கள், எடுத்த காரி யங்களை முடிக்க அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

**துலாம்** — சுறுசுறுப்புடன் செயற்படுவீர்கள் சேமிப்பை உயர்த்தும் எண்ண உருவாகும், எடுத்த காரியத்தை மு க்க சகோதர வழியில் உதவிகள் கிடைக்கலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு.

**விருச்சிகம்** — உறவினர் வருகையுண்டு, செய் தொழிலில் சிறப்புகள் வந்து சேர லாம், பணப்புழக்கம் அதிகரிக்கும், வாய்ப்புகள் தேடி வரலாம், வாகன மேன்மையுண்டு, சிலர் கௌரவக் குறைவாக நடந்து கொள்ளலாம்.

**தனுசு** — மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியம் சீராக ஆகாரத்தில் கட்டுப்பாடு தேவை, தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், ஆழ்ந்த சிந்தையுண்டு.

**மகரம்** — வீட்டை அழகுபடுத்துவதில் அக் கறை காட்டுவீர்கள், அதிக அலைச் சல்கள் ஏற்படலாம், தேவையற்ற மனஸ்தாபங்கள் ஏற்படலாம், பிதா சிந்தையுண்டு, செலவுகளில் தாரா ளம் காட்டுவீர்கள்.

**கும்பம்** — தித்திக்கும் செய்திகள் வந்து சேர லாம், பொதுவாழ்வில் பாராட்டும் புகழும் கூடும், காரியங்கள் கைகூ டும், பொருளாதார நிலையில் முன் னேற்றம் பெறுவீர்கள், கௌரவ மான நாள்.

**மீனம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்ப வங்கள் இடம்பெறலாம், கடின உழைப்பால் முன்னேற்றம் பெற முயற்சிப்பீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், விருந்துகளில் கல ந்து மகிழும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் இருந்து NDB வெளியேற்றம்

மாலைதீவுகளின் மாலைதீவு ஃபினான்ஸ் லீசிங் கம்பனியின் 35 வீதமான பங்குகளை தன்வசம கொண்டிருந்த தேசிய அபிவிருத்தி வங்கி(NDB), தனது பங்குகளை 1.1 மில்லியன் அமெரிக்க டொலர் களுக்கு ட்ரீ டொப் இன் வெஸ்ட்மன்ட் பிரைவேற் லிமிடெட் நிறுவனத்துக்கு கைமாற்றியுள்ளதாக அறிவித்துள்ளது.

இதனடிப்படையில் 21.1 மில் லியன் ரூபா வரை நட்டமடைந் துள்ளதாக கொழும்பு பங்குப்பரி வர்த்தனையில் மேற்கொண் டிருந்த பதிவில் குறிப்பிட்டுள்ளது.

DFCC வங்கியுடன் ஒன்றிணை வது தொடர்பில் NDB பேச்சுவார்த் தைகளை முன்னெடுத்து வருகின் றமை குறிப்பிடத்தக்கது.

# பொருளாதார அபிவிருத்தியில் இலங்கை முன்னோடியாக திகழும் – உலக வங்கி

தெற்காசிய பிராந்தியத்தில் பொருளாதார அபிவிருத்தியில் இல ங்கை முன்னோடியாக திகழும் என உலக வங்கி அறிவித்துள்ளது. நடப்பு ஆண்டில் 7.3 வீத பொரு ளாதார அபிவிருத்தியை இலங்கை பதிவு செய்யும் எனவும், இதில் நாட்டில் மேற்கொள்ளப்பட்டுவரும் உட்கட்டமைப்பு தொடர்பிலான முதலீடுகள் மற்றும் மறுசீரமைப்பு நடவடிக்கைகள் பெருமளவு பங் களிப்பை செலுத்தும் எனவும் உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

தெற்காசிய பிராந்தியத்துக்கான பொருளாதார எதிர்வுகூறல் 5.2 வீதமாக அமைந்துள்ள நிலையில், இந்தியா 5.7 வீதம், பாகிஸ்தான் 4 வீதம், நேபாளம் மற்றும் மாலை தீவுகள் 4.5 வீதம், பங்களாதேஷ் 5.4 வீதம் மற்றும் ஆப்கானிஸ்தான 3.2 வீத அதிகரிப்பு ஆகியவற்றை பதிவு செய்யும் என அறிவித்துள் ளது.

ஆனாலும் இலங்கை மின்சார சபை மற்றும் இலங்கை பெற் றோலிய கூட்டுத்தாபனம் போன்ற பெருமளவு நிதி நெருக்கடியை எதிர்நோக்கியுள்ள அரச தாபனங் களை மறுசீரமைப்பு செய்வது குறி த்து கவனம் செலுத்துவது உகந்தது எனவும் குறிப்பிட்டுள்ளது.

# ஆசியாவுக்கு முக்கியத்துவம்

அமெரிக்க அதிபர் ஒபாமா அடு த்த வாரம் ஆசிய நாடுக ளுக்கு வர உள்ளார். 'அடுத்த 5 ஆண்டு களில் அமெரிக்காவில் உள்ள பாதி பேர் ஆசிய நாடுகளை சேர்ந்தவர்களாக இருப்பார்கள். எனவே, ஆசிய நாடுகளுடனான பொருளாதார உறவுக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும். எனவே ஆசிய நாடுகளுக்கு அடு த்த வாரம் வருகைதர உள்ள ஒபாமா இங்குள்ள சந்தை வாய்ப்பு கள் குறித்த விஷயங்களில் அதிக கவனம் செலுத்தலாம் என்று அமெ ரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சூசன் ரைஸ் தெரிவித்துள்ளார்.

# நிதிக் கம்பனிகள் வழங்கும் வட்டி வீதத்தில் திருத்தம்

நிதித்தொழில் சட்டத்தின் கீழ் மத்திய வங்கியினால் உரிமம் வழங்கப்பட்ட நிதிக் கம்பனிகளி னால் ஏற்கப்படும் வைப்புக்களுக்கு வழங்கப்பட வேண்டிய வட்டி வீதங்கள் தொடர்பில் புதிய திருத் தத்தை இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் 2014 ஏப்ரல் மாதம் முதலாம் திகதி முதல் அமு லுக்கு வரும் வகையில் ஏற்கப்பட்ட அல்லது பேணப்பட்ட சேமிப்பு வைப்புக்களுக்கு செலுத்தக்கூடிய ஆகக்கூடிய ஆண்டு வட்டி வீதம் 7.58 சதவீதமும் ஏற்கப்பட்ட அல் லது புதுப்பிக்கப்பட்ட வைப்புகளு க்கு செலுத்தக்கூடிய ஆகக்கூடிய வட்டி வீதங்களாக ஒரு ஆண்டு கால அல்லது அதற்கு குறைவான முதிர்ச்சிக்கான ஆண்டு வட்டி வீதம் 11.01 சதவீதமாகவும் ஒரு ஆண்டுக்கு கூடிய மற்றும் 3 ஆண்டுகள் வரை யான முதிர்ச்சிக்கான ஆண்டு வட்டி வீதம 12.01 சதவீதமாகவும் 3 ஆண்டு காலத்திற்கு அதிகமான முதிர்ச்சிக்கான ஆண்டு வட்டி வீதம் 13.51 சத வீதமாகவும் திருத் தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி அறிவித்துள்ளது.

அத்துடன் 55 வயதை கடந்த சிரேஷ்ட பிரஜையினால் வைக் கப்படும் சேமிப்பு அல்லது நிலை யான வைப்பிற்கு மேற்குறிப்பிட்ட வட்டி வீதங்களுக்கு மேலதிகமாக ஒரு சத வீதத்தை வழங்க முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.




# ஒடெல் காணி கொள்வனவு

கொழும்பு 7 பகுதியில் காணப்படும் ஒடேல் காட்சியறைக்கு அரு காமையில் காணப்படும் காணியை சுமார் 800 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்துள்ளதாக ஒடேல் நிறுவனம் அறிவித்துள்ளது.

இந்த காணிப் பகுதியில் கொழும்பின் அதிநவீன ஷொப்பிங் நிலைய மொன்று நிறுவப்படுமென ஒடேல் அறிவித்துள்ளது. இந்த காணியின் அளவு குறித்த விபரங்கள் வெளியிடப்படாத நிலையில் 17, 17/1, 17/1A, 19, 19A ஆகிய இலக்கங்களை உள்ளடக்கிய கலாநிதி சி.டபிள்யு. டபிள்யு கன்னங்கர மாவத்தை, கொழும்பு 7 எனும் முகவரிகளை கொண்ட காணியை கொள்வனவு செய்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# ஐரோப்பிய கடன் திட்டத்தில் இணைந்தது கொமர்ஷல் வங்கி

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் (SMEs), சக்திவள ஆற்றல், மீள் சக்தி துறை ஆகிய பிரிவுகளுக்கு நிதி உதவிகளை வழங்கும் வகையில் கொமர்ஷல் வங்கி ஐரோப்பிய முதலீட்டு வங்கி (EIB) உடன் உடன்படிக்கை ஒன் றை செய்துள்ளது.

இலங்கை அரசுக்கு வழங்கபபட் டுள்ள EIB SME பசுமை சக்தி கடன திட்டத்தின் கீழ் இந்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டுள்ளது.

SME நிதி உதவிக்கான ஆகக் குறைந்த திட்டத்தின் பெறுமதி சக்திவள ஆற்றல் மற்றும் மீள் சக்தி ஆற்றல் பிரிவில் ரூ.18 மில்லியன் முதல் 90 மில்லியன் ரூபாவாக இரு க்க வேண்டும் என வங்கி அறி வித்துள்ளது.

இந்த கடன் திட்டத்தின் கீழ் மேற்படி பெறுமதிக்குரிய திட்டத் தில் 50% வரை கடனாகப் பெற்றுக் கொள்ள முடியும். மேலும் இக் கட னைப் பெற்றுக் கொள்பவர்கள் நீண்டகால அடிப்படையில் மீளச் செலுத்துவதற்கான வசதியையும் பெற்றுக் கொள்ள முடியும். அத்தோடு இதற்கான கவர்ச்சிமிக்க வட்டி வீதம வருடமொன்றுக்கு 8% மாக இருக்கும்.

தொழிற்சாலை நிர்மாணம், தற்போதைய தொழிற்சாலைகளின அல்லது வர்த்தக கட்டிடங்களின் புன்ர் நிர்மாணம், தொழிற்பாடு மூலதனத்தின் அதிகரிப்பு ஆகிய பிரிவுகள் கடன் பெறுவதற்கான பிர தான பிரிவுகளாக கருத்திற் கொள் ளப்படும்.

"தேசிய பொருளாதாரத்துக்கு மிகவும் அத்தியாவசியமானவை எனக் கருதப்படும் பிரிவுகளே இந் தக் கடன் திட்டத்துக்கான பிரதான பிரிவுகளாக எடுத்துக் கொள்ளப் பட்டுள்ளன. எனவே இந்தக் கடன் திட்டத்தில் பங்கேற்பதில் நாம் மிக்க மகிழ்ச்சி அடைகின்றோம்" என்று கூறினார் வங்கியின் முகா மைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ரவி டயஸ்.

# நிதி சேவையில் நுழைகிறது வால்மாட்

உலகில் சில்லறை வர்த்தகத் தில் முன்னணியில் வால்மார்ட் நிறுவனம் நிதி சேவையில் இற ங்குகிறது. இதன்படி, பண மாற்ற வர்த்தகத்தில்வரும் 24-ம்தேதி முதல இந்த நிறுவனம் ஈடுபட உள்ளது.

இந்த அறிவிப்பை அடுத்து பண பரிமாற்ற சேவையில் ஈடு பட்டுள்ள வெஸ்டர்ன் யூனியன், மணி கிராம் நிறுவன பங்குகள் மதிப்பு திடீரெனச் சரிந்தன.

# மைக்ரோ சொப்ட்- நோக்கியா ஒப்பந்தம்

தனது மொபைல் சாதனங் களை விற்பனை செய்வதற்காக வும், வர்த்தக சேவையை விரிவு படுத்துவதற்காகவும் மைக்ரோ சொப்ட் நிறுவனத்துடன் புதிய வர்த்தக ஒப்பந்தம் ஒன்றை மேற் கொள்ள நோக்கியா நிறுவனம் முடிவு செய்துள்ளது. 7.2 பில்லி யன் டொலர்களுக்கு மேற்கொள் ளப்பட உள்ள இந்த ஒப்பந்தம் இம் மாத இறுதியில் இறுதி செய்யப்பட வுள்ளது.

# லாண்ட் ரோவர் திரும்ப பெறுகிறது ஜாக்குவார்

ஆடம்பர கார்கள் தயாரிப்பில் முன்னணி நிறுவனங்களில் ஒன் றான ஜாகுவார், தனது 2013 மே 7-ம் தேதி முதல் அக்டோபர் 10-ம் திகதி இடையே தயாரித்த லேண்ட் ரோவர் கார்கள் சிலவற்றில் இன்டி கேட்டர் மற்றும் எச்சரிக்கை விளக குகள் சாப்ட்வேர் மேம்படுத்தப்ப டாததால் சரியாக வேலை செய்ய வில்லை என்று தெரியவந்தது. இதையடுத்து சீனாவில் இறக்கு மதி செய்யப்பட்ட 1,923 கார்களை இந்த நிறுவனம் திரும்ப பெறுவ தாக அறிவித்துள்ளது.

# அந்நிய முதலீடு சீனாவில் திடீர் சரிவு

சீனாவில் அந்நிய நேரடி முத லீடு கடந்த மார்ச் மாதத்தில் 1.47 சதவீதம் சரிந்து சுமார் 150,500 கோடியாக உள்ளது. இந்நாட்டு பொரு ளாதாரத்தில் பின்னடைவு ஏற்ப டுவதற்கான அறிகுறிகள் காரண மாக இந்த நிலை ஏற்பட்டுள்ளது. ஆனாலும் கடந்த நிதியாண்டின் முதல் காலாண்டில் அந்நிய நேரடி முதலீடு 5.5 சதவீதம் அதிகரித்தி ருந்தது. அந்நிய முதலீடு சரிவால் பெரிய பாதிப்பு இல்லை என சீன வர்த் தக அமைச்சகம் கூறியுள்ளது

# கடந்த வாரம் பங்குச்சந்தை

புதுவருட விடுமுறை மற்றும் பெரிய வெள்ளி பொது விடுமுறை காரணமாக, கடந்த வார பங்குச சந்தை நடவடிக்கைகள் 2 நாட் களுக்கு மட்டுமே இடம்பெற்றிருந் தது. பங்குச்சந்தை கொடுக்கல் வாங்கல்கள் தொடர்ந்தும் உயர் வான பெறுமதிகளை கடந்த வாரம பதிவு செய்திருந்தது. வெளிநாட்ட வர்கள் பங்குகள் கொள்வனவில் அதிகளவு ஈடுபாட்டை வெளிப் படுத்தியிருந்தனர். வியாழக்கிழமை நடவடிக்கைகள் நிறைவடைந்த போது அனைத்து பங்கு விலைச் சுட் டெண் 6,180.76 ஆகவும் S&P சிறிலங்கா 20 சுட்டி 3388.02 ஆகவும் பதிவாகியிருந்தன.

16-ம் திகதியுடன் ஆரம்பமான கடந்த வாரத்தின் இறுதியில் மொத்த பங்கு புரள்வு பெறுமதியாக ரூ. 1, 409,250,936 அமைந்திருந்தது. கடந்த வாரம் மொத்தம் 9,742 பங்கு கொடுக்கல்வாங்கல்கள் இடம்பெற்றன.

கடந்த புதன்கிழமை கார்கில்ஸ், புக்கிட் தாரா மற்றும் சிலோன் டீ சேர்விசஸ் ஆகிய பங்குகளின் விலைகள் உயர்ந்திருந்தன. வங் கிகளின் பங்குகள் மீது உயர் பெறு மதி வாய்ந்த பெறுபேறுகள் பதிவா கியிருந்தன.

அடுத்த நாள் வியாழக்கிழமை பிரதான சுட்டிகள் நேர்பெறுமதியை பதிவு செய்திருந்தன. புத்தாண்டை தொடர்ந்து நேர்த்தியான பெறு பேறுகள் சந்தையில் தொடர்ந்தி ருந்தது. புரள்வு பெறுமதி 600 மில் லியன் ரூபாவை கடந்திருந்தது. வங்கித்துறையை சேர்ந்த பங்கு கள்மீதான உயர்ந்த பெறுமதி அதிகளவு பங்களிப்பை வழங்கியிருந்தன.

கடந்த வார கொடுக்கல் வாங்கல் நடவடிக்கைகளில் சிலோன் பிரின் டர்ஸ், ஏஜஏ இன்சூரன்ஸ், ஷலிமர், ஜி.எஸ்.ஃபினான்ஸ் மற்றும் மேர்க். சிப்பிங் போன்றன முதல் 5 சிறந்த இலாபமீட்டிய பட்டி யலிடப்பட்ட கம்பனிகளாக பதிவாகியிருந்தன.

பீசி ஹவுஸ், பன்செய் றிசோர் ட்ஸ், சிஜஎஃவ்எல், டெஸ் அக்ரோ [illegible] போன்ற நிறுவனங் களின் பங்குகள் அதிகளவு நஷ்ட மீட்டியதாக பதிவாகியிருந்தன.

# அரச உதவி இன்றி துறைமுக நகர திட்டம்

அரசாங்கத்தின் நிதி உதவிகள் எதுவும் அற்ற நிலையில் உத்தேச புதிய துறைமுக நகர திட்டம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசு மேற்கொண்டுள்ள ஒப்பந்தத்திற்கு அமைய சீன நிறுவனம், இந்த திட்டத்திற்கான முதலீட்டை வழங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்திற்கான முதல் கட்ட செலவினமாக சீன நிறுவனம் 134 கோடி அமெரிக்க டொலர்களை வழங்கும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

உத்தேச திட்டத்தின் கீழ் 234 ஹெக்டயர் விஸ்தீரண காணியில், சீன நிறுவனத்திற்கு 108 ஹெக்டயர் விஸ்தீரணமான கடற் பிரதேசம் [illegible] அகலமாக்கல் நடவடிக்கைகளுக்காக் சீன நிறுவனத்திற்கு [illegible].

இந்த குறிப்பிட்ட நிலப்பரப்பு 99 வருட குத்தகை அடிப்படையில் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு நாணயமாற்று வீதம்

(வார இறுதியில்)

| நாணயம் | கொ/வு விலை ரூபா. | வி/னை விலை ரூபா. |
|---|---|---|
| ஐக்கிய அமெரிக்க டொலர் | 129.14 | 132.02 |
| பவுண்ட்(ஐக்கிய இராச்சியம்) | 216.67 | 222.87 |
| யூரோ (ஐரோ.ஒன்றியம்) | 177.70 | 183.51 |
| சுவிஸ் பிராங் | 145.68 | 151.04 |
| கனேடிய டொலர் | 116.72 | 120.67 |
| அவுஸ்திரேலிய டொலர் | 120.14 | 124.67 |
| சிங்கப்பூர் டொலர் | 102.76 | 106.13 |
| ஜப்பான் யென் | 1.26 | 1.30 |
| இந்திய ரூபாய் | சுட்டி விலை 2.16 | |
| ஐக். அரபு இராச்சிய டிராம் | சுட்டி விலை 35.55 | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# யாழ்.இ.போ.சாலைகளுக்கு புதிய பேருந்துகள் வழங்கப்படும்





(யாழ்ப்பாணம்)

இலங்கை போக்குவரத்துச் சபை ஊடாக யாழில் உள்ள சாலைகளுக்கு புதிய பேருந்துகளை வழங்கவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கோண்டாவில் வட பிராந்திய தலைமைக் காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் பேருந்து சாரதிகள் மற்றும் நடத்துநர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் விசேட செயலமர்வுகள் மற்றும் பயிற்சி வகுப்புக்களை நடத்தவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மேலும் யாழ். சாலையின் வருவாயை அதிகரிக்கவும் அதனூடாக சாலை ஊழியர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் செயற்றிட்டங்களை முன்னெடுக்கவுள்ளோம்.

அத்துடன் யாழ்ப்பாணம், காரைநகர், பருத்தித்துறை ஆகிய சாலைகளுக்கு புதிய பேருந்துகள் வழங்கப்படவுள்ளன.

மேலும் யாழ். சாலையின் தொழிற்றுறை சார்ந்த நடவடிக்கைகள் ஏனைய சாலைகளுக்கு மட்டுமன்றி ஏனைய மாவட்டங்களின் சாலைகளுக்கும் முன்மாதிரியாக இருக்க வேண்டும்.

அத்துடன் சேவைகளில் ஈடுபடும் ஒவ்வொரு பேருந்துகளும் சிறந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

தொடர்ந்து ஒவ்வொரு உத்தியோகத்தர்களின் தேவைகள், கோரிக்கைகள் தொடர்பிலும் அமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

இறுதியாக யாழ். சாலை ஊழியர் சங்கத்தினர் அமைச்சருக்கு நினைவுச் சின்னம் ஒன்றை வழங்கி கௌரவித்தனர். (அ-23)

# குடும்பஸ்தரை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

குடும்பஸ்தரொருவரினை காணவில்லையென யாழ். பொலிஸ் நிலையத்தில் உறவினர் களால் முறைப்பாடு செய்யப் பட்டுள்ளது.

யாழ்.செட்டித்தெருவினைச் சேர்ந்த சிற்றம்பலம் சிவராசா (வயது-51) என்பவரை காணவில்லையென்றே முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த குடும்பஸ்தர் கடந்த 11 ஆம் திகதி வீட்டிலிருந்து சென்றதாகவும் அதன் பின்னர் வீட்டிற்கு திரும்பவில்லையென முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக யாழ். பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

# இயக்குநர் சபை தேர்தல் முடிவு

(நல்லூர்)

வலி.கிழக்கு ப.நோ.கூ.சங்கத்தின் (அச்சுவேலி) வருடாந்த பொதுக்கூட்டமும், இயக்குநர் சபை தேர்தலும் நேற்று ஞாயிற்றுக்கிழமை சங்கத்தின் உபதலைவர் வ.திருஞானசம்பந்தன் தலைமையில் நடைபெற்றது.

இயக்குநர் சபை தேர்தலின் முடிவில் தலைவராக இ.சந்திரன், உப தலைவராக இ.தாமரைச்செல்வம் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த 30 ஆண்டுகளாக போட்டிகள் எதுவுமின்றி நடைபெற்ற இவ் இயக்குநர் சபைத் தேர்தலில் இம்முறை 14 போட்டியாளர்கள் பங்கு கொண்டனர்.இதில் 5 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (அ-134)

# யாழ். எம்.பிக்களின் எண்ணிக்கையில் மாற்றம் ஏற்படுத்தப்படாது

## தேர்தல் திணைக்களம் தெரிவிப்பு

எதிர்வரும் நாடாளுமன்ற தேர்தலின் போது யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து தெரிவாகும் உறுப்பினர்களின் எண்ணிக்கையில் குறைவு ஏற்படும் என்று வெளியான தகவல்களில் உண்மையில்லை என்று தேர்தல்கள் திணைக்கள உதவி ஆணையாளர் எம்.எம். மொஹமட் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே வெளியான தகவல் களின்படி யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 9 இல் இருந்து 6ஆக குறைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் இதனை மறுத்த மொஹமட், வவுனியா, நுவரெலியா, மாத்தறை மற்றும் குருநாகல் ஆகிய மாவட்டங்களிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்படவுள்ளதாக கூறினார்.

இதன்படி, வவுனியாவிலும் நுவரெலியாவிலும் ஒரு நாடாளுமன்ற ஆசனம் அதிகரிக்கப்படவுள்ளது.

அதேநேரம் மாத்தறை மற்றும் குருநாகல் மாவட்டங்களில் இருந்து தலா ஒரு ஆசனம் குறைக்கப்படவுள்ளது.

சனத்தொகை சுட்டியின் அடிப்படையிலேயே இந்த மாற்றங்கள் நிகழவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மீட்டல் வகுப்புக்கள்

(யாழ்ப்பாணம்)

நூலக தகவல் விஞ்ஞான டிப்ளோமா கற்கைநெறி தரம்3 (2013/2014) இற்கான மீட்டல் வகுப்புக்கள் எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை, மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஆகிய நாட்களில் யாழ்.பல் கலைக் கழகத்தில் நடைபெறவுள்ளதாக யாழ்.நிலைய ஒருங்கிணைப்பாளர் திருமதி.கல்பனா சந்திரசேகர் அறிவித்துள்ளார்.

மேற்படி கற்கை நெறிக்கான பரீட்சைகள் எதிர்வரும் மே மாதம் 10 ஆம், 11 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளதாகவும் இப்பரீட்சைக்கு தோற்றவிருக்கும் அனைத்து மாணவர்களையும் தவறாது [illegible] கேட்டுள்ளார். (அ)


## உங்களுக்கான வேலைவாய்ப்பு

இலங்கையில் துரிதமாக வளர்ந்துவரும் நிதி நிறுவனத்திற்கு வைப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கான உத்தியோகத்தர்களுக்கு பிராந்திய ரீதியாக வெற்றிடங்கள் உள்ளன.

**விண்ணப்பிக்க தகுதியானவர்கள்**

- O/L சித்திபெற்ற 18 வயதிற்கு மேற்பட்டவர்கள்
- அரச, தனியார் சேவையில் உள்ளவர்கள் அல்லது ஓய்வு பெற்றவர்கள்.
- சந்தைப்படுத்தல் or காப்புறுதித் துறையில் அனுபவம் உள்ளவர்கள்.
- சுயமாக முன்னேற ஆர்வம் உள்ளவர்கள்.

**அனுகூலங்கள்**

- தங்களுடைய வசதிக்கேற்ப எங்கேயும் எந்நேரத்திலும் சேவையாற்றக் கூடிய வாய்ப்பு.
- மாதாந்த உதவிப்படியுடன் கூடிய தனிப்பட்ட திறமைக்கேற்ற ஊதியம்.
- மாதாந்த போட்டிகளுக்கான மேலதிக கொடுப்பனவுகள்.
- வட்டியில்லா வாகன மற்றும் Laptop கடன் வசதிகள்.
- தனிப்பட்ட திறமைகளை வளர்ப்பதற்கான சுற்றுலாவுடன் கூடிய பயிற்சிகள்.
- காப்புறுதித் துறையில் அனுபவம் உள்ளவர்களுக்கு மேலதிக கொடுப்பனவுகள்.
- இன்னும் பல அரிய வாய்ப்புக்கள்.

**உங்கள் விண்ணப்பங்களை....**

- சுயவிபரக் கோவை.
- கல்வி சான்றிதழ்களின் பிரதி
- பிறப்பு அத்தாட்சி பத்திர பிரதி.
- காப்புறுதித் துறையில் அனுபவம் உள்ளவர்களாயின் அனுமதிப்பத்திரத்தின் (IBSL) பிரதி.

என்பவற்றை கீழ்வரும் முகவரிக்கு 02.05.2014 ஆம் திகதிக்கு முன்பு அனுப்பி வைக்கவும்.

விளம்பர இல. 6183 , இல. 3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் ரோட், யாழ்ப்பாணம். (6183)



## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1976 இந்து<br>நட்சத்திரம்: திருவாதிரை 2<br>கி.பா: 22 சூரி செவ் 11 இல்<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: Dip. / Computer Application Assistant<br>எதிர்பார்ப்பு: சைவபோசனம் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/558 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 3<br>கி.பா: 38.25<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: பட்டதாரி / ஆசிரியர்<br>தொ.இ: G/1903 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 27.5 செவ் 2 இல்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: O/L, கனடாவில் உயர் கல்வி / தொழிற்சாலை வேலை (கனடா PR)<br>தொ.இ: B/1336 | பிறப்பு: 1978 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 30.75 செவ் 4 இல்<br>உயரம்: 115 cm<br>தகைமை/தொழில்: A/L / ஆசிரியர்<br>தொ.இ: G/1905 |
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: விசாகம் 4<br>கி.பா: 26.25 உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்: MSc / மென்பொருள் பொறியியலாளர்<br>தொ.இ: B/1337 | பிறப்பு: 1981 இந்து<br>நட்சத்திரம்: உத்தரம் 4<br>கி.பா: 63 செவ் 1 இல்<br>உயரம்: 5'3"<br>தகைமை/தொழில்: HNDM / காசாளர்<br>தொ.இ: G/1909 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 1<br>கி.பா: 9 உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: கல்வியியற்கல்லூரி, BA / ஆசிரியர்<br>தொ.இ: B/1338 | பிறப்பு: 1982 கிறிஸ்தவம்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: HNDA, B.Com, M. Com / Account Assistant<br>தொ.இ: G/1914 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
[illegible] எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 50 | 35 | 40 |
| உருளைக்கிழங்கு | 100 | 110 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 80 | 60 | 80 | 100 |
| தக்காளி | 40 | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 40 | 40 |
| கோவா | 30 | 20 | 30 | 40 |
| கரட் | 100 | 100 | 90 | 120 |
| பூசணி | 20 | 30 | 40 | 40 |
| புடோல் | 50 | 50 | 60 | 50 |
| வாழைக்காய் | 30 | 40 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 90 | 80 | 80-120 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 80 | 90 |
| பாகற்காய் | 100 | 120 | 90 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 60 | 60 | 50 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | 50 | 60 |
| பயற்றங்காய் | 40 | 60 | 70 | 40 |
| லீக்ஸ் | 60 | 80 | 80 | 100 |
| பீற்றூட் | 50 | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | — | 60 | 70 | 80 |
| முருங்கைக்காய் | 40-60 | 80 | 90 | 120 |
| போஞ்சி | 100 | 140 | 130 | 120 |
| கத்தரிதம்புள்ள | 20 | 40 | 40 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 | 25 |
| தேசிக்காய் | 90 | 120 | 100 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 40 | 40 | 30-40 |
| இராசவள்ளி | 80 | 100 | 110 | 80 |

# தீவகப்பகுதி மக்களின் பாதுகாப்பு விடயத்தில் கவனம் செலுத்துங்கள்

## வ.மா.சபை உறுப்பினர் விந்தன் வலியுறுத்து

அபிவிருத்திக்கு அப்பால் தீவக மக்களின் பாதுகாப்பு விடயத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது என வடக்கு மாகாண சபை ஆளும்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் தெரிவித்துள்ளார்.

புதுவருடப்பிறப்பை முன்னிட்டு அன்றையதினம் இரவு புங்குடு தீவு சிவலைப்பிட்டி சனசமூக நிலையத்தின் தீவுப்பகுதி வீரர்களுக்கான 54ஆவது ஆண்டு விழாவும், 32 ஆவது விளையாட்டு விழாவும் அம்பாள் விளையாட்டுக் கழகத்தின் 11ஆவது விளையாட்டு விழாவும் நடைபெற்றது. இந்நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த2013ஆம் ஆண்டு நடந்த வடக்கு மாகாணசபை தேர்தலில் நாம் இப்பகுதிக்கு தேர்தல் பிரசாரத்துக்காக வந்தபொழுது, இவ் ஆலய முனறலிலே குழுமி நின்ற மக்கள் எமக்கு பேராதரவினைத் தந்தார்கள்.

பல்வேறு சவால்களை எதிர் கொண்ட தீவக மக்கள் பேரெழுச்சி கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய எமக்கு கிட்டத்தட்ட ஒன்பதினாயிரம் வாக்குகளை அளித்திருந்தார்கள். இவ்வாக்குகளின் ஊடாக யாழ். தீவுப்பகுதியிலிருந்து வடக்கு மாகாண சபைக்கு நானும் ஒரு உறுப்பினராக தேர்ந்தெடுக்கபட்டிருக்கின்றேன். தீவகத்தைப பொறுத்தவரையிலே கல்வி, விளையாட்டுத்துறை என்பன பின்தங்கிய நிலையிலே காணப்படுகின்றது.

எதிர்காலத்தில் இப்பகுதியில் கல்வியும், விளையாட்டுத் துறையும் மேலோங்க வேண்டும் அத்தோடு, காடு பற்றியது போல் காட்சியளிக்கும் எமது தீவகப் பிரதேசமும் அபிவிருத்தியடைய வேண்டும். இவற்றுக்காக நாம் மாகாண சபையின் ஊடாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஊடாகவும் எதிர் காலத்தில் பங்காற்ற வேண்டியிருக்கும்.. அபிவி ருத்திக்கு அப்பால் தீவக மககளின்பாதுகாப்பு விடயத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவனம் செலுத்த வேண்டியிருக்கின்றது.

தீவுப்பகுதியில் பல வீதிகளை கடந்த 30 வருடங்களாக பார்க்கின்றேன். அவை இன்றுவரை குன்றும் குழியுமாகத்தான் காட்சியளிக்கின்றன. அவற்றில் சிலவற்றை மாகாணசபை புனரமைக்கவுள்ளது என அவர் மேலும் தெரிவிததார். (அ-6)

# யுத்தத்தின் வலியையும் தாண்டி மக்கள் உறுதியுடன் வாழ்கின்றனர்

## விஞ்ஞானி சி.சிவானந்தன் பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

கடந்த முப்பது வருட யுத்தம், அது தந்துள்ள வலி என்பவற்றினை தாண்டி எமது மக்கள் உறுதியுடன் இருக்கிறார்கள். முப்பத்திரண்டு ஆண்டுகள் கழித்து நான் இங்கு வரும் போது சந்தேகத்துடனேயே வந்தேன். "மக்களின் மனநிலை எவ்வாறிருக்கும்?", மனதளவில் அவர்கள் உடைந்திருப்பார்களா? என்று சிந்தித்துக் கொண்டே வந்தேன். ஆனால் இங்கே வந்து பார்த்தபோது என்னால் நம்பமுடியவில்லை. மக்கள் எம்மால் முடியும் என்ற வைராக்கியத்தோடு பேசுவதை பார்க்கும போது மகிழ்ச்சியாக இருக்கின்றதென அமெரிக்காவின் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான மாற்றத்திற்கான சாதனையாளன் விருதைக கடந்த வருடம் பெற்றிருந்த ஈழத்து விஞ்ஞானியும் பேராசிரியருமான சிவலிங்கம் சிவானந்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்.கிறீன் கிராஸ் விருந்தினர் விடுதியில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்றைய இளைஞர்களால் எதையும் சாதிக்க முடியுமென்ற எண்ணம் உள்ளதை நான் இங்கு உணர்ந்து கொண்டேன்.

தற்போதைய இளம் சமுதாயத்தினர் எங்களால் இது முடியுமென்று நினைத்து பல வேலைத்திட்டங்களை முன்னெடுக்கின்றனர். இதற்கு உங்களால்முடியு மென்று பெற்றோர்களும் ஊக்கப்படுத்த வேண்டும்.

மேலும் சூரிய சக்தியை பயன் படுத்தி யாழ்ப்பாணத்தில் பொருளாதாரத்தை உயர்த்துவதற்கான செயற்றிட்டத்தை முன்னெடுப்பதற்கு பல்கலைக்கழக மாணவர்களுக்கு பயிற்சிப்பட்டறை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் சூரியகல மின் சக்தியினூடாக இங்கு பொருளாதாரத்தை உறுதியாக உயர்த்த முடியும்.

எவ்வேலையையும் காசுக்காக நாம் செய்ய வேண்டுமென்று பிள்ளைகளுக்கு கூற வேண்டும். வைத்தியராகவும் பொறியிலாளராகவும் பிள்ளைகளை படிக்க வைக்க பெற்றோர் நினைக்கின்றனர். பெற்றோரின் எண்ணப்படியல்லாது பிள்ளைகள் என்ன படிக்க நினைக்கின்றனரோ அதற்கே விட வேண்டும். அதற்கான உந்துசக்தியை பெற்றோர் வழங்க வேண்டும்.

எப்போதும் எதையாவது செய்ய முயலவேண்டும் அவற்றின் மூலம் தேவைப்பாடுகளை பூரணப்படுத்த நினைக்க வேண்டும்.

சூற்றுச் சூழலை பார்த்து அவற்றில் என்ன விடயங்கள் உள்ளனவெனக் கண்டுபிடிக்க வேண்டும்.

இன்றுசெய்யவேண்டியசெயல்களை இன்றே செய்ய வேண்டும். நாளை செய்கிறேன் எனக் கூறக் கூடாதென்பதுடன் எவருடைய முயற்சிகளையும் மழுங்கடிக்கவும் கூடாது.

எத்ர்காலத்தில் மாணவர்கள் மத்தியில் அறிவியல் தொழில் நுட்பத்தை, அறிவை மேம்படுத்துவதற்காக விசேட பாடநெறி வட மாகாணத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

அப்பாடநெறி பல்கலைக்கழகங்களினூடாக செயற்படுத்தப்பட்டுள்ளது என்றார். (அ-6)

# அமைச்சர் றிஷாத்துக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யுங்கள்

## ஹெல உறுமய உறுமல்

அமைச்சர் றிசாத் பதியூதீன் சட்டவிரோதமாக காடுகளை அழித்து மேற்கொண்டு வரும் குடியேற்றங்கள் தொடர்பில் அரசாங்கம் உடனடியாக தலையிட்டு அதனை ஆய்வு செய்து, அதற்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.


தனது துறைக்கு சம்பந்தம் இல்லாத வகையில் சட்டத்தை மீறி முஸ்லிம் மக்களை குடியேற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள அமைச்சர் பதியூதீனுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படாதது ஏன் என அந்த கட்சியின் மேல் மாகாண சபை உறுப்பினர் நிஷாந்த ஸ்ரீவர்ணசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்துடன் மீள்குடியேற்றங்களில் அமைச்சர் பதியூதீன் ஏன் ஈடுபட்டு வருகிறார்.

வேறு தரப்பினர் இதனை மேற்கொண்டாலும் கொழும்பில் வேறு தரப்பினரின் காணிகளை சுவீகரித்தாலும் நிலைமை முற்றாக மாறியிருக்கும்.

வடக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் மக்கள் மட்டுமல்ல, அங்கிருந்து வெளியேற்றப்பட்ட சிங்கள மக்களும் குடியேற்றப்பட வேண்டும்.

மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் மீது உள்ள பயம் காரணமாகவா மன்னாரில் குடியேற்ற வேண்டிய முஸ்லிம்களை, வில்பத்துவில் அமைச்சர் குடியேற்றி வருகிறாரா எனவும் அவர் கேள்வி எழுப்பியுள்ளார். (அ)



ஜப்பான் அரசாங்கத்தின் நிதியுதவியில் அமைக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்டத்தின் கிழக்கு மற்றும் மேற்கு பகுதிகளை இணைக்கும் மண்முனைப் பாலம் நேற்று முன்தினம் மாலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவால் திறந்து வைக்கப்பட்ட போது...

## 384 இலட்சம் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகள் மீட்பு

சட்டவிரோதமான முறையில் 384 இலட்சம் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகளை இந்தியா, சென்னைக்கு கொண்டுச் செல்ல முயன்ற இலங்கையர் ஒருவர் உட்பட இந்தியர் இருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று சுங்கப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலிருந்து யுஎல்121 என்ற விமானத்தில் சென்னை பயணிக்கவிருந்த இலங்கையைச் சேர்ந்த 55 வயதுடைய நபரும், இந்தியாவைச் சேர்ந்த 30,40 வயதுடைய நபர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களிடமிருந்து 48 கிலோ கிராம் நிறையுடைய 384 இலட்சம் ரூபா பெறுமதியான வல்லப்பட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

அதிகூடுதலான பெறுமதியுடைய வல்லப்பட்டைகளை கடத்திய முதல சம்பவம் இதுவே என சுங்க அதிகாரிகள் தெரிவித்தனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணகி வழிபாடு ஒளிப்பட கண்காட்சி

பத்தினி- கண்ணகி வழிபாடு தொடர்பான ஒளிப்படங்களின் கண்காட்சி நாளை செவ்வாய்க்கிழமை தொடக்கம் 26 ஆம் திகதி சனிக்கிழமை வரை காலை 10 மணி தொடக்கம் மாலை 5 மணி வரை யாழ்.பல்கலைக்கழக புதிய கலைப்பீடக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள நுண்கலைத்துறை கலைக்கூடத்தில் நடைபெறவுள்ளது என யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் அ.நா.கிருஷ்ணவேணி அறிவித்துள்ளார்.

கலைவட்டம் மற்றும் நுண்கலைத்துறையின் ஆதரவில் நடைபெறவுள்ள இக் கண்காட்சிகளில் ஒளிப்படவியலாளர் சார்ணி ஜெயவர்தன மற்றும் மானுடவியலாளர் மாலதி டி அல்விஸ் ஆகியோர் இணைந்து நிகழ்த்திய ஆய்வுகள் ஊடாக ஆவணப்படுத்திய ஒளிப்படங்களின் காட்சியே மேற்படி கண்காட்சியில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

இக் காட்சியில் ஆச்சரியப்படவைக்கும் ஒளிப்படங்களும் இலங்கையில் நடைபெறுகிற இதுவரை அறிந்திராத சடங்கு முறைகள் பற்றிய விளக்கங்களையும் பார்க்கலாம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ)







நன்றி-ஜலண்ட்

# வீட்டுத்திட்டத்தின் இறுதிக்கட்ட கொடுப்பனவை பெறமுடியவில்லை

## பாதிக்கப்பட்டோர் விசனம்

வடமராட்சி கிழக்கு உடுத்துறை, ஆழியவளை, வத்திராயன் பகுதியில் உள்ள வீட்டுத்திட்டப் பயனாளிகள் வீட்டுத்திட்டத்தின் இறுதிக்கட்ட பணத்தினை பெற்றுக் கொள்ள முடியவில்லை என விசனம் தெரிவித்துள்ளனர்.

இப் பிரதேச மக்களுக்கு எஸ்.டி.சி. நிறுவனத்தினரால் ரூபா 5 இலட்சத்து 50 ஆயிரம் வீட்டுத் திட்டம் வழங்கப்பட்டு அத் தொகை 6 கட்டங்களாக பிரித்து வழங்கப்பட்ட நிலையில் இறுதிக்கட்ட கொடுப்பனவு இதுவரை வழங்கப்படவில்லை.

இக் கொடுப்பனவை பெறுவதற்கு சட்டபூர்வமான சில ஆவணங்கள் பயனாளிகளினால் பூர்த்தி செய்யப்பட்டு வீட்டின் வரைபடங்கள் என்பவற்றுடன் பருத்தித்துறை பிரதேச சபையில் சமர்ப்பிக்க வேண்டும்.

அதன் பின்னர் பிரதேச சபையினால் சுகாதார நடைமுறைகளுக்காக பருத்தித் துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு அனுப்பி வைக்கப்படும் சுகாதார நடைமுறைகளை ஆராய்ந்த சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை சிபார்சுக் கடிதத்தை பருத்தித்துறை பிரதேசசபையிடம் கையளிக்க வேண்டும். ஆனால் பொதுச் சுகாதார பரிசோதக ர்களின் பணிப் புறக்கணிப்பு காரணமாக வீட் டின் சுகாதார நிலைமைகளை ஆராய்வது நிலைகள் தடைப்பட்டுள்ளது.

இதனால் வீட்டுத்திட்டத்தின் இறுதி கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியவில்லை என சுட்டிக்காட்டப்படுகின்றது. இது தொடர்பாக பருத்தித்துறை பிரதேச செயலர் மற்றும் உப அலுவலகமான மருதங் கேணி பிரதேச சபை பொறுப்பதிகாரிகள் கருத்து தெரிவிக்கும் போது, மக்களால் வழங் கப்பட்ட படிவங்கள் யாவும் பரிசீலிக்கப்பட்டு சுகாதார முறைக்காக சுகாதார வைத்திய அதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதற்கான பதில் தமக்கு கிடைக்கவில்லை என்றனர். மேற்படி வீட்டுத் திட்டத்தை பூர்த்தி செய்வதற்கு பல இலட்சம் ரூபா செலவு செய்ய வேண்டியுள்ளது.

இதனால் வீட்டுத்திட்ட பயனாளிகள் கடனைப் பெற்று வேலைகளை பூர்த்தி செய்து வருகின்றனர். எனவே மேற்படி வீட்டுத் திட்டம் முடிவடையும் நிலையில் இம்மக்களின் கஷ்டத்தை புரிந்து கொண்டு உரிய அதிகாரிகள் இறுதிக் கட்ட கொடுப்பனவை வழங்க முன் வரவேண்டுமென மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-64)

## அலங்கார உற்சவம்

மட்டுவில் மத்தி அருள்மிகு ஞானவைரவர் ஆலய. அலங்கார உற்சவம் கடந்த 15 ஆம் திகதி தொடக்கம் நடைபெற்றுவருகின்றது.

தொடர்ச்சியாக 15 நாட்கள் நடைபெறும் இவ்விழாவில் தினமும் காலை 10.30 மணிக்கு அபிஷேகமும் அதனையடுத்து விஷேட பூஜையும் நடைபெறுகிறது. அத்துடன் சுவாமி உள்வீதி உலா வருவார்.

இறுதிநாளான எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு 108 சங்காபிஷேகம் விசேட பூஜையும் நடைபெறும்.

அன்றைய தினம் மாலை 4 மணிக்கு வசந்த மண்டபம் பூசை நடைபெற்று சுவாமி முத்துச்சபறத்தில் உள்வீதி உலா வரும் காட்சி இடம் பெறும். (அ-2)

## இந்து ஒளி வெளியீடு

அகில இலங்கை இந்துமாமன்ற ஆன்மீக இதழான இந்து ஒளி கடந்த 10 ஆம் திகதி சிவயோக சுவாமிகள் ஐம்பதாவது குருபூசை சிறப்பிதழாக வெளிவந்துள்ளது.

நாற்பத்தைந்து கட்டுரைகளையும், புகைப் படங்களையும் இந்நூல் உள்ளடக்கியுள்ளது.

ரிஷி தொண்டு நாதன், மார்க்கண்டு சுவாமிகள், ஆத்மஜோதி நா.முத்தையா, வைத்திய கலாநிதி ச.முருகானந்தன் மற்றும் தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அசுஞானசம்பந்தன் ஆகியோரின் கட்டுரைகளையும் தாங்கி இந்நூல் வெளிவந்துள்ளது. (அ)

## மின்விளக்குகள் பொருத்தப்பட்டன

(கரணவாய்)

நெல்லியடி பிரதான வீதி இருளடைந்திருந்த நிலையில் நெல்லியடி வர்த்தக சங்கம் இரண்டு பெறுமதி வாய்ந்த மின்விளக்குகளை பொருத்தியுள்ளது.

குறித்த வீதியானது இரண்டுமாத காலமாக மின் விளக்குகள் இன்மையால் இருளடைந்து இருந்தது.

இதனைக் கருத்தில் கொண்ட வர்த்தக சங்கத்தினர் கடந்த புத்தாண்டு தினத்தை முன்னிட்டு பெறுமதி வாய்ந்த மின்விளக்குகளை பொருத்தியுள்ளனர்.

கடந்த காலங்களில் இரவு வேளைகளில் மக்கள் பெரும் அச்சத்துடன் இவ் வீதியால் பயணித்த இந்த நிலையில் இவ்வீதிக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. (அ-60)

# அரியாலை பிரதேச அபிவிருத்திக்கு ஒரு மில்லியன் ரூபா ஒதுக்கீடு

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

அரியாலை மக்களின் மேம்பாட்டுக்காகவும் அப்பகுதியின் அபிவிருத்திக்காகவும் காந்தி சனசமூக நிலையத்தின் ஊடாக சுமார் ஒரு மில்லியன் ரூபாவை வழங்கவுள்ளதாக பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி ,அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்.அரியாலை மேற்கில் அமைந்துள்ள காந்தி சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு நிகழ்வின் மூன்றாவது நாள் நிகழ்வு கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. இதன் போது பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இப் பகுதிக்கும் இப்பகுதியிலுள்ள மக்களுக்கும் எமது க்ட்சியின் ஊடாக பல்வேறு உதவிகளை வழங்கியுள்ளோம்.

இவ்வாறான உதவிகள் பெயருக்காக அல்ல மக்களின் மேம்பாட்டிற்காகவும் இப்பகுதியின் அபிவிருத்திக்காகவுமே வழங்கப்பட்டது.

அத்துடன் எதிர்காலங்களில் மக்களின் வாழ்வாதாரத்தையும் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கும் தொடர்ச்சியாக தமது பங்களிப்பு வழங்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

காந்தி சனசமூக நிலையத்தின் 65 ஆவது ஆண்டு விழாவையொட்டிய நிகழ்வுகள் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகிய நிலையில் தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெற்று நிறைவடைந்துள்ளன.

இதன்போது அமைச்சர் கல்வித்துறையில் சாதித்த மாணவர்களுக்கான பணப்பரிசில்களை வழங்கி வைத்துள்ளார்.

இந்நிகழ்வில் யாழ்.மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (அ-23)



வடமாகாண ஆளுநர் செயலகத்தினால் முன்னெடுக்கப்பட்ட மும்மொழிக்கொள்கை திட்டத்தினூடான வகுப்புக்கள் நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. வகுப்புக்கள் இடம்பெறுவதை படத்தில் காணலாம். (படம்:- என்.குமார்)

# கஞ்சா வைத்திருந்த இளைஞன் கைதானார்

கஞ்சா போதைப்பொருளை விற்பனை செய்தார் என்ற குற்றச்சாட்டில் இளைஞரொருவரை யாழ்.பொலிஸாா கைது செய்துள்ளனர்.

இக் கைது நடவடிக்கை நேற்று முன்தினம் இரவு யாழ்.பிரதான வீதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் கொழும்புத்துறையைச் சேர்ந்த 24 வயதுடைய இள்ளைஞரொருவரே கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த இளைஞ்ன் தன்வசமிருந்த கஞ்சாவினை விற்பனை செய்யும் நோக்குடன் யாழ்.பிரதான வீதியில் நின்று கொண்டிருந்துள்ளார்.

இத் தகவல் யாழ்.பொலிஸாருக்குக் கிடைத்ததையடுத்து குறித்த இடத்திற்கு சிவிலுடையில் சென்ற பொலிஸார் குறித்த இளைஞரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இளைஞரிடம் ஐயாயிரத்து 210 மில்லிகிராம் நிறையுடைய கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் தெரிவித்தனர்.

மேலும் குறித்த நபரிடம் விசாரணை முடிவுற்றதும் இன்று யாழ்.நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக யாழ்.பொலிஸார் தெரிவித்தனர். (அ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பப்புவா நியுகினியில் நில அதிர்வு

இலங்கை உள்ளிட்ட நாடுகளின் அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ள பப்புவா நியுகினி பகுதியில் பாரிய நில அதிர்வு உணரப்பட்டுள்ளது.

அங்குள்ள பங்குனா நகரில் இருந்து 75 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கடற்பரப்பில் இந்த நில அதிர்வு பதிவாகியுள்ளது.

இது 7.5 மெக்னிடியுடன் அளவில் பதிவாகியுள்ளது. இந்த நிலையில் அங்கு ஆழிப் பேரலை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதில் பாதிப்புகள் குறித்த உடனடி தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை. (அ)

## ஹெரோயின் வைத்திருந்த இளைஞன் கைது

கிரான்பாஸ்பகுதியில்ஹெரோயின வைத்திருந்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர். சந்தேக நபரிடமிருந்து 2 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

பேலியகொட பிரதேசத்தைச் சேர்ந்த 29 வயதான இளைஞனே நேற்று முன்தினம் இவ்வாறு கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசா ரணைகளை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர்.

# இலங்கை விடயம் தொடர்பில் ஒத்துழைப்பு வழங்குவேன்

## நிஷாவிடம் கூறினார் எரிக்





இலங்கை விவகாரங்கள் தொடர்பில் தான் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உதவும்படி நோர்வேயின் முன்னாள் அமைச்சரும், அந்நாட்டின் சார்பில் இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக நியமிக்கப்பட்டிருந்தவருமான எரிக் சொல்ஹெய்மை அமெரிக்கா கோரியிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இத்தகவலை அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியப் பிராந்தியத்துக்கான உதவி இராஜாங்கச் செயலாளர் நிஷா தேசாய் பிஸ்வால் வோஷிங்டனில் அண்மையில இடம் பெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போது வெளியிட்டுள்ளார்.

இலங்கை விவகாரம் தொடர்பாக "டுவிட்டர்" மூலம் தாம் எரிக் சொல்ஹெய்முடன் பல தடவைகள் தொடர்பு கொண்டு கருத்துக்களை பரிமாறிக் கொண்டதாக இதன் போது நிஷா தேசாய் பிஸ்வால் தெரிவித்துள்ளார்.

அத்துடன், இலங்கை விவகாரங்கள் தொடர்பில் தனது உதவிகள் தேவைப்பட்டால், தான் அதற்கு முழுமையாக ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாக நிஷா தேசாய் பிஸ்வாலிடம் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்ததாகவும் கூறப்படுகின்றது.


இலங்கை அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு அனுசரணையாளராக நோர்வே இருந்த போது, இவ்விடயங்களைக் கையாள்வதற் காக இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக எரிக் சொல்ஹெய்ம் நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையிலேயே, இலங்கை தொடர்பிலான தன்னுடைய தற்போதைய முயற்சிகளுக்கு எரிக் சொல்ஹெய்மின் அனுபவங்களை அமெரிக்கா பயன்படுத்திக் கொள்ள விரும்புவதாகக் கூறப்படுகின்றது.


இதனிடையில், வோஷிங்டனில் கடந்த 11ஆம் திகதி வெள்ளிக்கிழமை நிஷா தேசாய் பிஸ்வாலுடன் எரிக் சொல்ஹெய்ம் இலங்கை விவகாரங்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இலங்கையில் வாழும் அனைத்து மக்களுக்குமான உரிமைகள் மற்றும் ஜனநாயகத்துக்கு ஆதரவாக அமெரிக்கா செயற்பட்டு வருவதாக இச்சந்திப்புக் குறித்து கருத்து வெளியிட்டிருந்தார் எரிக் சொல்ஹெய்ம்.

அதேவேளை, எரிக் சொல்ஹெமுடனான சந்திப்புக் குறித்து திருப்தி வெளியிட்டுள்ள நிஷா தேசாய் பிஸ்வால், இலங்கையில் வாழும் அனைத்து மக்களின் பாதுகாப்பு, ஜனநாயக உரிமைகள் மற்றும் அம்மக்கள் மீதான அவரின் கரிசனை தன்னை ஈர்த்துக்கொண்டதாக தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (அ)







பருத்தித்துறை யா/ ஹாட்ரிக் கல்லூரியின் வருடாந்த இல்லமெய்வல்லுநர் விளையாட்டுப்போட்டி பாடசாலை அதிபர் என்.தெய்வேந்திரராஜா தலைமையில் நடைபெற்றது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக ஏசியா அசெற் நிதி நிறுவன பிரதிப் பொது முகாமையாளர் எம்.திருநீலகண்டன் உள்ளிட்ட விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் வரவேற்கப்படுவதையும் ஒலிம்பிக் தீபம் ஏற்றப்படுவதையும் பிரதம விருந்தினர் பரிசில் வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:- தும்பளை செய்தியாளர்)

## விளையாட்டுத் தூதுவர்களை அனுப்புகிறது அமெரிக்கா

இலங்கைக்கு இரண்டு விளையாட்டுத் தூதுவர்களை அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் அடுத்த வாரம் அனுப்பி வைக்கவுள்ளது. அமெரிக்காவின் முன்னாள் பெண்கள் தேசிய கூடைப்பந்தாட்ட வீராங்கனைகளான தமிக வில்லியம்ஸ் மற்றும் எட்னா கம்பெல் ஆகியோரே இவ்வாறு அமெரிக்க இராஜாங்கத்திணைக்களத்தினால் சிறப்புத் தூதுவர்களாக இலங்கைக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இவர்கள் நாளை பயணம் மேற் கொள்வர் என்று அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் பேச்சாளர் பணியகம் கடந்த வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. பெண்களுக்கான அதிகாரங்களைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் கலாசார தொடர்பாடல்களை வலுப்படுத்தல் நோக்குடன் இவர்கள் இலங்கையில் கூடைப்பந்தாட்ட நுட்பங்கள் குறித்து பயிற்சிகளை வழங்கவுள்ளனர். இலங் கையில் உள்ளூர் சமூகங்களின் தலைமைத்துவ ஆற்றலைக் கட்டியெழுப்பும் இவர்கள் பயணம் அமையும் என அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் இவர்கள் நாடு திரும்பிய பின்னரும் இலங்கையுடனான தொடர்புகளைப் பேணுவதுடன் பயிற்சியாளர்களுக்கு வழிகாட்டலையும் வழங்குவார்கள் என்றும் அறி விக்கப்பட்டுள்ளது. (அ)

## சிறப்புரிமை மீறல் பிரச்சினை பாராளுமன்றில் எழுப்பப்படும்

பாராளுமன்ற உறுப்பினர்கள் தாக்கப்பட்டமை தொடர்பில் சிறப்புரிமை மீறல் பிரச்சினையை ஐக்கிய தேசிய கட்சி பாராளுமன்றத்தில் எழுப்பவுள்ளது என கட்சியின் நாடாளு மன்ற உறுப்பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டை துறைமுகம் மற்றும் மத்தள விமான நிலையம் ஆகியவற்றைப் பார்வையிட சென்றிருந்த ஐக்கிய தேசிய கட்சியின் உறுப்பினர்கள் மீது, அம்பாந் தோட்டை நகர முதல்வர் தலைமையிலான குழுவினர் தாக்குதல் நடத்தி இருந்தனர்.

இதன் மூலம் தமது பாராளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (அ)

## பா.ஜ.கட்சியையும் நாம் நம்ப முடியாது

### டி.ராஜா தெரிவிப்பு

இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் காங்கிரசின் நிலைப்பாடும், பா.ஜ.வின் நிலைப்பாடும் ஒன்று தான். அதேபோல் இந்திய பொருளாதாரம் மற்றும் வெளியுறவுக் கொள் கையில இரு கட்சிகளும் ஒரே நிலைப்பாட்டைத்தான் கொண்டுள்ளன. மாற்றுக கொள்கை கொண்ட அரசியல் மாற்றம் ஒன்றை உரு வாக்கு வதே இடதுசாரிகளின் நோக்கம் என இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய செயலர்டி.ராஜா தெரிவித்துள்ளார்.

திருவாரூரில் செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில,

ஊழல் மலிந்துள்ள காங்கிரஸ் கட்சிக்கும், அக்கட்சியின் பொருளாதாரக் கொள்கையை பின்பற்றும் மதவாதக் கொள்கை கொண்ட பா.ஜ.கவுக்கும் பெரிதாக வித்தியாசமில்லை.

நரேந்திர மோடியின் மாயா ஜாலத்தை நம்பி தமிழகத்தில் கட்சிகள் அணி சேர்ந்துள்ளன. திராவிடக் கட்சிகளான திமுகவும், அ.தி.மு.கவும் மோடியின் அரசியல் குறித்து பேசுகின்றனவே தவிர அவரது மற்றும் பா.ஜ.கவின் மதவாதக் கொள்கை குறித்து பகிரங்கமாக விமர்சிக்க மறுக்கின்றன.

தமிழகத்தில் பா.ஜ.க. செல்வாக்கு, மிகுந்துவிட்டதைப் போன்ற பாவனையில் அது பல்வேறு பிரச்சினைகள் குறித்துப் பேசி வருவது நகைக்க வைக்கின்றது.

தமிழகம், புதுச்சேரி மாநிலங்களில் போட்டியிடும் 18 தொகுதிகளில் வெற்றி, தோல்விகளை தீர்மானிக்கும் சக்திகளாக இடதுசாரிகள் இருக்கும். வருங்காலத்தில் தமிழகத்தில் இடதுசாரி அமைப்புகள் மாற்றத்தை ஏற்படுத்தும் என்றார். (அ)

## வெளிநாட்டு பெண் மீது பாலியல் துன்புறுத்தல்

வெளிநாடுகளில் இருந்து சுற்றுலா வரும் பெண்கள் மீது பாலியல் துன்புறுத்தல் நடவடிக்கைகள் தொடர்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த வகையில் கடந்த வாரம் மாத்தறை பொல்ஹேன பகுதியில் 22 வயதான பிரித்தானிய பெண், தாம் பாலியல் ரீதியில் துன்புறுத்தலுக்கு உள்ளா னதாக பொலிஸில் முறை ப்பாடு செய்துள்ளார்.

இலங்கை சுற்றுலா சபையின் அறிக்கைப்படி இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளில் 43 வீதமானோர் பெண்கள் என்று சுட்டிக்காட் டப்பட்டுள்ளது. தமக்கு சுற்றுலா வழிகாட்டியாக வந்த ஒருவரே தம்மை துன்புறுத்தியதாக குறித்த பெண் முறையிட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் வெலிகம பிரதேச சபையின் முன்னாள தவிசாளரும் 22 வயதான சுவிஸ் பெண்ணை துன்புறுத்திய குற்றச்சாட்டில் விளக்கமறியலில் வைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு தமது நாட்டு பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் அத்துமீறல்கள் காரணமாகவே பிரித்தானியா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தமது சுற்றுலா அறிவுறுத்தலில் எச்சரிக்கைகளை விடுத்துள்ளன. (அ)

## புலி உறுப்பினர்களுக்கு 11 நாடுகள் அடைக்கலம்

### சிங்கள ஊடகம்

சர்வதேச பொலிஸாரான இன்டர் போலினால் தேடப்பட்டு வரும் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு 11 நாடுகள் அடைக்கலம் வழங்கி வருவதாக சிங்கள ஊடகமானது செய்தி வெளியிட்டுள்ளது.

இன்டர் போலினால் 299 தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிராக சிவப்பு சமிக்ஞை எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இதில் அதிகளவான புலி உறுப்பினர்களுக்கு கனடா அடைக்கலம் வழங்கியுள்ளது.

கனடாவில் 78 பேருக்கும், ஜேர்மனியில் 48 பேருக்கும், இத்தாலியல் 25 பேருக்கும் பிரான்ஸில் 43 பேருக்கும், நெதர்லாந்தில் 31 பேருக்கும், நோர்வேயில் 13 பேருக்கும், அமெரிககாவில் 11 பேருக்கும், பெல்ஜியம் மற்றும் சுவிட்சர்லாந்தில் 70 பேருக்கும் அடைக்கலம் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசியல் புகலிடம் வழங்கப்பட்டுள்ள தமிழீழ விடுதலைப் புலிகளில் 90 பேருக்கு சர்வதேச பிடிவிறாந்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக திவயின சிங்கள ஊடகமானது செய்தி வெளியிட்டுள்ளது. (செ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

....தவம் செய்த தாருகாவனத்து ரிஷிகளெல்லாம் விஷ்ணுவான மோகினியை, மோகித்து தாங்கள் செய்யும் தவத்தை விட்டு எழுந்து மோகினியைப் பின்தொடர்ந்தனர்.

இவ்விதம் இருசாராரும் தங்கள் தவ வலிமையை இழக்கவே அவர்களின் கர்வமும் அழிந்தது. அப்படி விஷ்ணு மோகினியாக அவதாரம் எடுத்த இடம் தான் இது.

இல்லையில்லை, இந்த மோகினிப் பாறைக்கு வேறு கதையிருக்கிறது என்று இடையே புகுந்தார் உடன் வந்த துறவி ஒருவர்.


சபாஷ் சரியான போட்டி. சமயம் பார்த்து கமெண்ட் அடித்தார் கூட்டத்தில் ஒருவர்.

ஐயா, அந்தக் கதையையும் சொல்லுங்கள். நாங்கள் தெரிந்து கொள்கிறோம் என்று ஆர்வமுடன் கேட்கவே அவரும் கதை சொல்ல ஆரம்பித்தார்.

நாம் வரும் வழியில் பார்த்தோமே, வாதமேடு கறுப்பு நிறத்துடன் குவியல் குவியல்களாய் கற்கள் கொட்டிக் கிடக்குமே அந்த இடம்தான் பிரம்ம ரிஷியின் யாக சாலை இருந்த இடம்.

மாசி மாதம் பௌர்ணமி திதியும், மக நட்சத்திரமும் கூடிய சுப தினத்தில் இரவு பத்து நாழிகைக்கு மேல் பிரம்ம ரிஷியும் கோரக்கரும் இணைந்து மாபெரும் யாகம் ஒன்றைத் தொடங்கினர்.

இரண்டு சித்தர்களும் தொடர்ந்து பல நாட்கள் உபவாசம் இருந்து ஆபத்தியம், தட்சிணாக்கினியம், ஆகவனீபம் என்ற மூன்று அக்கினிகளையும் வளர்த்து ஆகுதிகள் கொடுத்து, இரவும் பகலும் இடைவிடாது மந்திரங்களை உச்சரித்து யாகத்தைத் தொடர்ந்தனர்.



நடுக்காட்டு விநாயகர்

சித்தர்கள் இருவரும் செய்யும் யாகம் பற்றி தேவருலகத்திற்கு எட்டியும் ஒருவருக்கும் அவர்களின் யாகம் பற்றிய நோக்கம் தெரியவில்லை.

கோரக்கரும், பிரம்ம முனியும் ஏன் இவ்வளவு கடுமையான யாகத்தைச் செய்கின்றனர்? இந்த யாகத்தின் மூலம் அவர்கள் அடைய விரும்புவது என்ன? என்பது புரியாததால் எல்லோரும் குழப்பமடைந்திருந்தனர்.

இந்தக் குழப்பம் அஷ்டதிக்குப்பாலகருக்கும், நந்தி, பதஞ்சலி, வியாக்ர பாதர் ஆகியோருக்கும் இருந்ததால் அவர்கள் சிவபெருமானிடம் சென்று இந்த யாகத்தைப் பற்றி எடுத்துரைத்தனர்.

இதே குழப்பம் உமாதேவிக்கும் இருந்ததால் அவரும் "ஆமாம் சுவாமி, எனக்கும் இரண்டு முனிவர்களும் எதற்காக இந்த மாபெரும் யாகத்தைச் செய்கிறார்கள் என்பது புரியவில்லை" என்று தெரிவிக்கவே, சிவபெருமான்

## ஆன்மீகம் 98

கோரக்கரும், பிரம்ம முனியும் யாகம் செய்யும் காரணத்தை எடுத்துரைத்தார்.

உமாதேவியே! சித்தர்கள் இருவரும் தாம் என்றும் சிரஞ்சீவியாக இருக்கும் பொருட்டும்; உலகத்தில் இறந்த மக்களை உயிர் பெற்றெழச் செய்யும் சக்தி வேண்டியும் ஆக்கல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் ஆகிய பஞ்ச கிருத்தியங்களைத் தாமே நடத்தற்குரிய வலிமை வேண்டியும் இந்த யாகத்தைச் செய்கின்றனர்.

"அவர்கள் கேட்ட வரங்கள் யாவும் கிடைத்து விடுமா?"

"இந்த யாகத்தை அவர்கள் வெற்றிகரமாகப் பூர்த்தி செய்து விட்டால் கேட்டதைக் கொடுத்துத்தானே ஆக வேண்டும்?"

"அது விபரீதத்தையல்லவா ஏற்படுத்தி விடும். இதனைத் தடுப்பதற்கு ஏதும் வழியில்லையா?"

"உமா, நீ நினைப்பது சரிதான். ஆனால் அவர்கள் எண்ணம் முற்றிலும் ஈடேறாது."

"எப்படிச் சொல்லுகிறீர்கள்?"

"யாகத்தை முடித்துவிட்டால்தானே அவர்கள் கேட்பதைக் கொடுத்தாக வேண்டும். யாகத்தை முழுமையாகாதபடி செய்ய வேண்டியது உன் பொறுப்பு" என்றார் சிரித்தபடி.

(தொடரும்)

டாக்டர். சி. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

17

...அந்த மலை குலுங்கிக் குலுங்கி அழுகிறது.

விளக்கில் மண்ணெண்ணெயும் உனக்குள் நம்பிக்கையும் குறைந்து கொண்டே வருகின்றன.

அசைக்க முடியாத உன் கரத்தை மெல்ல அசைத்து தூரத்தில் நின்று அழுது கொண்டிருந்த உன் தங்கையை அழைக்கிறாய்.

உன் தங்கையின் கரத்தை என் தாத்தாவின் கரத்தில் சேர்த்து வைக்கிறாய்.

நானிருந்த இடத்தில் இவளைத் தவிர வேறு யாரும் இருக்கக் கூடாது என்று முனகுகிறாய்.

எல்லோரும் கதறுகிறார்கள்.

கண்ணீரில் இரவு கரைகிறது.

விடிகிறது.

நீ பிழைத்துக் கொள்கிறாய்

அதன் பிறகு ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் இந்த மண்ணில் நீ வாழ்ந்திருக்கிறாய்.

படுக்கையில் கொடுத்த வாக்கை நீ வாழ்க்கை முழுவதும் காப்பாற்றுகிறாய்.

கொடுத்த வாக்கின்படி உன் தங்கைக்கு உன் வாழ்க்கையில் பாதியைப் பங்கிட்டுக் கொடுக்கிறாய்.

உன் உத்தம குணங்களிலெல்லாம் நான் உன்னதமாய் நினைப்பது- உன் சத்தியம்.

உன்னை நினைக்கும் போதெல்லாம் என்னால் அழாமலிருக்க முடியவில்லை பாட்டி.

தமிழில் உறவுச் சொற்கள் உயர்ந்தவை; அழகுள்ளவை; அர்த்தம் செறிந்தவை.

பாட்டி என்பது பொதுச் சொல்.

பாட்டி என்பவள் தந்தையின் தாயாகவும் இருக்கலாம்; தாயின் தாயாகவும் இருக்கலாம்.

ஆனால் இரண்டுக்கும் வெவ்வேறு சொற்களைக் கண்டு பிடித்தவர்கள் நீங்கள்.

தந்தையின் தாயை அப்பத்தா என்று குறித்தீர்கள்- அதாவது- அப்பனுக்கு ஆத்தா.

தாயின் தாயை அம்மத்தா என்று குறித்தீர்கள்- அதாவது- அம்மாவுக்கு ஆத்தா.

உன்னை நான் அப்பத்தா என்று அழைத்திருக்க வேண்டும்.

நாகரிகமாய் உன்னை நான் பாட்டி என்று அழைத்ததை நீ விரும்பினாயோ இல்லையோ எனக்கு விளங்கவில்லை.

நிஜம் தான்.

'அம்மத்தா' என்பதன் அடர்த்தி, 'அப்பத்தா' என்பதன் அழுத்தம் பாட்டியில் வருமா?

உண்மையில் உன்னைப் போன்ற படிக்காதவர்களே தமிழைப் பாது காத்து வந்திருக்கிறீர்கள் பாட்டி.



ஒரு மழைப் பகலில் தோட்டத்து வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்து நான் மழைத் தாரைகளோடு பேசிக் கொண்டிருந்தேன்.

என் முதுகுக்குப் பின்னால் நின்று கொண்டு நீ என்னையே வாசித்துக் கொண்டிருந்திருக்கிறாய்.

## சீனிப்பாட்டி

திடீரென்று என் கனவின் மீது கல்லெறிகிறாய்.

எலே வைரமுத்து! நீ கவியெல்லாம் கூடக் கட்றியாமே நெசமா வாடா?

அடேயப்பா! அன்று நான் அடைந்த ஆனந்தம் எவ்வளவு தெரியுமா?



என்னால் நேசிக்கப்படும் ஒரு ஜீவன் என் கவிதைகளின் சௌகரியம் கேட்ட சந்தோஷத்தில் அன்று பெய்த மழையெல்லாம் இந்த விதை முளைக்கப் பெய்த மழையென்றல்லவா வியந்து விதந்தேன்!

என் இதயத்தின் ஏதோ ஒரு மூலையில், என் ரத்தத்தின் ஏதோ ஒரு செல்லில் நீயும் கவிதை எழுதியிருக்கிறாய்.

ஒரு முப்பது சதுர மைல்கள்- ஒரு முந்நூறு முகங்கள்- ஒரு மூவாயிரம் வார்த்தைகள்- ஒரு முப்பதாயிரம் நாட்கள்- இவ்வளவுதான் உன் வாழ்க்கை.

ஆனால் எனக்குள் நீ வியாபித்திருக்கிறாயே!

அது பிரபஞ்சம் பாட்டி!

பிரபஞ்சம்.

(தொடரும்)

-வைரமுத்து-


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சரிவும் ஏற்றமும்!

விஜயபுரியில் வசித்து வந்த சுந்தரம் வியாபாரம் செய்ய விரும்பினான்.

ஆனால் எந்த வியாபாரத்தில இறங்கினால் விரைவில் பணம் சம்பாதிக்க முடியும் என்பதில் அவனுக்குக் குழப்பம் ஏற்பட்டது.



இறுதியாக விஜயபுரியில் நல்ல தரமான உணவுவிடுதிகள்இல்லை.

அதனால் தான் ஒரு உணவு விடுதி தொடங்கினால், நிச்சயமாக நல்ல வியாபாரம் நடக்கும் என்று தோன்றியதால், நகரின் பிரதான கடைத் தெருவில் ஓர் உணவு விடுதியைத் திறந்து வைத்துத் தன் வியாபாரத்தை ஆரம்பித்தான்.

ஆனால் சுந்தரம் எதிர்பார்த்ததுபோல் திருப்திகரமாக வியாபாரம் நடைபெறவில்லை. ஒருநாள், அயலூரிலிருந்து ஆனந்தன் என்ற சமையற்காரன் அவனிடம் வேலை கேட்டுவர, அவனைத் தன் உணவு விடுதியில் நியமித்தான்.

ஆனந்தன் மிகமிகச் சுவையாகவும் தின்பண்டங்களைத் தயாரித்தான். சிறிது சிறிதாக வியாபாரம் ஏற்றம் கண்டது.

ஓராண்டிலேயே, சுந்தரத்தின் உணவு விடுதியில் கூட்டம் அலை புரண்டது.

ஒருநாள் சமையற்கார ஆனந்தன் சுந்தரத்திடம் ஆயிரம் ரூபாய் கடன் கேட்டான்.

ஆனால் சுந்தரம் அவனுக்குக் கடன் தரமறுத்து விட்டான்.

ஆனால், அன்று முதல் சுந்தரத்தின் உணவு விடுதியில் விற்கப்பட்ட பண்டங்களின் சுவை குறைந்தது.


ஆரம்பததில் வாடிக்கையாளர்கள்அதைப் பொருட்படுத்தவில்லை.

ஆனால், நாளாக நாளாக, வாடிக் கையாளர்கள் கூட்டம் குறையத் தொடங்கியது.

அமோகமாக நடைபெற்றுக் கொணடிருந்த சுந்தரத்தின் வியாபாரத்தில் சரிவு ஏற்பட, அவன் காரணம தெரியாமல் திகைத்தான்.

சுந்தரத்தின் பள்ளி ஆசிரியரும் அந்த உணவு விடுதியின் வாடிக்கையாளர்களில் ஒருவர்.

ஒருநாள் அவர் சுந்தரத்திடம், "உன்னுடைய விடுதியில் முன்போல் உணவுப் பண்டங்கள்சுவை



யாக இல்லையே! என்ன காரணம்?" என்று கேட்டார்.

"அதுதான் எனக்கும் புரியவில்லை, ஐயா!" என்ற சுந்தரம், "உங்களைப் போலவே இன்னும் சிலரும் என்னிடம் குறை கூறினர்.

அதே ஆனந்தன்தான் இப்போதும் சமைக்கிறான்!" என்றதும், "அப்படியென்றால் ஆனந்தன் முன்போல் அக்கறையுடன் சமைப்பதில்லை என்று தோன்றுகிறது.

அவன் ஏதாவது உன்னை உதவி கேட்டு அதை நீ மறுத்தாயா?" என்று ஆசிரியர் கேட்டார்.

"ஆம்! அவன் என்னிடம் ஒரு நாள் ஆயிரம் ரூபாய் கடன் கேட்டான்! ஒருமுறை தந்தால், பிறகு அடிக்கடி கேட்பான் என்பதால் தரமறுத்து விட்டேன்!" என்றான் சுந்தரம். "அதுதான் நீ செய்த தவறு!" என்ற ஆசிரியர், "எல்லா மனிதர்களையும் ஏன் ஒரே மாதிரியாக நினைக்கிறாய்? அவனுக்கு உண்மையாகவே தேவை இருந்திருக்கலாம்.

முதலாளியான உன்னைக் கேட்காமல் அவன் வேறு யாரைக் கேட்பான்? உன்னுடைய வியாபாரத்தின் முக்கிய சூத்திரதாரியே அவன்தான்!

அவன் மனம் லயித்து வேலை செய்யவில்லையெனில் உனக்குப் பெரிய நஷ்டம் உண்டாகும்! நீ எதற்கும் அவனுக்கு ஒரு முறை கடன் கொடுத்துப் பார்!" என்று அறிவுரை கூறிவிட்டுச் சென்றார்.

தனது ஆசிரியர் கூறியது சரியெனத் தோன்ற, உடனே சுந்தரம் ஆனந்தனை அழைத்து "அன்று நீ கேட்ட போது என்னிடம் பணம் இல்லை. இப்போது தருகிறேன்!" என்று பணம் கொடுக்க, ஆனந்தன் முகம் மலர்ந்தது. மாயம்போல், அன்று முதல் உணவுப் பண்டங்கள் முன போலவே சுவையாக சமைக்கப்பட்டன.

வாடிக்கையாளர்கள் கூட்டம் மீண்டும் பெருகியது. வியாபாரமும் ஏற்றம் கண்டது.

## இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்




- கி.மு 753 - ரொமூலஸ் மற்றும் ரேமுஸ் இருவரும் உரோம் நகரை அமைத்தனர்.
- கி.மு 43 - ரோமப் பேரரசு: ஆவுலஸ் ஹேர்ட்டியஸ் உடன இடம்பெற்ற சமரில் மார்க் அந்தோனி மீண்டும் தோற்றான். ஆனால், ஹேர்ட்டியஸ் இச்சமரில் கொல்லப்பட்டான்.
- 1509 - ஏழாம் ஹென்றியின் இறப்புக்குப் பின்னர் அவனது மகன் எட்டாம் ஹென்றி இங்கிலாந்தின் மன்னனாக முடிசூடினான்.
- 1526 - பானிப்பட்டில் முதலாவது போர் டில்லியின் சுல்தானுக்கும் தைமூர் வம்சத்தைச் சேர்ந்த பாபருக்கும் இடையில் இடம்பெற்றது. பாபர் இந்தயாவில் மொஙலாயப்பேரரசை நிறுவினான.
- 1792 - பிரேசில் நாட்டின் விடுதலைக்குப் போராடிய டைராடெண்டெஸ் தூக்கிலிடப்பட்டான்.
- 1863 - கடவுளின் தூதர் தாமே என பகாவுல்லா பகிரங்கமாக அறிவித்தார். ரித்வான் தோட்டத்தில் செய்த இந்த அறிவிப்பு நாள் உலகம் முழுவதும் உள்ள பஹாய்களால் 'ரித்வான் முதல்' நாள் என விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடப்படுகின்றது.
- 1916 - இலங்கையில் அமெரிக்க மிசனறிகள் ஒன்றுகூடி முதன் முதலில் ஒரு திருச்சபையை ஆரம்பித்தனர்.
- 1822 - இலங்கையில் அமெரிக்கத் திருச்சபையின் குருக்களாக (pastor) முதற்தடவையாக உள்ளூரில இருந்து தெரிவு செய்யப்பட்டனர். ஜோர்டன் லொட்ஜ், நத்தானியேல் நைல்ஸ், சார்ல்ஸ் ஹொட்ஜ், எபனேசர் போர்ட்டர் ஆகியோர் தெரிவானார்கள்.
- 1944 - பிரான்சில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்தது.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: பெர்லினில் சோவியத் படைகள் ஜேர்மனியின் உயர் தலைமைப் பீடத்தைத் தாக்கினர்.
- 1960 - பிரசீலியா பிரேசிலின் தலைநகராக ஆக்கப்பட்டது.
- 1967 - கிரேக்கத்தில் பொதுத்தேர்தலுக்கு சில நாட்கள் இருக்கையில் இராணுவத் தளபதி ஜோர்ஜ் பப்படபவுலோஸ் ஆட்சியைக் கைப்பற்றி அடுத்த ஏழாண்டுகளுக்கு பதவியில் இருந்தார்.
- 1975.- வியட்நாம் போர்: தெற்கு வியட்நாம் ஜனாதிபதி நூயென் வான் டியூ சாய்கோனை விட்டு வெளியேறினார்.
- 1989 - பெய்ஜிங் நகரில் தியனன்மென் சதுக்கத்தில் கிட்டத்தட்ட 100,000 மாணவர்கள் சீர்திருத்த தலைவர் ஹூ யாபாங்கின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தத் திரண்டனர்.
- 1994 - சூரியக் குடும்பத்துக்கு வெளியே கோள்கள் இருப்பதை முதன் முதலில் வானியலாளர் அலெக்சாண்டர் வோல்ஸ்க்சான் அறிவித்தார்.

### பிறப்புகள

- 1837 - பிரெட்ரிக் பேஜர், நோபல் பரிசு பெற்றவர் (இ. 1922)
- 1864- மக்ஸ் வெபர், ஜேர்மனிய சமூகவியலாளர் (இ. 1920)
- 1882 - பேர்சி பிரிட்ஜ்மன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1961)
- 1889 - பவுல் காரெர், நோபல் பரிசு பெற்ற வேதியியலாளர் (இ. 1971)
- 1926 - இரண்டம் எலிசபெத், ஐக்கிய இராச்சியத்தின் மகாராணி

### இறப்புகள்

- 1910 - மார்க் டுவைன், அமெரிக்க எழுத்தாளர் (பி. 1835)
- 1938 - முகமது இக்பால், பிரித்தானிய இந்தியாவின் முஸ்லிம் கவிஞர் (பி. 1877)
- 1946 - ஜான் மேனார்ட் கெயின்ஸ், பிரித்தானியப் பொருளியலாளர் (பி. 1883)
- 1964 - பாரதிதாசன், புரட்சிக் கவிஞர், பாவேந்தர் (பி. 1891)
- 1965 - எட்வர்ட் ஆப்பில்டன், நோபல் பரிசு பெற்றவர் (பி. 1892)

### இரண்டாம் எலிசபெத்



பிரிட்டனின் 6ஆம் ஜோஜ் மன்னருக்கும் அவரது துணைவியார் எலிசபெத் மகாராணிக்கும், மூத்த பிள்ளையாக 1926 ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 21 ஆம் திகதி பிறந்தார். அவருக்கு அப்போது எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி என்ற பெயர் சூட்டப்பெற்றது. 1952ஆம் ஆண்டு பிரித்தானிய மன்னராக இருந்த இவரது தந்தை காலமான நிலையில் 26 வயதிலேயே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தின் மகாராணியாக இரண்டாம் எலிசபெத் மகாராணி என்ற பெயருடன் முடிசூடிக் கொண்டார்.

பிரிட்டனில் நூற்றாண்டுகள் காலம் பரிணாம வளர்ச்சி கண்டுள்ள அரசியல் சாசன கடமைகளையும், பிரதிநிதித்துவப் பொறுப்புகளையும் மகாராணி இரண்டாம் எலிசபெத் நிறைவேற்றிவருகிறார். ஐக்கிய இராச்சியம் உட்பட 16 இறைமையுள்ள நாடுகளின் அரசியல் சட்டப்படியான அரசியாக உள்ளார். அனைத்து நாடுகளுக்கும் இவர் தனித்தனியே வெவ்வேறு பெயர்களில் ஆட்சிப் பெயர்களைக் கொண்டிருந்தாலும், ஐக்கிய இராச்சியத்திலேயே, லண்டனில் உள்ள பக்கிங்ஹாம் அரண்மனையில் இவர் வாழ்கிறார். 54 நாடுகளை உறுப்பினர்களாகக் கொண்ட பொதுநலவாயத்தின் தலைவரும் இவராவார். இவர் இங்கிலாந்து திருச்சபையின் மிக உயரிய ஆளுநர் ஆவார்.

அரசியின் பல வரலாற்றுச் சிறப்பு மிக்க வருகைகளிலும் சந்திப்புகளிலும் அயர்லாந்து குடியரசுக்கான அரசுப் பயணமும் reciprocal visits to and from the திருத்தந்தையுடனான சந்திப்புக்களும் முதன்மையானவை. தனது ஆளுமைக்குட்பட்ட நாடுகளில் பல அரசியல்சட்ட மாற்றங்களை கண்டுள்ளார். ஐக்கிய இராச்சியத்தில் அதிகாரப் பகிர்வு மற்றும் கனேடிய அரசியல் சட்டத்தின் திரும்பப் பெறல் போன்றவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “ஜய” வருட ராசிபலன்கள்



அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்

**வாழ்க்கைத்தேவைகள் பூர்த்தியாகும் வருடம்! சந்தர்ப்பங்களை சரியாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என நினைக்கும் கும்ப இராசிநேயர்களே!**

விஜய வருடம் முடிந்து ஜய வருடம் தொடங்கிவிட்டது. குருவின் பார்வையோடும், அஷ்டமத்தில் செவ்வாய், சந்திரன் ஆதிக்கத்தோடும், இராசிநாதனின் வக்ர இயக்கத்தோடும் பிறக்கும் இந்தப் புத்தாண்டு நமக்கு எப்படி அமையப்போகின்றதோ என்ற சிந்தனை, வருடம் தொடங்குவதற்கு ஒருமாதம் முன்னதாகவே வந்துகொண்டேயிருக்கும்.

**கிரகநிலை**

பொதுவாக ஆண்டின் தொடக்கத்தில் அஷ்டம ஸ்தானம் வலுப்பெறுகிறது. அஷ்டமாதிபதி நீச்சம் பெறுகிறார். எனவே, வரவும் செலவும் சமமாகவே இருக்கும். சனி வக்ர இயக்கத்தில் இருப்பதால் மன நிம்மதி சற்று குறைவாகவே இருக்கும்.

அஷ்டமாதிபதி வலுவிழந்திருப்பது ஒரு வகைக்கு நன்மைதான். அதே நேரத்தில் அது பஞ்சமாதிபதியாகவும் இருப்பதால் பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம்.

**சிவல்புரி சிங்காரம்**

படித்து முடித்த பிள்ளைகளாக இருந்தால் வேலை வாய்ப்பிற்கு செய்த ஏற்பாடுகளில் வெற்றி கிடைக்கும். செவ்வாய், சந்திர சேர்க்கை அஷ்டமத்தில் இருப்பதால் நெருங்கி வந்த வரன்கள் விட்டுப் போகலாம். விட்டுப் போன வரன்கள் மீண்டும் வீடுதேடி வரலாம்.

சுக்ர, சனியின் பரிவர்த்தனையால் தந்தை வழி உறவில் அனுகூலம் உண்டாகும். அதே நேரத்தில் 9 ஆம் இடத்தைப் பார்க்கும் குருவால் உன்னதமான பலன்கள் வந்து சேர வியாழன் தோறும் குரு வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

**எப்படியிருக்கும் ஜயவருடம்?**

உங்கள் இராசிநாதன் சனி வக்ர இயக்கத்தோடு இந்தப் புத்தாண்டு ஜய வருடம் பிறக்கிறது. வக்ரத்தினால் வளர்ச்சி பாதிக்குமோ என்று நீங்கள் நினைக்க வேண்டாம். தக்க தருணத்தில் குருவின் பார்வை கைகொடுத்து உதவப் போகிறது. எனவே, மக்கள் போற்றுமளவிற்கு வாழ்க்கைத் தரம் உயரும்.

நற்பலன்களைக் கொடுக்கும் விதத்தில் குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. எனவே, அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் ஆதரவு கிடைக்கும். அடுத்தவர் நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிட்டும். ஆதாயமும் கிடைக்கும்.

வக்ர இயக்கத்தில் இருக்கும் சனி உங்கள் இராசிக்கு 12 ஆம் இடத்திற்கும் அதிபதியாக விளங்குகிறார். எனவே, கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம் என்ற அடிப்படையில் திட்டமிடாது செய்கின்ற காரியங்களில் வெற்றி கிடைக்கும். தெய்வத் திருப்பணிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

சனிக்கிழமை தோறும் விரதமிருந்து சனிபகவானுக்கு எள் தீபம் ஏற்றி வழிபாடு செய்வதோடு சனி கவச பாராயணம் செய்வதும் நல்லது. வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகளில் வெற்றி கிடைக்கும்.


குருவருள் மூலமாக உங்களுக்கு கூடுதல் நற்பலன் கிடைக்கப் போகிறது. வருடத் தொடக்கத்திலேயே குரு வக்ர நிவர்த்தியாகி விட்டார். அருள் தரும் அதன்பார்வை பலத்தால் குடும்ப முன்னேற்றம் கூடும். குடி இருக்கும் வீட்டைக்கூட ஒரு சிலர் விலைக்கு வாங்க வேண்டுமென்று நினைத்திருப்பார்கள்.

அடிக்கடி ஆரோக்கியத் தொல்லையில் அவதிப்பட்டு வந்த நீங்கள் இனி மாற்று மருத்துவத்தால் உடல் நலத்தை சீராக்கிக் கொள்வீர்கள். ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்தினால் ஆரோக்கியம் சீராகும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

குரு பார்வை லாபஸ்தானத்தில் பதிவதால் வியாபார விரோதங்கள் விலகும். புதிய தொழில் நுணுக்கங்களைக் கற்றுக்கொண்டு வியாபார விருத்தி காண்பீர்கள். செவ்வாயின் வக்ர இயக்கம் மாறும்வரை கொஞ்சம் வியாபாரத்தில் கண்ணும், கருத்துமாக இருப்பது நல்லது. தொழில் பங்குதாரர்களில் ஒரு சிலர் ஒத்துழைப்பு குறையும் பொழுதே அவர்களை விட்டு நீங்கள் விலக நினைக்கலாம்.

எதிலும் நிதானமும், பொறுமையும் தேவை. பிறரை நம்பி ஒப்படைத்த பொறுப்புகள்

## கும்பம்



மீண்டும் உங்களிடமே வந்து சேரும். ஆயினும் குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் அதன் பார்வை பலம் தன ஸ்தானத்தில் பதிவதால் கொடுக்கல்- வாங்கல்கள் சரளமாக இருக்கும்.

**நலம் தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

ஆனி மாதம் 7 ஆம் திகதி (21.06.2014) அன்று கன்னி இராசியில் ராகுவும், மீன இராசியில் கேதுவும் சஞ்சரிக்கிறார்கள். வருடக் கடைசி வரை அங்கேயே இருக்கிறார்கள். எட்டாமிடத்தில் ராகுவும், இரண்டாமிடத்தில் கேதுவும் உங்கள் இராசியின் அடிப்படையில் வருகிறது. மறைந்த ராகு நிறைந்த தன லாபத்தைக் கொடுக்கும்.

கட்டிய மனை பாதியில் நிற்கிறதே என்ற கவலை இனி மாறும். வருமானம் பல வழிகளிலும் வந்து பழைய கடன்களை எல்லாம் பைசல் செய்வீர்கள். வாக்கு ஸ்தானத்தில் கேது இருப்பதால் குடும்பத்தில் பிரச்சினைகள் வராமல் இருக்க விட்டுக்கொடுத்துச் செல்வது நல்லது. தொழிலில் புதிய பங்குதாரர்களை இணைத்துக் கொள்ளும் சூழ்நிலை உருவாகும். சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்வதன் மூலம் ராகு- கேதுக்களின் பெயர்ச்சி நற்பலன்களை வழங்கும்.

**சனிப்பெயர்ச்சி எப்படியிருக்கும்?**

ஜய வருடம் மார்கழி மாதம் தொடக்க நாளிலேயே சனி பகவான் உங்கள் இராசிக்கு 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். இராசிநாதனாகவும் விரயாதிபதியாகவும் விளங்கும் சனி பத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் முன்னேற்றத்தைக் கொடுக்கும் என்றாலும் ஒரு சில ஏமாற்றங்களையும் சந்திக்க வைக்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் அதிலிருந்தபடியே தனித்தும் தொழில் செய்யலாமா என்று சிந்திப்பர். அதற்கான வாய்ப்புகளும், நட்பு வட்டத்தின் மூலம் வந்து சேரும். அப்பொழுது மனைவி, மக்கள் பெயரில் தொழில் முயற்சிக்கான பணிகளைத் தொடங்கலாம். பெற்றோர் உடல் நலத்தில் கவனம் தேவை. நீண்டதூரப் பயணங்களை மேற்கொண்டிருப்பவர்கள் தாய்நாடு திரும்பும் சூழ்நிலை உருவாகும்.

என்ன இருந்தாலும், இராசிநாதனாக சனி விளங்குவதால் அது 10 இல் சஞ்சரிக்கும் இரண்டரை ஆண்டுகளும் விநாயகப் பெருமானையும் சனி பகவானையும், அனுமனையும் வழிபட்டு வருவது நல்லது. மாசி 30 முதல் வருடக் கடைசி வரை சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். இக்காலத்தில் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது.

**வழிபாட்டின் மூலம் நன்மையை அடைய வேண்டிய காலம்!**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாயும், சனியும் சேர்க்கை பெறுகிறார்கள். இக்காலத்தில் பயணங்களில் கவனம் தேவை. இடமாற்றங்கள், இலாகா மாற்றங்கள் திடீரென ஏற்பட்டு ஒருசிலரை திக்குமுக்காட வைக்கலாம். அங்காரக சனி பரிகாரம் செய்வதன் மூலம் அல்லல்கள் தீர ஓரளவு வழி பிறக்கும்.

**குருப்பெயர்ச்சி பலன்கள்!**

வைகாசி 30 ஆம் திகதி (13.06.2014) அன்று கடக இராசியில் குரு பிரவேசிக்கப் போகிறார். அங்கு உச்சம் பெறும் குரு உங்கள் இராசிக்கு ஆறாமிடமாக இருக்கிறதே. மேலும் கடன் சுமை கூடுமோ என்று நினைக்க வேண்டாம்.

அதன் பார்வை பலம் 2,10,12 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, நீண்ட நாட்களாக வரவேண்டிய பாக்கிகள் வந்து சேரும். நண்பர்களுக்கு பொறுப்பு சொல்லி வாங்கிக் கொடுத்த பெருந்தொகை வராமல் இழுபறி நிலையில் இருக்கிறதே என்று சென்ற ஆண்டில் கவலைப்பட்டவர்கள் இப்போது சந்தோஷம் அடையும் விதத்தில் நல்லதகவல்களைக் கொண்டுவந்து சேர்க்கப் போகிறார்கள்.

**தனத்தினை குருதான் பார்த்தால், தன வரவு அதிகரிக்கும்!**
**பத்தினை குருதான் பார்த்தால், முத்தான தொழில்கள் வாய்க்கும்!**
**பன்னிரண்டை குருதான் பார்த்தால், பயணத்தால் பலன் கிடைக்கும்!**

என்பது ஜோதிட நியதி.

குருவின் பரிபூரண பார்வை பதியும் இடங்கள் எல்லாம் நல்ல பலன்களை அள்ளி வழங்கும் என்பதை அனுபவ ரீதியாக நாம் உணரலாம். அந்த அடிப்படையில் தொழில் மாற்றச் சிந்தனை மேலோங்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர். திருமண முயற்சி கைகூடும். திடீர் தன லாபங்களும் வந்து திக்குமுக்காடச் செய்யும். பொருளாதார நிலையை பெருக்கிக் கொள்ள அடிக்கடி பயணங்கள் மேற்கொள்ளும் சூழ்நிலை உருவாகும். வைத்தியச் செலவுகளும், வாங்கிய கடனைத் திருப்பி செலுத்த முடியாத சூழ்நிலையும் உருவாகும்.

**கும்ப இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

குடும்பச் சுமை கூடும்!

ஜய வருடத் தொடக்கத்தில் குருவின் பரிபூரண பார்வையால் பணத்தேவைகள் உடனுக்குடன் பூர்த்தியாகும். பகை மாறும்,



பாசம் கூடும். நேசம் மிக்கவர்களின் ஆதரவு கிடைக்கும். குடும்பச் சுமை அதிகரிக்கிறதே என்று கவலைப்படுவீர்கள். குழந்தைகளின் எதிர்கால நலன் கருதி சேமிக்க வேண்டுமென்ற எண்ணம் மேலோங்கும்.

கணவன்- மனைவிக்குள் பிணக்குகள் ஏற்பட்டாலும் அப்போதைக்கப்போது இணக்கமும் ஏற்படும். சனி, குரு போன்றவற்றின் வக்ர காலங்களில் வாழ்க்கைத் துணையை அனுசரித்துச் செல்வது நல்லது.

அதிகார பதவிகளில் இருப்பவர்களின் நட்பால் குருப் பெயர்ச்சிக்குப் பின்னால் தொழில் வளர்ச்சி காண்பீர்கள். ராகு- கேது பெயர்ச்சிக்குப் பின்னால் உறவினர் பகை உருவாகலாம். இழப்புகளை சந்திக்காமலிருக்க ராகு- கேதுக்களுக்குரிய பரிகாரம் செய்வது நல்லது.

**சிறப்பு வழிபாடுகள்**

பொதுவாக இராசிநாதன் சனி என்பதால் சனிக்கிழமை தோறும் ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்வது நல்லது.

அருகிலிருக்கும் சிறப்பு ஸ்தலங்களுக்குச் சென்று சனிபகவானை வழிபட்டு வாழ்க்கையை வசந்தமாக்கிக் கொள்ளுங்கள்.

## வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் வருடம்!

நாளை மீனம்.....

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மைக்ரோசாப்ட் விண்டோஸ் Xp - கார்ப்பரேட் கொள்ளைச் சின்னம்




2001 இல் அறிமுகப்படுத்தப்பட்ட விண்டோஸ்- Xp இயங்குதளம் 13 ஆண்டுகளுக்கு பிறகு திடீரென்று நிறுத்தும் அளவிற்கு என்ன பிரச்சினை ஏற்பட்டது? ஒரு பிரச்சினையும் ஏற்படவில்லையென்பதுதான் பிரச்சினையே!

வாழ்வையே விற்பதாகவும் வாங்குவதாகவும் பார்க்கச் சொல்கிற அத்து மீறல், உழைப்புச் சுரண்டல், முதலாளித்துவத்தின் கொடூரம் இவைகள் தான் சன்னல்களுக்கு அப்பால் பிதுங்கித் தள்ளும் அடிவேர்கள்!

மைக்ரோசாப்ட் நிறுவனம் விண்டோஸ்-Xp இயங்குதளத்தின் சேவையை அடியோடு நிறுத்தி இரண்டு வாரம் ஆகியிருக்கிறது. மைக்ரோசாப்ட் இயக்குநர் டிம் ரெய்ன்ஸ் ஏப்ரல் 8 ஆம் திகதி விண்டோஸ்-Xp இயங்குதள சேவையை நிறுத்துவதாக அறிவிப்பதற்கு முன்னரே பிரிட்டனின் மிகப்பெரும் ஐந்து வங்கிகள் 100 மில்லியன் டொலர்களை (தோராயமாக ரூ 620 கோடிகள்) மென்பொருள் புதுப்பித்தலுக்காக செலவிட்டிருக்கின்றன.

ஆருத்ரா தரிசனத்திற்கு ஆன்லைன் டிக்கட் வாங்கும் இந்தியாவில் இதன் நெருக்கடி மிகவும் பலமாக இருக்கிறது. இந்தியப் பொதுத்துறை வங்கிகளின் 34,000 இற்கும் மேற்பட்ட கிளைகள் இதனால் பாதிப்படையலாம் என்கிறது இந்திய வங்கியாளர்களின் கூட்டமைப்பு. ஒரு நாளில் தோரயமாக 1,100 கோடி ரூபாய்க்கான வணிக வாய்ப்புகள் பாதிக்கும் என்றும் மூன்று நாளில் ஏற்படும் இழப்பு ஏறக்குறைய 3,300 கோடி ரூபாய்க்கும் மேல் இருக்கும் என்கிறது இவ்வமைப்பு.

2001 இல் அறிமுகப்படுத்தப்பட்ட விண்டோஸ்- Xp இயங்குதளம் 13 ஆண்டுகளுக்கு பிறகு திடீரென்று நிறுத்தும் அளவிற்கு என்ன பிரச்சினை ஏற்பட்டது? ஒரு பிரச்சினையும் ஏற்படவில்லையென்பதுதான் பிரச்சினையே! அசென்ஷியஸ் கன்சல்டிங்கின் தரவுகளின்படி இந்தியாவில் 40 சதவீதத்திலிருந்து 70 சதவீதம் வரையிலான கணினிகள் விண்டோஸ்- Xp இயங்குதளத்தில்தான் இயங்குகின்றன.

இடையில் கொண்டுவரப்பட்ட விண்டோஸ் விஸ்டா படுத்துவிட்டது. அதன்பிறகு கொண்டு வரப்பட்ட விண்டோஸ்-7, இதுவரை வந்த தொகுப்புகளின் பிரதிபலிப்பாகவும் பளபளப்பாக தோன்றும் திரையைத தவிர அச்சு மாறாமல் அப்படியே வந்தது.

இங்கு இருந்துதான் பில்கேட்ஸ்க்கு எரிச்சல் ஆரம்பித்திருக்க வேண்டும். அதாவது விண்டோஸ்-7இன் விற்பனையை உயர்த்துவதற்காக 2010- லேயே விண்டோஸ்- Xpயின் விற்பனை நிறுத்தப்பட்டது. Xp இற்கு வழங்கப்பட்டு வந்த பாதுகாப்பு தொடர்பான மென்பொருள் புதுப்பித்தல்கள் மட்டும் தொடர்ந்த நிலையில் ஸ்மார்ட் போன்கள் மற்றும் டேப்ளாய்ட் கணினிகளின் சந்தையை பிடிக்கும் பொருட்டு சொட்டு மருந்தாக 2012 ஒக்டோபரில் விண்டோஸ்-8 சந்தையைத் தொட்டது. (நீங்கள் கணினியை பயன்படுத்துவது குறித்த தகவல்களை உளவு பார்ப்பதில், விண்டோஸ் 8 பல மடங்கு முன்னேறிய ஒன்று என்பது தனிக்கதை.)

இப்பொழுதும் வாடிக்கையாளர்கள் அசைந்து கொடுப்பதாகத் தெரியவில்லை. எச்சரிக்கை மேல் எச்சரிக்கையாக விடுத்தது மைக்ரோசாப்ட் நிறுவனம். போர்ப்ஸ் இதழ் மைக்ரோசாப்டிற்கு தன் கரிசனத்தை இப்படியாக வெளியிட்டது.

மூன்றில் ஒரு பங்கு மைக்ரோசாப்ட் வாடிக்கையாளர்கள் விண்டோஸ்- Xp இயங்குதளத்தைப் பயன்படுத்துவதாகவும் 36 சதவீதம் வாடிக்கையாளர்கள் எச்சரிக்கைக்குப் பின்னரும் தொடர்ந்து Xp இயங்குதளத்தையே பயன்படுத்துவதாகவும் தெரிவித்ததோடு நில்லாமல் இதிலிருந்து தப்புவது எப்படி என்று 10 விதமான ஆலோசனைகளை அள்ளிவிட்டுக் கொண்டிருக்கிறது.

நம்மவர்கள்தான் ஆகச் சிறந்த அடிமைகள் ஆயிற்றே! ரிசர்வ் வங்கி கடந்த மாதம் முதலே வங்கிகளுக்கு மென்பொருள் புதுப்பித்தல் தொடர்பாக நினைவூட்டலை ஊட்டியது. இந்தியாவில் 16 சதவீதம் அளவிலான ஏடிஎம்கள் இதனால் பாதிக்கப்படலாம் என்கின்றனர். பணம் எடுப்பதற்கும் வங்கி கணக்குகளை சரிபார்ப்பதற்கும் மிகவும் எளிய விண்டோஸ்- Xp இயங்குதளமே போதுமானது எனும் பொழுது தவிடு தின்னும் அரசனுக்கு அமைச்சர் முறம் பிடித்த கதையாக வலுக்கட்டாயமாக இயங்குதளத்தை மாற்ற வேண்டிய நெருக்கடியில் இருக்கின்றன இந்தியப் பொதுத்துறைவங்கிகள். விண்டோஸ்- Xp இயங்குதளம் மாற்றப்படா விட்டால் வைரசுகளாலும் ஹேக்கர்களாலும் மிகப்பெரும் ஆபத்தைச் சந்திக்க நேரிடும் என்று தொழில்நுட்ப பிரச்சினையாகப் பார்க்கிறார்கள். இது ஒரு அளவில் தொழில்நுட்ப பிரச்சினைதான். ஆனால் யாருக்கு? பில்கேட்ஸின் தொழிலில் ஏற்படும் இலாபத்தின் மீதான நுட்பப் பிரச்சினை இது.

வைரசுகள், ஹேக்கர்களின் பங்கு என்ன? நடுத்தரவர்க்கம் நைஜீரியாக்காரனை ஹேக்கராக நினைத்துக் கொண்டிருக்கிறது. மொசார்ட்டும் சிஐஏவும் ஊடுருவ சாத்தியம் இல்லாத கணினிகள் ஏதாவது இருக்கிறதா? முதலாளித்துவ சமூகத்தில் மருந்துகளுக்காகத்தான் நோய்களே தவிர, நோய்களுக்கு மருந்துகள் இல்லையென்பது அனைவருக்கும் தெரியும்.

இரத்தமும் சதையுமாக இருக்கிற மனிதனின் பாதுகாப்பிற்கே இந்த முதலாளிகள் துளி மதிப்பும் தரவில்லையெனும்போது ஆன்டி வைரஸ் மென்பொருட்கள் வெறும் சிலிக்கான் சில்லில் இயங்கும் கணினிகளை வைரஸிருந்து பாதுகாக்கப் போகிறது என்பது நேர்மையான மோசடி.

எப்பொழுதெல்லாம் ஆன்டி வைரஸ் இருக்கிறதோ அப்பொழுதுவரை கணினிகளைத் தாக்கும் வைரஸ்கள் இருக்கும் என்பதுதான் இலாபமீட்டும் விதி என்கிற பொழுது நமது அறிவு ஜீவிகள் எதற்கு முட்டுக் கொடுக்கின்றனர் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். இந்நிலையில் பாதுகாப்பு காரணங்களுக்காகத்தான் விண்டோஸ்- Xp இயங்குதளம் நிறுத்தப்படுகிறது என்பதை உங்களில் யார் ஏற்றுக் கொள்கிறீர்கள்?

"நீ நெல் கொண்டு வா,நான் உமி கொண்டு வருகிறேன் இருவரும் ஊதி ஊதி தின்போம்" என்ற கணக்காக இந்திய மைக்ரோசாப்ட் கிளையின் பொது மேலாளர் அம்ரிஷ் கோயல் 'பல்வேறு நிறுவனங்கள் இயங்குதளம் குறித்த எச்சரிக்கையை சட்டை செய்யவில்லை எனினும் சிறப்பு சலுகை விலைகளை மைக்ரோசாப்ட் தரத் தயாராக இருப்பதாக' காலால் இட்ட உத்திரவை தலையால் அறிவிக்கிறார். மற்றபடி இதன் சாரம் இந்தியாவில் காசுகொடுத்து வாங்கிய சற்றேறக் குறைய 40 இலட்சம் விண்டோஸ்- Xp குறுந்தகடுகளை நங்கநல்லூர் ஆஞ்சனேயருக்கு வடமாலையாக சாத்துங்கள், காணிக்கையை மைக்ரோசாப்டுக்கு செலுத்துங்கள் என்பது தான்.

இப்பிரச்சினையின் ஊடாக மூன்று விதமான கும்பல்களை நாம் அடையாளம் காணவேண்டியிருக்கிறது.

'முதலாவதாக இதை வெறும் இயங்குதள பிரச்சினையாக பார்க்கிறவர்கள், சுதந்திர மென்பொருட்களுக்கான இயக்கத்தை சமூக இயக்கமாக பிரதானப்படுத்துகிறார்கள். பாராளுமன்ற ஜனநாயகத்தை நம்பும் இடதுசாரி மாணவர் குழுக்கள் இதில் அடக்கம். உபுண்டு மற்றும் பொதுவான மென்பொருட்களை உருவாக்குவதன் மூலம் இதை தீர்க்க முடியும் என்று நம்புகிறார்கள். ஆனால் இது பிரச்சினையை ஒரு போதும் தீர்க்காது. மேலும் இது பிரச்சினையை தீர்க்கும் வழியுமல்ல.

நாம் இவர்களிடத்தில் முன் வைக்கும் வாதம் இது தான். மைக்ரோசாப்டைத் தவிர்த்து மெக்டோனால்ட்ஸ் (உணவு விடுதிகள்) கடந்த ஆண்டு பல மில்லியன் பவுண்ட் கோழி இறக்கைகள் எஞ்சியிருப்பதாகவும், அவற்றை எப்படி விற்று தீர்ப்பதென வருடாந்திர அறிக்கைகளில் விவாதித்திருக்கிறார்கள். அவர்கள் வந்தடைந்த முடிவுகளில் ஒன்று மக்கள் வாங்கும் சக்தியற்று இருக்கிறார்கள் என்பது. இதற்காக ஒருவர் இலவச கோழி இறக்கை இயக்கத்தை நடத்துவது சரியாக இருக்குமா? அல்லது முதலாளித்துவத்தின் முரண்பாடுகளை கூர்மைப்படுத்தி இலாப வெறியை அம்பலப்படுத்துவது சரியாக இருக்குமா? என்பதற்கு பதில் சொல்ல வேண்டும். மற்றபடி இலவச மென்பொருட்களுக்கான இயக்கம் வெறும் பிழைப்புவாதமன்றி வேறல்ல.

இரண்டாவதாக 'முதலாளித்துவ எதிர்ப்பு' என்பதை வார்ப்புரு அரசியல் (Template Politics) என்று கருதுபவர்கள். அபரிமிதமான உற்பத்தி, மூலதனக் குவியல் போன்ற சீரழிவுகளை, அபாயகரமான முதலாளித்துவம் என்று வரையறுப்பார்களே தவிர முதலாளித்துவம் அபாயகரமானது என்று சொல்வதில்லை. வரலாறு இவர்களை பொறுக்கித் தின்பவர்களாகத்தான் பார்க்கிறது. ஓராயிரம் முறை இவர்கள் இதைச் சொல்லும் பொழுது ஒரு இலட்சம் முறை அது தவறு என்று திருப்பிச் சொல்வதற்கான வாய்ப்புகளைத் முதலாளித்துவம் தான் தருகிறது என்பதை வசதியாக மறந்து விடுகிறார்கள். விண்டோஸ்- Xp திரும்பப் பெற்ற விடயத்தில் இவர்களின் நிலைப்பாடு என்ன? அபாயகரமான முதலாளித்துவமா? அல்லது முதலாளித்துவம் அபாயகரமானதா?

மூன்றாவதாக பிரச்சினைகளை களைய தர்மகர்த்தா முறையை ஆதரிப்பவர்கள். 'அறம் செய்ய விரும்பு' என்று முதலாளிகளிடத்தில் கோரிக்கையை வைத்துவிட்டு தொழிலாளிகளிடத்தில் நைச்சியமாக 'ஏற்பது இகழ்ச்சி' என்று கூறும் நீதிமான்களும் இதில் அடக்கம்.

மேலும் மதங்கள், மடங்கள், ஆன்மீகப் பெரியவர்கள் எல்லாம் வரிசைகட்டி நிற்கிறார்கள். ஏற்பது இகழ்ச்சி என்பதால் தான் விவசாயிகள் கடன் கட்டமுடியாமல் தன்மானம் காக்க தற்கொலை செய்கிறார்கள். ஆனால் அறம் செய்ய விரும்பும் கூட்டம் ஒரு பக்கம் காசு கொடுத்து வாங்கிய இயங்குதளம் இயங்காது என இறுமாப்புடன் கூறுவதுடன் மறுபக்கம் மெலிண்டா கேட்ஸ் அறக்கட்டளை என்று கவர்ச்சியுடன் நிற்கிறது. மல்லையா போன்றவர்கள் திவாலை அறிவித்துவிட்டு மக்கள் பணத்தை சூறையாடுகிறார்கள். உரிமையை தொலைத்த வாடிக்கையாளர்கள் அவலநிலையில் நீதிக் கருத்துகளில் மோசடியாக்கப்படுகிறார்கள்.

இப்பேற்பட்ட கார்ப்பரேட் மாஃபியாவான பில்கேட்சைத்தான் மாணவர்களின் முன்னோடியாக ஊடகங்களும், கல்வி முதலாளிகளும் இந்தியாவில் முன்னிறுத்துகின்றனர். மைக்ரோசாப்ட் நிறுவனத்தில் இந்தியர் தலைவராக வந்தார் என்றெல்லாம் துள்ளிக் குதிக்கிறார்கள்.

ஒரு இயங்குதள விற்பனையை வைதது முதலாளித்துவத்தை எடைபோட அவசியமேயில்லை. உண்மையில் சொல்லப்போனால் தொகுப்பாக நாம் வைத்த வாதங்கள் நடுத்தரவர்க்கத்தின் கோரிக்கையாகத்தான் எஞ்சியிருக்கிறது.

ஆண்டைக்கும் அடிமைக்கும் நடக்கும் வர்க்கப்போராட்டத்தில் அதாவது 'ஆயிரக் கணக்கானவர்களுக்கு எதிராக கோடிக் கணக்கானவர்களின்' போராட்டத்தில் நடுத்தரவர்க்கம் வாழ்வையும் இன்ப துன்பங்களையும் வெற்றி தோல்விகளையும், வாங்குவதாகவும் விற்பதாகவும் பார்த்துப் பழக்கப்பட்ட முதல் கூட்டம்.

இதே முதலாளித்துவத்தின் கொடூரத்தை பாட்டாளி வர்க்கம் அதாவது தன் உடல் உழைப்பை விற்றுப் பிழைப்பவர்கள் எந்தளவுக்கு எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை' நோக்கும் பொழுது நமக்கான அரசியல் அதிகாரத்தைப் பெறுவதற்கு 'இரு கைகளாலும் இரு முனைகளிலும் போராடினால்' மட்டும் போதாது பல முனைகளிலும் போராட வேண்டும் என்பதையே இச்செயல் நமக்கு உணர்த்துகிறது.

சமூக விஞ்ஞானத்தில் சாரமாக ஒன்றை முன்வைப்பார்கள். 'முதலாளித்துவம் தனக்கு சவக்குழி தோண்டுவோரையும் சேர்த்தே உற்பத்தி செய்கிறது'. அப்படியானால் விண்டோஸ் இயங்குதளத்தில் இதை எழுதி அதன் மூலமாகவே நீங்களும் வாசிக்கிறீர்கள் என்பது தற்செயலான நிகழ்வல்ல!

-இணையம்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதம வேட்பாளர் மோடி இலங்கைக்கு எச்சரிக்கை

## ஆங்கில பத்திரிகை தகவல்

(சென்னை)


இந்திய பாரதீய ஜனதாக் கட்சியின் பிரதம மந்திரி வேட்பாளர் நரேந்திர மோடி, கடந்த சில நாட்களாக தமது பிரசாரத்தின்போது இலங்கைக்கு எச்சரிக்கை விடுத்து வருவதாக ஆங்கிலப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தியாவின் பிரிஜ. த ஹிந்து போன்ற பத்திரிகைகளை கோட்டு இந்த செய்தியை இலங்கையின் ஆங்கில பத்திரிகை நேற்று முன்தினம் பிரசுரித்துள்ளது.

இந்நிலையில் மோடி தேர்தலில் வெற்றிபெற்று பிரதமரானால் இலங்கைக்கு எதிராக கடும்போக்கை கடைப்பிடிப்பார் என்று அந்த பத்திரிகை எதிர்வுகூறியுள்ளது.

பாரதீய ஜனதாக்கட்சி ஆட்சியமைத்தால் அயல்நாடுகளான இலங்கை, மலேசியா, பிஜி ஆகிய நாடுகளில் உள்ள தமிழர்களுக்கு இந்தியா முன்னுரிமை வழங்கும் என்று குறிப்பிட்டுள்ளமையை அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழக மீனவர்கள் இலங்கைப் படையினரால் தாக்கப்படுகின்ற



சம்பவங்கள் குறித்தும் குஜராத் மீனவர்கள், பாகிஸ்தான் படையினரால் தாக்கப்படுவது குறித்தும் மோடி தமது அதிருப்தியை வெளியிட்டுள்ளார்.

இந்த தாக்குதல்கள் தொடர்வதற்கு மத்திய காங்கிரஸ் நிர்வாகத்தின் உரிய செயற்பாடின்மையே காரணம் என்று அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஏற்கனவே இலங்கையில் அதிகாரப் பரவலாக்கத்தின் அவசியம் குறித்து பாரதீய ஜனதாக்கட்சி தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியுள்ளமையையும் குறித்த பத்திரிகை சுட்டிக் காட்டியுள்ளது. (அ)

# நாட்டில் தேசிய ஐக்கியம் ஏற்படவில்லை- டியூ

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த காலத்தில் இருந்து இதுவரை நாட்டில் தேசிய ஐக்கியம் ஏற்படவில்லை என சிரேஷ்ட அமைச்சர் டியூ. குணசேகர கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரம் பெற்ற பின்னர் சுமார் 10 தமிழ் அரசியல் கட்சிகள் உருவாகின. கடந்த 60 வருடங்களாக பல அரசாங்கங்கள் ஆட்சியில் இருந்தன. எனினும் தேசிய ஐக்கியம் ஏற்படவில்லை.

அதேபோல் நாட்டின் பொருளாதாரம் போன்றே நாட்டின் அபிவிருத்தியும் பாதிப்பானது.

நாட்டில் தேசிய ஐக்கியம் இல்லாதது தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் பல பிரச்சினைகள் ஏற்பட காரணமாகியுள்ளது.

நாடு பொருளாதாரத்தில் அபிவிருத்தியடைந்தாலும் தேசிய ஐக்கியம் இல்லாது போனால் அதனை தக்கவைக்க முடியாது. சகல அரசியல் கட்சிகளும் இதனை உணர்ந்து செயற்பட வேண்டும்.

தமிழ் அரசியல் கட்சிகள் இந்தியாவுக்கோ, ஐ.நாவுக்கோ என்ற தமது பிரச்சினைகளை கூறுவதில் பயனில்லை. அவற்றை உள்நாட்டில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்றார். (அ)

## பொதுபலசேனாவின் நிறைவேற்று அதிகாரிக்கு உயிர் அச்சுறுத்தல்

(கொழும்பு)

பொதுபல சேனா இயக்கத்தின் நிறைவேற்று அதிகாரிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொதுபல சேனா இயக்கத்தின் நிறைவேற்று அதிகாரி டாக்டர் திலந்த விதானகே, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்சவிடம் இந்த முறைப்பாட்டை செய்துள்ளார்.

பல்வேறு தரப்பினர் நேரடியாகவும் மறைமுகமாகவும் கொலை அச்சுறுத்தல் விடுத்து வருவதாகத் தெரிவித்துள்ளார்.

அரசாங்கத்திற்கு எதிராக செயற்பட்டு வருவதாக தம்மீது சிலர் பழி சுமத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார் அவர்.

நாட்டின் பொறுப்புணர்ச்சி மிக்க பிரஜை என்ற காரணத்தினால் தாம் நாட்டை விட்டு வெளியேறிச் செல்லவில்லை என தெரிவித்துள்ளார். (அ)



நுவரெலியா வசந்த காலத்தை முன்னிட்டு நுவரெலியா பொலிஸ் திணைக்களத்தினால் ஏற்பாடு செய்திருந்த விசேட நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை நுவரெலியா மாநகர சபை சினிசிட்டா மைதானத்தில் நடைபெற்ற போது...

# அமெரிக்காவின் யோசனை நாட்டுக்கு அச்சுறுத்தல்

## ரவிநாத் ஆரியசிங்க தெரிவிப்பு

ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்ட இலங்கைக்கு எதிரான யோசனை தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை என்று ஜெனீவாவுக்கான வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க மீண்டும் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க யோசனை, இறைமையுள்ள நாடு ஒன்றுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்துகிறது. அத்துடன் சர்வதேச நியமங்களை மீறுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பினர் நாடு ஒன்றுக்கு எதிராகவும் அதன் உறவுகளுக்கு எதிராகவும் அமைந்துள்ளது. எனவே அதனை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கை இணங்காது.

குறித்த யோசனையை கொண்டு வந்து மனிதவுரிமைகள் பேரவையில் நிறைவேற்றிய அமெரிக்காவும் பிரித்தானியாவும் யோசனை நிறைவேற்றத்தை நடைமுறைப்படுத்துமாறும் வலியுறுத்தல்களை விடுத்து வருகின்றன.

அமெரிக்காவின் தெற்காசிய விவகாரங்களுக்கான பிரதி இராஜாங்க செயலாளர் நிஷா பிஸ்வால், அண்மையில் வெளியிட்ட கருத்து ஒன்றில் ஜெனீவா யோசனையை நடைமுறைப்படுத்தினால் இலங்கையுடன் இராணுவ ஒத்துழைப்புக்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று குறிப்பிட்டிருந்தார்.

இந்த சந்தர்ப்பத்திலேயே ரவிநாத் ஆரியசிங்கவின் கருத்து வெளியாகியுள்ளது. (அ)

# இன்று ஒரு தகவல்

## தவளையின் தலைக்கனம்

ஓர் ஊரில் ஒரு பெரியவர் இருந்தார். அவர் சொல்லும் அறிவுரைகளைக் கேட்பதற்காக பலர் அவரைத் தேடி வருவதுண்டு.

ஒருநாள் அவர் உபதேசம் செய்து கொண்டிருந்தார். சீடர்கள் பலர் எதிரில் உட்கார்ந்து அவரது அறிவுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தச் சமயத்தில் புதிதாக ஒரு ஆள் வந்தான். மிகவும் அடக்கமாக ஒரு மூலையில் உட்கார்ந்தான். உபதேசத்தைக் கேட்டான்.

யாரிடமும் எதுவும் பேசவில்லை. கடைசிவரைக்கும், அமைதியாக இருந்து கேட்டுவிட்டு அவன் பாட்டுக்கு எழுந்து போய் விட்டான்.

அதன் பின் தினமும் வர ஆரம்பித்தான். அவனுடைய அடக்கம்-பணிவு எல்லோரையும் ஆச்சரியப்பட வைத்தது.

ஒருநாள் அந்தப் பெரியவரும் அவருடைய இன்னொரு சீடரும் வெளியூருக்குப் போனார்கள். போகும் வழியில் ஒரு நதி. அதைக் கடந்த போக வேண்டும். படகில் ஏறி உட்கார்ந்து அடுத்த கரையில் போய் இறங்கினார்கள்.

அங்கே ஒரு ஆள் உட்கார்ந்திருந்தான். அவன் மிகவும் உல்லாசமாகக் காற்று வாங்கிக் கொண்டு உட்கார்ந்திருந்தான். இவர்கள் முதலில் அவனைக் கவனிக்கவில்லை.

"என்ன... எப்படியிருக்கிறாய் சௌக்கியமாக இருக்கிறாயா?" என்று பெரியவரைப் பார்த்துக் கேட்டான்.

அதற்குப் பின்னர்தான் இவர்கள் அவனைப் பார்த்தார்கள். இவர்களுக்கு ஆச்சரியம்!

வழக்கமாக வந்து பணிவாக உட்கார்ந்து உபதேசம் கேட்டுக் கொண்டு போவானே... அதே ஆள் தான்!

அவ்வளவு அடக்கமாக இருந்தவன், இப்பொழுது ஆணவத்துடன் மரியாதையில்லாமல் பெரியவரைப்பார்த்து " எப்படியிருக்கிறாய்?" என்கிறானே கூட வந்த சீடனுக்குக் கோபம்.

பெரியவர் முகத்தில் இலேசான புன்னகை.

ஒன்றும் பேசாமல் இவர்கள் பாட்டுக்கு வந்தார்கள்.

சிறிது தூரம் வந்ததும் சீடன் "இவன் பேசிய தோரணையே சரியில்லையே" என்றான்.

"இவனுக்குப் பணம் கிடைத்திருக்கிறது. அதனால் தான் இப்படிப் பேசுகிறான்" என்றார் குரு.

"பணம் கிடைத்தால் இப்படிப் பேசுவதா?"

"இவன் மட்டும் இல்லை... மனித இயல்பே பணம் வந்தால் மாறிப் போய்விடும்! இவன் ஒரு சராசரி மனிதன். என்ன பண்ணுவான்... பாவம்!"

" பணம் வந்தால் மனம் தடுமாறும் என்று சொல்கிறீர்களா?"

" தவளையே தடுமாறிப்போன கதை தெரியுமா உனக்கு ?"

" தெரியாதே"

" சொல்கிறேன் கேள்." பெரியவர் சொல்லத் தொடங்கினார்.

ஓர் ஊரில் ஒரு தவளை இருந்தது. மற்ற தவளைகள் போலல்லாமல் இதன் தலை கொஞ்சம் நிமிர்ந்தது.

ஒருநாள் யானை ஒன்று அந்தத் தவளையைத் தாண்டிப் போனது. அவ்வளவுதான். தவளைக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே வளையிலிருந்த வெளியே வந்தது.

அந்த யானையை எட்டி உதைப்பதற்காக காலைத்தூக்கியதாம். அதுமட்டுமல்ல, " உனக்கு எவ்வளவு துணிச்சல்? என்னைத் தாண்டிக் கொண்டு போகிறாய்?" என்றுவேறு மனதுக்குள் நினைத்ததாம்.

சீடன் சிரித்தான்.

" ஏன் சிரிக்கிறாய்? என்று கேட்டார் பெரியவர்"

" அந்தத் தவளை நடந்து கொள்ளும் விதத்தைப் பார்த்தால் சிரிப்புத்தான் வருகிறது"

" அது ஏன் அப்படி நடந்து கொண்டது தெரியுமா?"

" தெரியவில்லையே?"

"அந்தத் தவளை தன் வளைக்குள் ஒரு ரூபாய் வைத்திருந்ததாம். அதனால் தான்!"

சீடன் யோசிக்க ஆரம்பித்தான். அவனுக்கு புரிய அரம்பித்தது.

ஒரு ரூபாய் காசு ஒரு தவளையை அப்படிப்பேச வைத்து விட்டதென்றால்...மனிதனின் கையில் பணம் வந்தால் அவனுடைய மனம் சும்மா இருக்குமா?

இன்று நடைபெறும் பல குற்றங்களுக்கு அடிப்படைக் காரணம் பணம் தான். அதற்காகப் பணத்தைக் குறை கூற முடியாது. அதைக் கையாளத் தெரியாத மனிதன்தான் குற்றவாளி.

மனித இயல்பு மாறக்கூடிய அளவுக்குப் பணத்துக்கு அடிமையாகிவிடக் கூடாது. அதுதான் முக்கியம். ஒரு பணக்கார எறும்பு நடந்து போய்க் கொண்டிருந்ததாம்.

அதன் பின்னால் நான்கு எறும்புகள் வரிசையாக போய்க் கொண்டிருந்தது. அந்த வழியாக ஒரு யானை வந்தது. அது நினைத்ததாம்.

"ஐயோ பாவம், நாம் குறுக்கே போனால் எறும்புகள் மிதிபடும். அதனால் விலகிப்போகலாம்'' என்று நினைத்துக் கொண்டு ஒதுங்கிப் போனதாம். அதைப் பார்த்துவிட்டு அந்த எறும்பு மற்ற எறும்புகளிடம் சொன்னதாம்.

"அதோ பாருங்கள்... நம்மைப் பார்த்து விட்டு அந்த யானை பயந்து போய் ஓடுகிறது.

பாவம் அதை ஒன்றும் செய்யாதீர்கள். விட்டுவிடுங்கள். பிழைத்துப் போகட்டும் என்றதாம்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பா.ஜ.க. ஆட்சிக்கு வந்தாலும் ஈழத்தமிழர் பிரச்சினை தீராது!

"தமிழர் நலன் சார்ந்த போராட்டங்களில் என்னுடன் இணைந்து பணியாற்றியவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு கொள்கைகளைக் கொண்ட கட்சிகளோடு இணைந்து தேர்தலைச் சந்திக்கிறார்கள்.

இந்த நிலைப்பாட்டில் எனக்கு உடன்பாடு இல்லை. அதனால், இதுபோன்ற கொள்கை முரண்பட்ட கூட்டணிகளை ஆதரிக்க இயலவில்லை" மதுரை வந்திருந்த பழ.நெடுமாறனை சந்தித்த போது இப்படித்தான் அதிரடியாக ஆரம்பித்தார். அவரிடம் சில கேள்விகளை முன்வைத் தோம்.

**கேள்வி:-**"மத்தியில் மோடி தலைமையிலான ஆட்சி அமைந்தால், ஈழத் தமிழர்களுக்கு நன்மை கிடைக்கும் என்றும், ராஜபக்ஷ மீது போர்க்குற்ற விசாரணை நடக்கும் என்றும் சொல்கிறார்களே?"

**பதில்:-** "தமிழ்நாட்டு பா.ஜ.க தலைவர்கள் ஈழத்தமிழர் பிரச்சினையில் தீவிரமாகப் பேசுகிறார்கள். இலங்கைத் தமிழர் பாதுகாப்பு இயக்கத்தில் அங்கம் வகித்துச் செயற்பட்டார்கள். அதே கட்சியில் சுஷ்மா ஸ்வராஜ், சுப்பிரமணியன் சுவாமி போன்றவர்கள் ஈழத் தமிழர்களுக்கு எதிராகப் பேசிவருகிறார்கள். தமிழக பா.ஜ.க தலைவர்களால் அவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

**கேள்வி:-**தமிழகத்தில் உள்ள எல்லாக் கட்சிகளும் தேர்தல் அறிக்கைகளில் ஈழத் தமிழர் பிரச்சினை சம்பந்தமாக குறிப்பிட்டிருக்கும்போது, பா.ஜ.க வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையல் ஈழத்தமிழர் பிரச்சினை சம்பந்தமாக எதுவுமே குறிப்பிடவில்லையே?

**பதில்:-**அவர்கள் ஈழத் தமிழர் பிரச்சினையை முக்கியமாக நினைக்கவில்லை. ஏன், தமிழக மீனவர் பிரச்சினையைக் கூட அவர்கள் கண்டுகொள்ளவில்லை. தமிழக பா.ஜ.க தலைவர்கள் மட்டும் ஈழத் தமிழர் பற்றி பேசுவது தமிழ்நாட்டு மக்களைத் திருப்திப்படுத்துவதற்காகத்தான். அகில இந்தியத் தலைமை இந்தப் பிரச்சினையை அடியோடு புறக்கணித்து விட்டது."

**கேள்வி:-**"அப்படியென்றால் ஈழத் தமிழர்களின் விடுதலை, கச்சத்தீவை திரும்பப்பெறுவது, தமிழீழம் அமைய தமிழர்களிடம் வாக்கெடுப்பு நடத்துவது என்ற கோரிக்கைகளை வலியுறுத்திவரும் அ.தி.மு.க-வை நீங்கள் ஆதரிப்பீர்களா?"

**பதில்:-**"ஈழத தமிழர் பிரச்சினைக்காக சட்டமன்றத்தில் தீர்மானங்களை முதல்வர் ஜெயலலிதா நிறைவேற்றினார் என்பது உண்மையே. ஏழு சிறைவாசிகளின் விடுதலை விடயத்தில் அக்கறை காட்டினார் என்பதும் உண்மையே. அதே நேரத்தில் முள்ளிவாய்க்காலில் படுகொலை செய்யப்பட்ட தமிழர்களின் நினைவாக அரசு அனுமதியோடு கட்டப்பட்ட முற்றத்தின் பூங்காவை இடித்து நாசம் செய்தது ஏன்? அதுமட்டுமா...

ஈழத் தமிழரை ஆதரித்துப் பேசியதாகப் பல தலைவர்கள் மீது வழக்கு தொடுக்கப்படுகிறது. பிரபாகரன் படம் தாங்கிய பதாகைகள் பறிமுதல் செய்யப்படுகின்றன. ஈழத் தமிழர் ஆதரவுக் கூட்டங்கள் நடத்துவதற்கு இடம் கொடுக்கக் கூடாது என்று மண்டப உரிமையாளர்கள் மிரட்டப்படுகிறார்கள். துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் அச்சிடக்கூடாது என்று அச்சகங்கள் மிரட்டப்படுகின்றன.

ஈழத் தமிழருக்காக சட்டசபையில் தீர்மானம் நிறைவேற்றுவது மட்டும் போதும் என முதல்வர் நினைக்கிறார். கடந்த சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. எதிர்க்கட்சியாகக்கூட வர முடியாததற்கு ஈழத் தமிழர் பிரச்சினைதான் காரணம் என்பதை ஜெயலலிதா உணர்ந்திருக்கிறார். அந்த நிலை தனக்கும் வந்துவிடக் கூடாது என்பதற்காக ஈழத் தமிழர் சம்பந்தமாக சட்டசபையில் தீர்மானங்கள் நிறைவேற்றினாரே தவிர, உருப்படியான செயல்களைசெயற படுத்தத் தவறிவிட்டார்."

**கேள்வி:-**"தமிழர்களுக்கு எதிராக செயற்பட்ட காங்கிரஸ் கூட்டணியில் இருந்து தி.மு.க. விலகிவிட்டதே... தமிழர்கள் இனி அவர்களை ஆதரிக்கலாமா?"

**பதில்:-**"ஈழத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் செய்த துரோகத்தை யாரும் மறந்துவிட முடியாது. அவர்கள் செய்த துரோகத்தை மூடி மறைக்க தி.மு.க. உதவியது. தமிழ்நாட்டில் காங்கிரசுக்கு எதிரான போராட்டங்களை நீர்த்துப் போகவைப்பதில் தி.மு.க. அக்கறை காட்டியதே தவிர, இந்தப் பிரச்சினையில் உருப்படியாக எதுவும் செய்யவில்லை. ஒன்றரை இலட்சம் தமிழர்கள் கொல்லப்பட்ட குற்றத்தில் ராஜபக்ஷவுக்கு எவ்வளவு பங்கு இருக்கிறதோ, அதே அளவு பங்கு மன்மோகன் சிங்குக்கும், கருணாநிதிக்கும் உள்ளது. அப்போது தான் செய்த தவறை மறைத்து, காங்கிரஸ் மீது மட்டும் பழியைப் போட்டுவிட்டு தான் தப்பிவிடலாம் என்று நினைக்கிறார். இப்படிப்பட்ட கட்சியை தமிழர்கள் ஆதரிக்கக் கூடாது."

**கேள்வி:-**"அப்படியென்றால் தமிழர்கள் யாரை ஆதரிக்க வேணடும் என்கிறீர்கள்?"

**பதில்:-**"தமிழகத்தில் கொள்கை அடிப்படையில் கூட்டணி அமைத்திருப்பது இடதுசாரிகள் மட்டுமே. காலம் கடந்து நிகழ்ந்திருந்தாலும், சரியான முடிவு. அதை நான் வரவேற்கிறேன். கடந்த காலங்களில் கொள்கையற்ற கூட்டணிகளில் அங்கம் வகித்த போதும், ஆளுங்கட்சி செய்யும் தவறுகளைச் சுட்டிக்காட்டி கண்டிக்க கம்யூனிஸ்ட்கள் ஒருபோதும் தவறியது இல்லை. இப்போது இரண்டு கம்யூனிஸ்ட்களும் கூட்டணி அமைத்து மக்களை அணுகியிருப்பது, தமிழக அரசியலில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும். தமிழகத்தில் உள்ள கட்சிகளில் கம்யூனிஸ்ட்களைப்போல தொண்டு, தியாகம் செய்த கட்சிகள் வேறு இல்லை. அரசியலுக்கு வந்தவுடன் பல தலைவர்கள் கோடீஸ்வரர்களாகி ஆடம்பர வாழ்க்கை வாழும்போது, தோழர் நல்லகண்ணு, சங்கரய்யா போன்றவர்கள் எளிமை வாழ்க்கை வாழ்கிறார்கள். கம்யூனிஸ்ட் கட்சிகளில் மட்டுமே உட்கட்சி ஜனநாயகம் உள்ளது.

ஈழத் தமிழர் பிரச்சினைகளில் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய கவுன்சில் நல்ல தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளது.

தமிழகத்தில் பெரியார், ராஜாஜி, காமராஜர், ஜீவா, அண்ணா போன்றோர் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் தமிழர் நலன் சார்ந்த பிரச்சினைகளில் ஒற்றுமையாகச் செயற்பட்டார்கள். அந்த பொற காலம் தமிழகத்தில் மீண்டும வர வேண்டும் என்றால் இடதுசாரிகளுக்கு ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும்."



**கேள்வி:-** "மெட்ராஸ் கஃபே', "இனம்' போன்ற படங்களில் தமிழர் விரோதக் கருத்துகள் இருப்பதாக தமிழ் அமைப்புகள் போர்க்கொடி தூக்கின. "தெனாலிராமன்' படத்துக்குப் பிரச்சினை வந்தால், படைப்பாளியின் சுதந்திரம் என்கிறார்கள். "தலைவா' படத்துக் குப் பிரச்சினை வந்தபோது படைப்பாளியின் சுதந்திரத்தைப் பற்றிப் பேசவில்லையே?"

**பதில்:-**"வேண்டுமென்றே தமிழ் இனத்தையும் மொழியையும், அவமானப்படுத்தும், கொச்சைப்படுத்தும் படங்கள் வரும் போது எதிர்ப்பினை எப்படிப் பதிவு செய்யாமல் இருப்பது? அதேநேரம் வியாபார நெருக்கடிகள், தொழில போட்டிகளினால் படங்களுக்குப் பிரச்சினைகள் வரும்போது எப்படி தமிழ் அமைப்புகள் உதவ முடியும்? அது வேறு, இது வேறு."

**கேள்வி:-**"ஒருவேளை பா.ஜ.க. மத்தியில் ஆட்சிக்கு வந்தால், ஈழப் பிரச்சினையை எப்படி அணுகுவார்கள்?"

**பதில்:-**"காங்கிரஸ், தி.மு.க. போன்ற ஈழப் பிரச்சினையில் துரோகம் இழைத்த கட்சிகளே தங்களின் தேர்தல் அறிக்கையில் ஈழப் பிரச்சினையை முன்வைக்கின்றனர். முன்வைக்காத ஒரே கட்சி பா.ஜ.க. ஒன்றுதான். தேர்தல் அறிக்கையில் கூறியதை நிறைவேற்றுகிறதா இல்லையா என்பது வேறு விடயம். அதை ஒரு கண்துடைப்பாகக்கூட தேர்தல் அறிக்கையில் கூற முன்வராத இவர்கள், வந்த பிறகு அந்தப் பிரச்சினையைத் தீர்ப்பார்கள் என்று சொல்வது நம்பக்கூடியது அல்ல."

**கேள்வி:-**"ஆனால், முள்ளிவாய்க்கால் முற்றம் திறப்பு விழாவிற்கு பாரதீய ஜனதாவை நீங்கள்தானே அழைத்தீர்கள்?"

**பதில்:-**"அதை நடத்தியது உலகத் தமிழர் பேரமைப்பு. அந்த அமைப்பின் தலைவராக நான் இருந்தாலும்முள்ளிவாய்க்கால் முற்றத்தில் அரசியலுக்கு இடம் கொடுக்கவில்லை. யாரை அழைப்பது என்று செயற்குழு கூடி முடிவு செய்தபோது, ஈழப் பிரச்சினையில் துரோகம் செய்த காங்கிரஸ், தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகள் தவிர்த்து அனைவரையும் அழைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அந்த வகையில் பா.ஜ.க-வும் கலந்துகொண்டது."

**கேள்வி:-**"பாரதீய ஜனதா கூட்டணியில் திராவிடக் கட்சியான ம.தி.மு.க, காந்தியவாதி தமிழருவி மணியன் ஆதரவு, சாதிக் கட்சிகள், தே.மு.தி.க, பா.ம.க. என்று வித்தியாசமான கட்சிகள் உள்ளனவே... அவர்களின் வெற்றி வாய்ப்பு குறித்து?"

**பதில்:-**"தமிழகத்தின் கூட்டணிகள் அனைத்தும் பதவிப் பங்கீட்டுக் கூட்டணிகள் தான். எந்த அணியும் பொது வேலைத் திட்டம் என்று ஏதாவது வைத்திருக்கிறதா என்று பார்த்தால், இல்லை. சரி தேர்தலுக்குப் பிறகாவது இந்த அணிகள் அப்படியே நிலைக்கும் என்று சொலல முடியுமா என்றால்... அதுவும் இல்லை. சந்தர்ப்பவாத அரசியலுக்கு சரியான எடுத்துக்காட்டு, தமிழக அரசியல் சூழல்தான். இடதுசாரிகள் மட்டுமே கொள்கை அடிப்படையில் கூட்டணி அமைத்திருக்கிறார்கள்."

**கேள்வி:-**"இடதுசாரிகளை இறுதிவரை காக்கவைத்து அ.தி.மு.க. கடைசியில் கழட்டி விட்டிருக்கிறதே?"

**பதில்:-**"இந்தக் கட்டத்திலேயாவது இடதுசாரிகள் வெளி வந்து இனி திராவிடக் கட்சிகளை நாடி நிற்பது இல்லை என்று முடிவெடுத்திருப்பதை வரவேற்கிறேன். இதே நிலைப் பாட்டில் நின்று அடுத்த சட்டசபை தேர்தலில் முற்போக்கு சக்திகளோடு உடன்பாடுகொண்டு தேர்தலை சந்திக்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன்!"

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாட்டு ஊடகவியலாளர்களுக்கு வருகிறது புதிய நடைமுறை

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கையில் தங்கியிருக்கக் கூடிய கால எல்லையை வரையறுக்கப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் இலங்கையில் தங்கியிருக்கக் கூடிய காலவரையறை ஒன்றை நிர்ணயிப்பது குறித்து கவனம் செலுத்தப்பட்டு வருவதாக ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நீண்ட காலத்துக்கு வெளிநாட்டு ஊடகவியலாளர்களை இலங்கையில் தங்கியிருக்க அனுமதிப்பது நியாயமற்றது.

பிரித்தானியாவின் பி.பி.சீ ஊடகவியலாளர் சார்ள்ஸ் ஹெவிலாண்ட் ஐந்து ஆண்டுகள் தங்கியிருந்தார். மேலும் மூன்று மாத கால விசா நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதற்கு மேலும் விசா நீடிக்க வேண்டிய அவசியம் கிடையாது.

சார்ளஸின் விசா நீடிப்பு குறித்து இறுதித் தீர்மானம் எதுவும் எடுக்கப்படவில்லை.

மூன்று மாத கால விசா நீடிப்பின் பின்னர் மீளவும் கால நீடிப்பு வழங்கும் சாத்தியங்கள் குறைவு எனவும் அவர் தெரிவித்துள்ளார். (அ)

# முஸ்லிம் மதத் தலைவர்கள் ஜனாதிபதியை சந்திப்பர்

இலங்கையில் உள்ள முஸ்லிம் மதத் தலைவர்கள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவையும், பௌத்த மஹாநாயக்கர்களையும் சந்திக்க திட்டமிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக முஸ்லிம்கள் எதிர்நோக்குகின்ற பல்வேறு சவால்கள் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்தும் பொருட்டு இந்த சந்திப்பு இடம்பெறவுள்ளது. அனைத்திலங்கை ஜம்மியத்துல் உலமா சபை இதனை அறிவித்துள்ளது.

பௌத்த அடிப்படைவாத அமைப்பான பொதுபலசேனா கடந்த காலங்களில் மேற்கொண்டு வரும் செயற்பாடுகள் முஸ்லிம்களை மிகவும் பாதித்துள்ளது. இந்த செயற்பாடுகளை நிறுத்துவதற்கு ஜனாதிபதியும், மஹாநாயக்கர்களும் நடவடிக்கை எடுப்பார்கள் என்று தாங்கள் நம்புவதாக உலமா சபை தெரிவித்துள்ளது. (அ)

# சட்ட ஆலோசனை பெறுவதற்கு இலங்கை அகதிகளுக்கு தடை

## உலக சோசலிஸ இணையத்தளம் சுட்டிக்காட்டு

அவுஸ்திரேலியாவில் உள்ள இலங்கை அகதிகளுக்கு கடந்த இரண்டு வாரங்களுக்காக சட்ட ஆலோசனைகளை பெறவும் சட்டத்தரணிகளை சந்திக்கவும் தடைவிதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது என உலக சோசலிஸ இணையத்தளம் இதனைத் தெரிவித்துள்ளது

இதன்படி அங்குள்ள இலங்கை அகதிகள் தங்களை நேர்மையான வர்கள் என்பதை நிரூபித்துக் கொள்ள இடமளிக்கப்படுவதில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் பாதுகாப்பு விசா நிராகரிக்கப்பட்ட அகதிகள் மீண்டும் அதற்கு மேன்முறையீடு செய்யவும் அனுமதிக்கப்படுவதில்லை.

இது சர்வதேச அகதிகள் சட்டத்துக்கு எதிரானது என்று அந்த இணையத்தளம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# சூதாட்ட பந்தயம் தொடர்பில் புதிய சட்டம் வருகிறது-ஜே.வி.பி

கசினோ மற்றும் சூதாட்ட பந்தயம் தொடர்பில் அரசாங்கம், புதிய பெயரில் சட்டம் ஒன்றை கொண்டு வரவுள்ளதாக ஜே.வி.பியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜிதஹேரத் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்

கசினோ மற்றும் சூதாட்ட பந்தயங்களுடன் கூடிய இரண்டு நட்சத்திர ஹோட்டல்களை நிர்மாணிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தலை மாற்றி, வேறு விதமாக எதிர்வரும் 24 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ளது.

அரசாங்கம் சமர்ப்பிக்கவுள்ள புதிய பெயரிலான இந்த வர்த்தமானியில் திருத்தங்களை முன்வைக்க எண்ணியுள்ளது.

விஸ்தீரணமான அதி ஆடம்பர சுற்றுலா விடுதி வசதிகள் மற்றும் அதனுடன் கூடிய வசதிகளுடனான ஹோட்டல் தொகுதி என்ற பெயரிலான இந்த வர்த்தமானி அறிவித்தல் எதிர்வரும் 24, 25 ஆம் திகதிகளில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

கடந்த ஒக்டோபர் மாதம் சூதாட்ட வசதிகளை கொண்ட ஹோட்டல்களை நிர்மாணிக்கும் வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்தது.

எதிர்க்கட்சிகள் மற்றும் நாட்டில் எழுந்த கடும் எதிர்ப்புகள் காரணமாக அரசாங்கம் அதனை திரும்பப்பெற நேர்ந்தது.

இந்த நிலையில் ஏற்கனவே தாக்கல் செய்த வர்த்தமானி அறிவித்தலையே, அரசாங்கம் வேறு பெயரில் தற்போது தாக்கல் செய்ய உள்ளது.

இதற்கு நாம் ஆதரவு வழங்கப்போவதில்லை என அவர் குறிப்பிட்டார்.

# பிரிவுத்துயர் பகிர்வு



### கதிர்காமு சண்முகரத்தினம்

கரணவாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட கதிர்காமு சண்முகரத்தினம்(ஓய்வு பெற்ற நில அளவையாளர்-இலங்கை) நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு Highland Funeral Home & Cremation Centre- Scarborough Chapel, 3280 Sheppard Avenue East, Toronto, Ontario M1T 3K3, Canada என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### திருமதி பொன்னையா சிவக்கொழுந்து

மீசாலையைப் பிறப்பிடமாகவும் புளியம்பொக்கணையை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னையா சிவக்கொழுந்து நேற்று முன்தினம் சனிக்கிழமைஅன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெறும்.



### திருமதி நடராஜமூர்த்தி ஜெயலக்ஷ்மி

மானிப்பாயைப்பிறப்பிடமாகவும் கொழும்பு பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும்கொண்ட நடராஜமூர்த்தி ஜெயலக்ஷ்மி (ஓய்வுபெற்றஆசிரியர்) கடந்த18ஆம்திகதிவெள்ளிக்கிழமைஅன்றுகாலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு அவரது இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல்பொரளை கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சுப்பிரமணியம் வரதகுமார்

அம்பன் குடத்தனையைப் பிறப்பிடமாகவும் துணுக்காய் கொக்காவில் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வரதகுமார் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று கொக்காவில் வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3 மணிக்கு ஆலங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### நாகமணி சிவப்பிரகாசம்

வருணன் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும், பருத்தித்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமணி சிவப்பிரகாசம் நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் பருத்தித்துறை, சுப்பர்மடம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கிறிஸ்டி யோகராஜ்நெற்

அச்செழு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் தென்னாபிரிக்கா Lesotho ஐ வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்டி யோகராஜ்நெற் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு அவரது இல்லத்தில் (Lesotho) நடைபெறும்.



### திருமதி சின்னையா சிவபாக்கியம்

திருநெல்வேலி காளி கோயிலடியை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னையா சிவபாக்கியம் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11மணிக்கு அவரது இல்லத்தில்நடைபெற்றுபூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### ஆனந்தலெட்சுமி சிற்றம்பலம்

சுருவில் ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகவும் பம்பலப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆனந்த லெட்சுமி சிற்றம்பலம் கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### காசிப்பிள்ளை யோகேஸ்வரன்

கொல்லங்கலட்டி மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது சுன்னாகம் மயிலணியை வசிப்பிடமாகவும் கொண்ட காசிப் பிள்ளை யோகேஸ்வரன்நேற்று முன்தினம் சனிக் கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்சுன்னாகம் கொத்தியாலடிமயானத்தில்தகனம்செய்யப்படும்.



### சரவணமுத்து தில்லையம்பலம்

திருவாதணி உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து தில்லையம்பலம் (ஓய்வு பெற்ற அதிபர்) கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எள்ளங்குளம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி மயில்வாகனம் கண்ணகைப்பிள்ளை

இணுவிலைப் பிறப்பிடமாகவும் சுதுமலை தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் கண்ணகைப்பிள்ளை நேற்று முன்தினம் சனிக்கிழமை அன்று கால மானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுபூதவுடல்முற்பகல்10மணிக்குதாவடிஇந்துமயானத்தில்தகனம் செய்யப்படும்.

# நீதிபதியின் அறிவிப்பு சரியானதா?

## கருணாநிதி கேள்வி

ராஜீவ்காந்தி கொலை வழக்கில் வரும் 25ஆம் திகதிக்குள் தீர்ப்பு அறிவிக்கப்படும் என உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி சதாசிவம் அறிவித்திருப்பது. நீதிமன்ற மரபுகளுக்கு உகந்ததுதானா என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும் என திமுக தலைவர் கருணாநிதி கூறியுள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தலைமை நீதிபதியின் அறிவிப்பு, தமிழகத்தில் அரசியல் ரீதியான விளைவினை ஏற்படுத்தும் மோசமான அச்சம் பலருக்கும் எழுந்துள்ளதுடன் வழக்கறிஞர்கள் மத்தியில் பெரும்சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

வழக்கின் தீர்ப்பு மக்களவைத் தேர்தல் வாக்கெடுப்பிற்கு முன்பு வெளியாகும் என நீதிபதி கூறியிருப்பது எத்தகைய சாதக பாதகங்களை ஏற்படுத்தும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும் என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரணைமடு-யாழ்ப்பாணம் நீர் விநியோகம்

# ஒரு தாய் பிள்ளைகளை பிரிக்கும் சதித்திட்டம்

(கிளிநொச்சி)

**இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு நீர் விநியோகம் செய்யும் திட்டமானது ஒரு தாய் பிள்ளைகளிடையே பிரிவினையை ஏற்படுத்தி மோதல்களை தோற்றுவிக்கும் திட்டமென ஆர்ப்பாட்டக்காரர்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

இரணைமடு யாழ்ப்பாணத்திற்கான நீர் விநியோகத் திட்டத்தை இடைநிறுத்துமாறு கோரி அடையாள உண்ணாவிரதப் போராட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கரைச்சிப் பிரதேச வளாகத்தில் நடைபெற்றது.

இப் போராட்டத்தில் கலந்து கொண்ட விவசாயிகள் இத் திட்டம் தொடர்பான கருத்துக் களையும் குறிப்பாக இத்திட்டத்தின் ஆய்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட பின்பே இத்திட்டத்தின் செயற்பாடு ஆரம்பிக்கப்படுமென அறிவிக்கப்பட்ட நிலையிலும் தேசிய வடிகால் அமைப்புச் சபையினால் பெரியளவிலான விளம்பர ஊடகங்கள் மூலமாக தெரியப்படுத்தப்பட்டமையை கண்டித்து அவர்களால் கவலை வெளியிடப்பட்டது.

யாழ்ப்பாண மக்களுக்கான நீர் விநியோகம் செய்வதற்கு எவருமே தடையாக இருக்கவில்லையென்பதையும் இரணைமடு குளத்தின் கீழாக தற்போது நடைமுறைப்படவுள்ள திட்டமானது யாழ். மக்களையும் கிளிநொச்சி வாழ் மக்களையும் பிரிவினைக்குள்ளாக்கிமோதல் களை ஏற்படுத்தும் அரசியல் சதித் திட்டமே எனவும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

சில திட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அந்த பகுதியின் சரியான நடவடிக்கைகளையும் சாதக பாதகங்களையும் கவனத்தில் எடுக்காது அரசுடன் சார்ந்து நிற்கும் சில குழுக்கள் இதற்கு ஆதரவு தெரிவித்து நிற்பது வேதனைக்குரிய விடயமெனவும் யாழ்ப்பாண மக்கள் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானது எனவும் கருத்து பரிமாற்றப்பட்டது.



இதனடிப்படையில் முரசுமோட்டை 2 ஆம் வாய்க்கால் பகுதியில் வசித்து வந்த முன்னாள் பொறியியலாளர் ஆறுமுகத்தினூடாக வகுக்கப்பட்ட திட்டம் நடைமுறைப்படுத்தும் பட்சத்தில் யாழ்ப்பாண மக்களுக்கு குடிநீர் கிடைப்பதோடு இரணைமடுவின் கீழ் விவசாயம் செய்யும் பயனாளிகள் பெரியளவில் நன்மைகளைப் பெறக்கூடிய வாய்ப்புக்களும் உண்டாகும்.

எனவே, உலக வங்கியினூடாக ஒதுக்கப்பட்ட நிதியைக் கொண்டு நன்னீர் ஏரிகளை பயன்படுத்தி குடிநீர் வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்வதோடு இரணைமடு குளத்தையும் அபிவிருத்தி செய்து கிளிநொச்சி விவசாயிகளின் நலனுக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலும் திட்டத்தை அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படாதது, ஒரு தாய் வயிற்று பிள்ளைகளான கிளிநொச்சி-யாழ்ப்பாண மக்களிடையே பிரிவினை ஏற்படுத்தும் சதி முயற்சியாக உள்ளது.

அத்தோடு கிளிநொச்சி மாவட்டத்தில் தற் போது நிலவிவரும் கொடும் வறட்சி காரணமாக ஏராள கிராமங்களில் காணப்படுகின்ற வறட்சி, நீர் பற்றாக் குறைகளை மூடிமறைத்து வலிந்து யாழ்ப்பாண மக்களையும் கிளிநொச்சி மக்களையும் பகைவர்கள் ஆக்குவதற்கு மோசமான முறையில் ஊடகங்களில் விளம்பரங்களை மேற்கொண்டு அரச கைக்கூலிகள் தொடர்பாக வடமாகாண மக்கள் விழிப்புணர்வுடன் இருக்கும் படி வேண்டுகோள்விடப்பட்டிருக்கின்றது.



கிளிநொச்சி மக்களை பிச்சைக்காரர்கள் ஆக்கி அவர்களை கையேந்திகளாக மாற்றி ஏழை மண்ணாக வன்னி மண்ணை மாற்ற நினைப்பவர்கள் இந்த நீர் திட்டம் நிறைவேற்றப்படுமானால் அதற்கு எதிராக உயிர் கொடுக்கும் சூழ்நிலையும் ஏற்படுமென அடித்துரைக்கப்பட்டது.

விழுந்தவனை மாடேறி மிதிப்பது போல இரணைமடு நீர் விநியோகத்தை நிறைவேற்றி தமது பணப்பைகளை நிரப்ப நினைப்பவர்களுக்கு எதிராக தொடர்ந்தும் கமக்காரர்கள் கிளர்ந்தெழுந்து போராடுவார்கள் என்றும் வலியுறுத்தப்பட்டது.

இப்போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் பொ.கஜேந்திரகுமார், செயலாளர் செ.கஜேந்திரன், மணிவண்ணன், கிளிநொச்சி மாவட்ட பாராளு மன்ற உறுப்பினர் சி.சிறிதரன், வட மாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாண சபை உறுப்பினர்களான ப.அரியரத்தினம், நா.பசுபதிப்பிள்ளை, கரைச்சி பிரதேச சபைத் தவிசாளர் நா.வைகுகராசா, இரணைமடு குள கமக்கார அமைப்பின் பிரதிநிதிகள், விவசாயிகள் எனப் பலர்கலந்துகொண்டனர். (9-6-4-254)

# புதுக்குடியிருப்பு மீன்சந்தையின் கட்டட வேலை அடுத்த மாதம்

(குரும்ன்காடு)

புதுக்குடியிருப்பு பிரதேச பொதுச் சந்தையின் நிர்மாணப்பணிகள் இன்னும் பூரணப்படுத்தப்படாத நிலையில் மீன்சந்தைக்கான கட்டட வேலைகள் ஒரு மாத காலப்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என பிரதேச சபையினர்தெரிவித்துள்ளதாக வடமாகாண சபை உறுப்பினர ரவிகரனிடம் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் முறைப்பாட்டினை அடுத்து இது தொடர்பில் பிரதேச சபையினரிடம் வினவிய போதே அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பொதுச் சந்தையின் கட்டுமானப்பணிகள் பூரணப்படுத்தப்படாத நிலை தொடர்வதாக மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையில், மக்களின் முறைப்பாட்டினை தொடர்ந்து அங்கு சென்று பொதுச்சந்தையைப்பார்வையிட்ட வடமாகாண சபை உறுப்பினர் மிகவும் மோசமான நிலையில் பொதுச்சந்தை இருப்பதையும் நிரந்தர மலசல கூட வசதிகள் இன்றி காணப்பட்ட நிலையையும் அவதானித்தார்.

மக்கள் செறிவாக காணப்படும் பகுதியில் உள்ள பொதுச்சந்தையின் மீள் கட்டுமானப்பணிகள் துரிதப்படுத்தப்படவேண்டும் எனவும் விரைவில் ஆண் பெண் இருபாலாருக்குமான நிரந்தர மலசல கூடம் அமைக்கப்பட வேண்டும் எனவும் பிரதேச சபையிடம் கோரியிருந்தார்.



இன்னும் கட்டுமானப்பணிகளுக்கு உட்படாத புதுக்குடியிருப்பு மீன் சந்தையின் தற்போதைய தோற்றம்

கோரிக்கைக்கிணங்க நிரந்தர மலசல கூடம் அமைக்கப்பட்டுள்ள நிலையில் அடுத்த மாதமளவில் மீன்சந்தைக்கான கட்டட வேலைகள் ஆரம்பிக்கப்படும் என பிரதேச சபையினரால் உறுதியளிக்கப்பட்டது.

மீன் சந்தைக்கான அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு அனுமதிக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் இன்னும் ஒரு வாரத்தினுள் அனுமதி கிடைத்துவிடும் எனவும் அதன் பின் கட்டடம் அமைப்பதற்கான கேள்வி கோரல் செய்யப்பட்டு எப்படியாவது இன்னும் ஒரு மாத காலத்தில் புதுக்குடியிருப்பு மீன்சந்தைக்கான வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிடுமெனவும் பிரதேச சபை உத்தியோகத்தர்கள் தெரிவித்துள்ளனர். (9-6-250)

# கோழி பண்ணை திறப்பு விழா

(முல்லைத்தீவு)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவிலுள்ள பேராவில் கிராமத்தில் அமைக்கப்பட்ட கோழிப் பண்ணை இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

ஐக்கிய அபிவிருத்தி நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட இக் கோழிப் பண்ணையை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் இ.பிரதாபன் திறந்து வைக்கவுள்ளார்.

அக் கிராமத்திலுள்ள நலிவுற்ற குடும்பங்கள், கணவனை இழந்த பெண்கள், மாற்றுத்திறனாளிகள் உள்ளிட்ட 35 பேர் பயனடைவதற்காகவே கோழிப் பண்ணை திறந்து வைக்கப்படவுள்ளது. (9-267)

# எழுத்தாக்கப் போட்டி முடிவுகள்

(பூநகரி)

பூநகரி கோட்டத்தினால் நடத்தப்பட்ட எழுத்தாக்கப் போட்டிகளின் முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதன்படி முதல் மூன்றிடங்களைப் பெற்றவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

**பிரிவு 01**
**ஆக்கம் எழுத்து**

அ.சுரேந்திரன்(கிளி/வேரவில் ம.வி), ச.பானுசா(கிளி/செல் லியாதீவு அ.த.க.பாடசாலை), அ.துசாந்தினி(கிளி/கறுக்காய்த்தீவு ம.வி)

**கட்டுரை வரைதல்**
**பிரிவு 02**

இ.சரண்யா(கிளி/முழங்காவில்ம.வி), ந.பிரிந்தா(கிளி/ஜெயபுரம் ம.வி), தி.ஜஸ்ரிகா(கிளி/ஸ்ரீ விக்கினேஸ்வரா வித்தி யாலயம்)

**பிரிவு 03**

ந.அனோஜா(கிளி/முழங்காவில் ம.வி), சு.டிலக்சனா (கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை), ச.சயிந்தா(கிளி/ஞானிமடம் அ.த.க.பாடசாலை)

**பிரிவு 04**
**கட்டுரை வரைதல்**
**இலக்கியம் நயத்தல்**

ந.அகல்யா(கிளி/முழங்காவில் ம.வி), ச.தர்சினி(கிளி/வேரவில் ம.வி), க.கிறேஸ் ஜெற்றியான்(கிளி/பூநகரி மத்திய கல்லூரி)

**பிரிவு 05**
**தமிழியற் கட்டுரை வரைதல், இலக்கியம் நயத்தல்**

ந.தட்சாயினி(கிளி/பூநகரி மத்திய கல்லூரி), ப.நிலக்சனா(கிளி/வேரவில் இ.ம.வி), து.துளசி(கிளி/நல்லூர் ம.வி)

**பிரிவு 04**
**இலக்கணப்போட்டி**

செ.துவாரகா(கிளி/விக்னேஸ்வரா வித்தியாலயம்), வி.கலைவாணி(கிளி/ஜெயபுரம் ம.வி), யோ.டினோஜா(கிளி/நல்லூர் ம.வி), மு.பர்மிலன் (கிளி/முழங்காவில் ம.வி).

(தொடரும்)




# மேதினக் கூட்டம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மேதினக் கூட்டம் வழமை போல் இவ்வருடம் நடைபெறவுள்ளதாக கரைச்சி பிரதேச சபை தவிசாளர் நா.வை.குகராசா தெரிவித்துள்ளார்.

கடந்த 2 வருடங்களாக கரைச்சி பிரதேச சபையின் வளாகத்திலேயே மே தினக் கூட்டம் இடம்பெற்றது.

எனினும் இவ்வருடம் கிளிநொச்சி ஸ்கந்தபுரம் மணியங்குளத்தில் இடம்பெறவுள்ளதனால் அனைவரையும் குறித்த இடத்திற்கு சமூகம் அளிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி பொதுச் சந்தை அன்றைய தினம் மூடப்படவுள்ளதாகவும் அவர்மேலும்தெரிவித்துள்ளார். (9-271)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தும்மல் கிழவியை விட
இருமல் கிழவி மேல்
~ தமிழ்ப் பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## அரச பணியாளர்களின் ஆரோக்கியம் பற்றிச் சிந்தியுங்கள்

நாட்டின் அபிவிருத்திக் குறிகாட்டிகளில் சுகாதாரம், ஆயுள் எதிர்பார்க்கை, இறப்புவீதம் என்பனவும் உள்ளடங்கும்.

அந்த வகையில் இலங்கையின் அபிவிருத்திக் குறிகாட்டிகளில் ஆயுட்காலம் என்பது திருப்திகரமானதாக இருப்பதை ஏற்றுத்தானாக வேண்டும்.

எனினும் ஆயுட்காலம் அதிகமாக உள்ளது என்பதற்காக அனைவரும் ஆரோக்கியமாக இருக்கின்றனர் என்று பொருள் கொள்ளமுடியாது.

மாறாக நம் மத்தியில் இருக்கக்கூடிய பலர் ஏதோ ஒருவகையில் நோயாளர்களாக இருப்பதை நாம் ஏற்றுத்தானாக வேண்டும்.

முப்பத்தைந்து வயதுக்கு அப்பால் சலரோகம் என்ற நோய் பெரும்பாலானவர்களைப் பீடித்துவிடுகிறது. 35 வயதில் சலரோகத்திற்கு ஆளானவர் 75 வயது வரை உயிர் வாழ்கின்றார் எனில், அவர் 40 ஆண்டுகள் சலரோகக் கட்டுப்பாட்டிற்கான மருந்தை உட்கொண்டு வருகிறார் என்ற உண்மையையும் நாம் ஒருகணம் சிந்திக்க வேண்டும்.

ஆக, இலங்கையின் ஆயுட்கால அதிகரிப்பு என்பது மருந்து மாத்திரைகளுடன் வாழுதல் என்பதையே சுட்டி நிற்கின்றது.

எனவே இந்த உண்மையை பொருளியலாளர்கள் உணர்ந்து கொள்வதன் மூலமாக, நோயற்ற வாழ்வு என்ற புதிதான ஒரு சுட்டியை நாட்டின் அபிவிருத்திக் குறிகாட்டிக்குள் சேர்த்துக் கொள்வது அவசியமானதாகும்.

இதற்கப்பால் அரச பணிகளில் ஈடுபட்டுள்ள பலர், ஏதோ ஒரு வகையில். தொற்றாத் தன்மையுள்ள நோயின் தாக்கத்திற்கு ஆளாகியிருப்பதை அறிய முடிகின்றது.

குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்திலிருந்து வன்னி மாவட்டங்களுக்கு இடமாற்றம் வழங்கப்பட்ட ஆசிரியர்களில் பெரும்பாலானவர்கள் தங்களின் உடல் ஆரோக்கியக் குறைபாடுகளை முன்வைத்து தங்களின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுமாறு கேட்டுள்ளனர்.

இங்கு வன்னிக்கான இடமாற்றம் என்பதற்கு அப்பால், ஆசிரியர்கள் உள்ளிட்ட அரச பணியாளர்கள் நோய்த்தாக்கத்துடன் தங்களின் பணியைச் செய்வது என்பது கடினமான விடயமே.

எனவே ஆசிரியப்பணி உள்ளிட்ட அரச சேவையை உச்சமாகப் பெற்றுக் கொள்வதற்காகவும் பணியாளர்கள் ஆரோக்கியமாக வாழ்வதற்காகவும் அரச அலுவலகங்களில் காலை வேளையில் அரைமணி நேரத்தையேனும் ஒதுக்கீடு செய்து யோகாசனம், தியானம், பிராணாயாமம் போன்ற உடல் ஆரோக்கியப் பயிற்சிகளை அனைவருக்கும் வழங்கும் திட்டத்தை அமுல்படுத்துவது காலத்தின் கட்டாயமாக உள்ளது.


பாடசாலைகளில் இடம்பெறும் காலைப் பயிற்சிகளில் யோகாசனம், தியானம், பிராணாயாமம் போன்ற பயிற்சிகளை உள்ளடக்கும் அதேவேளை மாணவர்களுடன் அதிபர், ஆசிரியர்களும் சேர்ந்து இப்பயிற்சியை மேற்கொள்வதான திட்டத்தை கட்டாயப்படுத்துவது நோயற்ற மனித வளத்தை ஆக்குவதற்கான வழிமுறையாக இருக்கும்.

இவையாவற்றுக்கும் மேலாக, அரச பணிகளில் இணைகின்றபோது மருத்துவப் பரிசோதனை செய்கின்ற நடைமுறையை, சேவையில் இருக்கும் ஒவ்வொரு ஐந்து ஆண்டுகளுக்கும் ஒருமுறையேனும் மருத்துவப் பரிசோதனை செய்வதான ஏற்பாடுகளை அறிமுகப்படுத்துவது அரச பணியாளர்களின் ஆரோக்கியத்தை அறிவதற்கும் நோய்களை இனங்கண்டு சிகிச்சை பெறுவதற்கும் இடமாற்றம், பதவி மாற்றம் போன்ற நிர்வாக செயன்முறைகளை செம்மையாக மேற்கொள்வதற்கும் பேருதவியாக அமையும் எனலாம்.

எனவே எங்களின் ஆரோக்கியத்தை நாங்களே உறுதி செய்தல் என்ற நடைமுறையின் கீழ் மேற்போந்த விடயத்தை வடக்கு மாகாண சபை அமுல்படுத்துவது காலம் உணர்ந்த தேவையாகும்.

# பா.ஜ.கட்சியுடன் கூட்டணியமைத்து வைகோ துரோகமிழைத்து விட்டார்

## சீமான் கொதிப்பு



(சென்னை)

இந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சிக்கு போடவேண்டியது வாக்கு இல்லை. வாய்க்கரிசி தான். மத்தியில் காங்கிரஸ் ஆட்சி, பா.ஜ.க. ஆட்சி என மாறி மாறி ஆட்சி நடத்தி இருந்தாலும் கடந்த 16 ஆண்டுகளாக மத்திய அமைச்சரவையில் பங்கு பெற்ற தி.மு.கவினால் தமிழ்நாட்டுக்கு என்ன பலன் கிடைத்தது என்பதை சிந்தித்து பார்க்க வேண்டும்? என நாம் தமிழர் கட்சி தலைவர் சீமான் தெரிவித்துள்ளார்.

விழுப்புரம் நாடாளுமன்ற அ.தி.மு.க வேட்பாளரை ஆதரித்து திருச்சிற்றம்பலம் கூட்டுரோட்டில் உரையாற்றிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவிததார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேர்தல் அறிக்கையில் கச்சதீவை மீட்க தீவிரமாக போராடுவோம் என்கிறார் கலைஞர். அப்படியானால் கச்சதீவை மீட்க இதுவரை தீவிரமாக போராடியது இல்லையா, முதல்வர் பதவியில் இருந்த கலைஞர் இதற்கு போராடியது இல்லை என்றால் ஏன் முதல்வர் பதவி வேண்டும், தேர்தலில் ஏன் வாக்கு கேட்டு வருகிறீர்கள்?

இனப்படுகொலையின் போது உண்ணாவிரதம் என்று போராட்ட நாடகத்தை நடத்தி அங்கு பல இலட்சம் மக்களை கொன்று குவித்த மத்திய அரசுக்கு கைகோர்த்து இருந்தாரே கலைஞர் அவருக்கு தமிழக மக்கள் வாக்குப் போடுவார்களா? நிச்சயம் அவருக்கு வாக்குப் போட மாட்டார்கள்.

இலங்கையில் நடைபெற்றது இனப்படுகொலை, ராஜபக்ஷ போர்க் குற்றவாளி என்று தமிழக சட்டசபையில் தீர்மானம் கொண்டு வந்தவர் ஜெயலலிதா. அதை மத்திய அரசு ஏற்கவில்லை,

இந்தியாவில் புத்தர் சிலையினை திறநது வைக்க பாஜகவின் மூத்ததலைவர் சுஷ்மா சுவராஜ்ஜால் வரவழைக்கப்பட்டவர் ராஜபக்ஷ, அந்த பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்துள்ளாரே வைகோ, இது துரோகமில்லையா? இலங்கையின் நம் இனத்தில் வழிபாட்டு தலங்களை இடித்துவிட்டு இந்தியாவிற்கு வந்து ஆந்திராவில் சாமி தரிசனம் செய்கிறாரே ராஜபக்ஷ, அவரை ஆதரித்த காங்கிரஸ் கட்சி தமிழகத்திலிருந்து விரட்டப்பட வேண்டும்.

விஜயகாந்த் தமிழினத்திற்காக போராட்டங்கள் நடத்தியது உண்டா? போராட்டம் நடத்தினால் காங்கிரஸ் கட்சியுடனும் பாஜகவுடன் கூட்டணி வைக்க முடியாது. அரசியல் இலாபம் கிடைக்காது. முரசு அதிர தாமரை மலரும் என்கிறாரே விஜயகாந்த். தஞ்சையில் வந்து முரசு அதிரட்டும் பயிர்கள் வளருமா என்று பார்ப்போம்.

எல்லாவற்றிலும் தமிழகத்தைவிட பின் தங்கிய குஜராத் முதல்வர் மோடி பிரதமர் பதவிக்கு போட்டியிடும் போது எல்லா துறையிலும் முதன்மை பெற்ற தமிழக முதல்வர் ஜெயலலிதா பிரதமர் பதவிக்கு போககூடாதா? இலங்கையில் தமிழனம் காக்கப்படவேண்டும், கச்சதீவு மீட்கப்படவேண்டும், இலங்கை அரசால் தமிழக மீனவர் தாக்கப்படுவது தடுக்கபடவேண்டும் என்றால் தமிழக முதல்வர் பிரதமர் பதவிக்கு வரவேண்டும் என்றார். (அ)

## சட்டவிரோதமாக பயன்படுத்தப்பட்ட தங்கூசி வலைகள் மீட்கப்பட்டன

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் அதிரடி நடவடிக்கையில் பல இலட்சம் பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்கப்பட்டுள்ளதாக யாழ். மாவட்ட நீரியல்வளத்துறை திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அதன்படி திணைக்களத்தினருக்கு கிடைத்த தகவலின்படி வேலணை, அம்பியநகர், செட்டிபுலம் ஆகிய இடங்களுக்கு மேற்கொண்ட அதிரடி நடவடிக்கையில் கடற்கரையோரத்தில் பல இலட்சம் பெறுமதியான தங்கூசி வலைகள் மீட்கப்பட்டன.

சட்டவிரோத உபகரணமாக அடையாளப்படுத்தப்பட்ட தங்கூசி வலையானது தற்போதும் கடற்தொழிலில் திருட்டுத்தனமாக பயன்படுத்தப்பட்டு வருகின்றது. எனினும் மீட்கப்பட்ட வலைகளுக்கு எவரும் உரிமை கோரவில்லை.

இன்று ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளதாகவும் இவ்வாறான உபகரணங்களை பயன்டுபத்துபவர்களுக்கு எதிராக தொடர்ந்தும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (செ-6)

## மும்மொழிக் கொள்கை பேருந்துக்களில் புறக்கணிப்பு

இலங்கை போக்குவரத்துச் சபைக்கு சொந்தமான பல பேருந்துக்களில் மும்மொழிக் கொள்கை புறக்கணிக்கப்பட்டுள்ளதாக அரச மொழிகள் ஆணைக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

இது தொடர்பில் நீதிபதியின் ஊடாக தெளிவூட்டப்பட்டு அதற்கான அறிக்கையை வழங்குவதற்கு போக்குவரத்து சபைக்கு இரண்டு வாரம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் நிமல் ரணவக்க தெரிவித்துள்ளார். (செ-6)

## ஆமை வெட்டிய பெண் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குருநகரின் தண்ணீர்த் தொட்டியடிப் பகுதியிலுள்ள வீடொன்றில் 20 கிலோ நிறையுடைய ஆமையொன்றை வெட்டி இறைச்சியாக்கிக் கொண்டிருந்ததாகக் கூறப்படும் 27 வயதான பெண்ணொருவரை சட்டவிரோத தடுப்புப் பிரிவு பொலிஸார் நேற்று அதிகாலை கைது செய்ததாக யாழ்ப்பாண பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் சட்டவிரோத தடுப்புப் பிரிவு பொலிஸாருக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து சந்தேக நபரை கைது செய்ததாகவும் பொலிஸார் கூறினர்.

இச்சம்பவம் தொடர்பில் யாழ். பொலிஸார் விசாரணைகளினை மேற்கொண்டு வருவதோடு குறித்த இடத்தில் தேடுதல் நடவடிக்கைகளினையும் மேற்கொண்டு வருகின்றனர். (அ-4)

## வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

### நினைப்பது நடக்கும்



விழிப்பு நிலையிலே இருக்கப் பழகிக் கொண்டோமானால் மற்றவர்களுடைய எண்ண அலைகள் தீமை விளைவிப்பனவாக இருந்தாலும் உணர்ச்சிக்கு ஊக்கம் கொடுப்பவையாக இருந்தாலும் அவை நம்மைப் பாதிக்கா. உதாரணமாக, நான்கு வானொலி நிலையங்கள் நான்கு விதமான வேறுபட்ட நிகழ்ச்சிகளை ஒரே நேரத்தில் ஒலிபரப்புகின்றன. நம் ரேடியோவை எந்த அலை நீளத்தில் வைக்கிறோமோ அது மாத்திரம் தான் இங்கே கேட்கும். மற்றவை எல்லாம் வந்து மோதும்; ஆனால் கேட்காது.

அதுபோலவே தேவையற்ற அலைக்கழிப்பும் பாதிப்பும் இல்லாமல் விட்டுவிலகி எந்த நிலையில் இருக்கிறோமோ அந்த நிலைக்கு ஏற்ப நமக்கு என்ன தேவையோ அது கிடைக்கும். நாம் என்ன செய்ய வேண்டுமோ அதை நினைப்போம். நாம் என்ன நினைக்கிறோமோ அதைச் செய்யமுடியும் என்ற அளவிலே மனிதத் திறமை வெளிப்படுகிறது. இந்த மனிதத் திறமை அதிகரிக்க அதிகரிக்க என்ன ஆகும்? நாம் எங்கு போனாலும் நமக்காக மற்றவர் தாமாகவே அந்த அலையிலேயே கட்டுப்பட்டு நம் மதிப்பை உணர்ந்து புரிந்து கொள்ள அவர்களுக்கு எண்ணம் தோன்றும். எங்கே போனாலும் நமக்கு வெற்றியாகவே இருக்கும்.

அப்படி எங்கேயாவது வெற்றி இல்லாமல் தடை ஏற்பட்டாலும் அந்தத் தடையினால் நமக்குக் கெடுதல் இல்லை. நம்மைத் திருப்பி விடுவதற்காக இந்த அலை நீளத்தில் தேவையில்லாதவற்றைத் தள்ளி விடுகிறது. அதனால் அந்த வேலை நடக்கவில்லை என்று எண்ணி அமைதி அடைந்தால் எந்தக் காலத்தில் எந்தச் சூழ்நிலையில் அந்த வேலை நடக்க வேண்டுமோ அது தானாகவே நடந்து விடும்.

முற்றறிவு ( Total Consciousness) என்று சொல்லக்கூடிய பிரபஞ்சம் முழுவதும் நிறைந்திருக்கக்கூடிய இதே அறிவுதான் எங்கேயும் இருக்கிறது. அது தொகுப்பறிவு ( Collective Knowledge). அதனால் அந்த இடத்திலிருந்து நாம் எண்ணிய எண்ணத்திற்குரிய காலமும் வேகமும் வரும்போது அது தானாகவே மலர்ந்து செயலாகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண மாவட்டச் செயலக நலன்புரி கழகம் நடத்தும் அரச அதிபர் வெற்றிக் கிண்ணம்-2013

யாழ். மாவட்டச் செயலக நலன புரிக் கழகம் நடத்தும் அரச அதிபர் வெற்றிக்கிண்ண 2013 ஆம் ஆண்டுக்கான விளையாட்டு விழா யாழ். மாவட்டச் செயலக நலன்புரிக் கழக தலைவர் க.மகேஸ்வரன் தலைமையில் மானிப்பாய் இந்துக் கல்லூரியில் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

இறுதிப் போட்டி அன்று உதைபந்தாட்டம், துடுப்பாட்டம், கரப்பந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆண, பெண்களுக்கான கயிறுமுத்தல் போட்டிகள் , பரிசளிப்பு என்பன இடம்பெறவுள்ளன. (க)

## துடுப்பாட்டப் போட்டி


சங்கானை பிரதேச செயலக அணி


ஊர்காவற்றுறை பிரதேச செயலக அணி

## வலைப்பந்தாட்டப் போட்டி


ஊர்காவற்றுறை பிரதேச செயகை அணி


வேலணை பிரதேச செயலக அணி

## கரப்பந்தாட்டப் போட்டி


மாவட்டச் செயலக அணி


கரவெட்டி பிரதேச செயலக அணி

## உதைபந்தாட்டப் போட்டி


கரவெட்டி பிரதேச செயலக அணி


தெல்லிப்பழை பிரதேச செயலக அணி


சுன்னாகம் பொலிஸார் புதுவருடத்தை முன்னிட்டு நடத்திய விளையாட்டு நிகழ்வுகள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்ஸ்வெல், மில்லர் அதிரடி கிங்ஸ் லெவின் பஞ்சாப் வெற்றி




கிளென் மக்ஸ்வெல், டேவிட் மில்லரின் அதிரடி ஆட்டம் கை கொடுக்க பஞ்சாப் அணி 8 பந்துகள் மீதமிருக்கையில் 7 விக் கெட்டுக்களால் அபார வெற்றி பெற்றது.


7-வது ஐ.பி.எல் தொடரின் முதல்கட்டப் போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சில் நடைபெற்று வருகின்றன.

இதன் 7-வது லீக் போட்டி நேற்று ராஜஸ்தான் - பஞ்சாப் அணிகளுக்கு இடையில் சார்ஜாவில் நடைபெற்றது.

நாணயச்சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணித் தலைவர் பெய்லி முதலில் களத்தடுப்பைத் தேர்வு செய்தார்.

இதன்படி களமிறங்கிய ராஜஸ்தான் அணி சார்பில் நாயர் - ரஹானே ஆரம்ப வீரர்களாக களம் இறங்கினார்கள். ரஹானே 12 ஓட்டங்கள் எடுத்த நிலையில் ரன் அவுட் ஆகி வெளியேறினார். அடுத்து சாம்சன் களம் இறங்கி களத்தில் நின்ற நாயருடன் ஜோடி





சேர்ந்தார். இருவரும் பஞ்சாப் அணியின் பந்துவீச்சை விளாசித் தள்ளினர்.

20 பந்துகளில் 2 பவுண்டரி, ஒரு சிக்சருடன் 23 ஓட்டங்கள் எடுத்திருந்த போது நாயர் ஆட்டமிழந்தார். அடுத்து 3-வது விக்கெட்டுக்கு சாம்சனுடன், அணியின் தலைவர் வோட்சன் ஜோடி சேர்ந்தார். சாம்சனும், வோட்சனும் பஞ்சாப் அணி பந்து வீச்சா ளர்களை பதம் பார்த்தனர். இதனால் பந்து நாலாபுறமும் பறந்தோடியது.

வோட்சன் 29 பந்துகளில் 5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்களுடன் 50 ஓட்டங்கள் எடுத்த நிலையில் அஸ்கர் பட்டேல் பந்தில் ஆட்டம் இழந்தார். அடுத்து வந்த பின்னி 12 ஓட்டங்களுடனும், சாம்சன் 34 பந்தில் 3 பவுண்டரி, 4 சிக்சருடன் 52 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய ஸ்மித் 27, போல்க்னர் 8 ஓட்டங்கள் எடுக்க ராஜஸ்தான் அணி 20 ஓவர்களின் நிறைவில் 5. விக்கெட்டுக்களை இழந்து 191 ஓட்டங்கள் குவித்தது.

பஞ்சாப் அணி சார்பில் பட்டேல், ஜோன்சன், அவாணா, கார்த்திக் ஆகியோர் தலா ஒரு விக்கெட் வீழ்த்தினர்.

கடின வெற்றியிலக்கை நோக்கி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த பஞ்சாப் அணிக்கு ஆரம்பம் சொதப்பலாக அமைந்தாலும் (ஷேவாக் 2, சகா 2) மக்ஸ்வெல், டேவிட் மில்லரின் சிறப்பான ஆட்டம் கைகொடுக்க அவ்வணி 18.4 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரமே இழந்து வெற்றியிலக்கை (193) அடைந்தது.

துடுப்பாட்டத்தில் பஞ்சாப் அணி சார்பாக மக்ஸ்வெல் 45 பந்துகளில் 8 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கலாக 89, மில்லர் 19 பந்துகளில் 6 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காமல் 51, புஜாரா ஆட்டமிழக்காமல் 40 ஓட்டங்களை எடுத்தனர்.

ராஜஸ்தான் அணியின் பந்துவீச்சில் ரிச்சர்ட்ஸன், குல்கர்னி, போல்க்னர் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக பஞ்சாப் அணியின் மக்ஸ்வெல் தெரிவானார்.




## உலகக் கிண்ண கால்பந்து: ரிக்கெட் விற்பனை விறுவிறு

FIFA WORLD CUP Brasil 2014

பிரேசிலில் வருகிற ஜூன் மாதம் ஆரம்பமாகவுள்ள உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகளுக்கான ரிக் கெட் விற்பனை சூடு பிடித்துள்ளது.

உலகக் கிண்ண கால்பந்தாட்ட போட்டிகள் பிரேசிலில் வருகிற ஜூன் மாதம் 12-ம் திகதி தொடங்குகிறது.

போட்டி நடைபெறவுள்ள 12 நகரங்களில் 10 நகரங்களில் டிக்கெட் விற்பனை நேற்று முன்தினம் தொடங்கியது. ரியோ டி ஜெனிரோவில் உள்ள மைதானத்தில், ரிக்கெட்டுகளை வாங்க கால்பந்து ரசிகர்கள் கூட்டம் கூட்டமாக குவிந்தனர். முதல்போட்டி நடைபெறவுள்ள சா பாவ்லோ நகரி லும், ரசிகர்கள் ஆர்வமுடன் டிக்கெட்களை வாங்கிச் செல்கின்றனர்.



## ஷேவாக்கை புகழும் மில்லர்

இந்திய அணி வீரர் வீரேந்திரர் ஷேவாக்கிடம் இருந்து நிறைய கற்றுக் கொள்ள வேண்டும் என தென்னாபிரிக்காவின் டேவிட் மில்லர் தெரிவித்துள்ளார். கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியின் நட்சத்திர வீரராக ஜொலித்து வருகிறார் தென்னாபிரிக்காவை சேர்ந்த டேவிட் மில்லர்.

இவர் சமீபத்தில் அளித்துள்ள பேட்டியில், எனது கதாநாயகர்களில் வீரேந்திரர் ஷேவாக்கும் ஒருவர், அவரிடம் இருந்து நிறைய விஷயங்களை கற்றுக் கொள்ள முடியும்.

எந்தவிதமான சூழ்நிலையிலும் பயமின்றி, தைரியமாக விளையாடும் அணுகுமுறையை அவரிடம் இருந்து எனக்குள் கிரகித்துக் கொள்ள விரும்புகிறேன். அவர் தன்நம்பிக்கை மிக்க வீரர், மற்றவர்கள் அவரது ஆட்டம் குறித்து என்ன பேசுகிறார்கள் என்பது பொருட்டல்ல எனவும் தெரிவித்துள்ளார்.

## சர்வதேச...

தாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், ஐ.நா விசாரணைக் குழு மற்றும். அதில் இடம்பெறு வோர் தொடர்பிலான விபரங்கள் இதுவரை உறுதி செய்யப்படாத போதிலும், இது தொடர்பான அதி காரபூர்வமான அறிவிப்பு அடுத்த மாதம் எந்த நேரத்திலும் வெளியிடப்படலாம் எனக் குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையிலேயே, ஐ.நா செயலாளர் நாயகம் பான் கீ மூனை ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை சந்தித்துப் பேசவுள்ளதாக ஜெனிவாவில் உள்ள இராஜதந்திரிகள் தெரிவித்தனர்.

இது தொடர்பில் ஜெனிவாவில் உள்ள இலங்கையின் வதிவிடப் பிரதி நிதி மூலம் கொழும்புக்கு முறைப்படியாக அறிவிக்கப்படும் என்றும் கூறப்படுகின்றது. (செ-6)

# மரண அறிவித்தல்

## திருமதி ஆறுமுகம் மாணிக்கம்



மட்டுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் சரசாலை தெற்கை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஆறுமுகம் மாணிக்கம் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரகத்தி ஆறுமுகம் அவர்களின் அன்பு மனைவியும், சிவஞானம் (கொடிகாமம்), சிவயோகம் (மட்டுவில் வடக்கு), சிவபாதசுந்தரம் (ஆறுமுகம் மில்-சரசாலை), சிவானந்தசோதி (நோர்வே), சிவராஜா (பிரான்ஸ்), சிவபாலகிருஸ்ணன் (புலோலி), சிவபாலச்சந்திரன் (சாவகச்சேரி), சிவானந்தம் (திருநெல்வேலி), சிவகுமார் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், நேசரத்தினம், நாகேஸ்வரன் (மட்டுவில்), சிவஞானவதி, இராஜேஸ்வரன் (நோர்வே), சிவசாந்தி (பிரான்ஸ்), தவமணி, நாகேஸ்வரி, சர்வலோகேஸ்வரி (ஆசிரியை-யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை), அருளாநந்தி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மட்டுவில் கிழக்கு,
சாவகச்சேரி

தகவல்:பிள்ளைகள்

(சி-7120)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கி-டக்ளஸ் இணைத்...

மாதம் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் இடம்பெற்றது. இதில் இணைத் தலைமை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்படவில்லை என்ற காரணத்தினால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், வடக்கு மாகாணசபை உறுப்பினர்கள், பிரதேசசபைத் தவிசாளர்கள் உள்ளிட்ட அக்கட்சியினர் எவரும் கூட்டத்தில் பங்கு பற்றாமல் புறக்கணித்திருந்தனர்.

அதேவேளை அமைச்சருடன் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி இந்தக்கூட்டத்திற்கு இணைத் தலைவராக செயற்பட்டிருந்தார்.

இந்த நிலையில் இன்று 21 ஆம் திகதி இடம்பெறும் யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்துக்கு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதுடன், இணைத் தலைமை வடக்கு மாகாண முதலமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளது. அதையடுத்து யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பங்கெடுக்கும் என்று அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு மாகாண சபை அமைகப்பட்டபின்பு முதலமைச்சரின் இணைத்தலைமையில் இடம்பெறும் முதலாவது மாவட்ட ஒருங்கிணைப்பு கூட்டம் என்பதனால் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (செ-6)

## பாக்.பிரதிநிதி...

றும் வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றி ஆராயவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை வரும் இந்த பாகிஸ்தான் பிரதிநிதிகள், பாதுகாப்புச் செயலாளர், வெளிவிவகார அமைசசின் செயலாளர், முப்படை தளபதிகள் மற்றும் மத்திய வங்கியின் அதிகாரிகளையும் சந்திக்க உள்ளதுடன் யாழ்ப்பாணம், திருகோணமலை, கண்டி ஆகிய பிரதேசங்களுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளனர். (செ-6)

## தடைசெய்...

அமைப்புகள் மற்றும் 424 தனிநபர்கள் மீது விதிக்கப்பட்ட தடை தொடர்பில் அவர் விளக்கம் அளிக்கவுள்ளார்.

இலங்கை அரசாங்கத்தால் தடை விதிக்கப்பட்ட நபர்களையும், சர்வதேச பொலிஸாரால் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ள 40 பேரையும் இலங்கைக்குக் கொண்டு வருவதற்கு உதவுமாறு இந்தச் சந்திப்பில் வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் கோரிக்கை விடுக்கவுள்ளார்.

கைதிகளைப் பரிமாற்றம் செய்து கொள்ளும் உடன்பாடு நடைமுறையில் இல்லாத நாடுகளும் கூட, இவ்விடயம் தொடர்பில் பயனுள்ள முறையில் ஒத்துழைப்பு வழங்க முடியும் என்று வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈரானுடன் கைதிகள் பரிமாற்ற உடன்பாட்டை இலங்கை செய்து கொள்ளாத போதிலும், ஈரானில் கைது செய்யப்பட்ட நந்தகோபன், மலேசியாவுக்கு நாடு கடத்தப்பட்டு அங்கிருந்து இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டதையும் குறித்த அதிகாரி சுட்டிக்காட்டியுள்ளார். (செ-6)

## கிளிநொச்சி...

கணக்கான விவசாயிகள் பங்கு கொண்டு தமது எதிர்ப்பினை வெளிபடுத்தினர்.

இரணைமடுவிலிருந்து குடாநாட்டுக்கு நீர் கொண்டு செல்வதால் ஏற்படக்கூடிய நெருக்கடி நிலை தொடர்பிலும், தமக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுவரும் தவறான பரப்புரை நடவடிக்கைகள் தொடர்பிலும விவசாயிகள் கண்டன கோஷங்களை எழுப்பினர்.

பின்னர் அங்குவந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியினரின் உறுதி மொழிகளையடுத்து நண்பகல் 12 மணியளவில் போராட்டம் கைவிடப்பட்டது.

நேற்றைய பேராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் சிறிதரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் மற்றும் மணிவண்ணன், வடக்கு மாகாண கல்வி அமைச்சர் குருகுலராஜா, மாகாண சபை உறுப்பினர்கள் பசுபதிப்பிள்ளை, அரியரட்ணம் ஆகியோரும் பங்கு கொண்டு இரணைமடு நீர் வழங்கல் திட்டத்திற்கு தமது எதிர்ப்பினை வெளியிட்டுள்ளனர். (மேலும் விரிவான செய்தி உள்ளே) (செ-250)

## மயங்கி விழு...

யில் ஈடுபட்டிருந்தார்.

கடும் வெயில் காரணமாக ஏற்பட்ட சோர்வினால் இவர் தோட்டத்திலேயே திடீரென் மயங்கி விழுந்தார்.

அருகில் தோட்டவேலையில் ஈடுபட்டிருந்த ஏனையவர்கள் உடனடியாக இவரை தூக்கிக்கொண்டு அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்த்தனர்.

அங்கு அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாகத் தெரிவித்தனர்.

இந்த திடீர் மரணம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-6)

## இந்து ஆலய புனரமை...

சுறுத்தல்கள் காரணமாக பணிகள் தடைபட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் கூறுகின்றனர்.

### அரசாங்கம் அனுமதி

சில மாதங்களுக்கு முன்னர் அரசாங்க அதிபர் மேஜர் ஜெனரல் ஆர்.டி.சில்வா நேரில் சென்று அந்த இடத்தை பார்வையிட்டு புனரமைப்பு பணிகளை ஆரம்பிக்க ஆலய நிர்வாகத்தினருக்கு அனுமதி வழங்கியிருந்தார்.

அரசாங்க அதிபரின் அனுமதி பெற்று புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு ஓரிரு நாட்களால் அந்த பகுதியிலுள்ள பௌத்த பிக்குகள் உட்பட சிலரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்கள் காரணமாக பணிகளை தாம் நிறுத்திக் கொண்டதாக ஆலய பரிபாலன சபை தலைவரான வேலுப்பிள்ளை தவராசா கூறுகின்றார்.

ஆலயம் அமைந்துள்ள பிரதேசம் பௌத்த மத வழிபாட்டு தடயங்களை கொண்ட தொல்பொருள் ஆய்வுக்கு உட்பட்ட இடமென பௌத்த பிக்குகளினால் கூறப்படுவதையும் அவர் நிராகரித்துள்ளார்.

காணி அபகரிப்புடன் தொடர்புடைய நபர்களே ஆலய புனரமைப்புக்கும் தடைகளை ஏற்படுத்தியுள்ளார்கள் என்றும் அவர் தெரிவிக்கின்றார்.

இது தொடர்பாக அரசாங்க அதிபர் மற்றும் ஜனாதிபதி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (செ-6)


**பெற்றோர்களே!**

சர்வதேசத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்ட Elocution Classess.

New Era Accadamy (London) Syllabus ஐ அடிப்படையாகக் கொண்டு யாழ்.மாவட்டத்தின் பல இடங்களிலும் நடைபெற்று வருகின்றது. October மாதப் பரீட்சைக்கான அனுமதிகள் வழங்கப் படுகின்றன. இச் சான்றுதழுக்கு Ofqual அங்கீகாரம் வழங்கப்படுவதால் Student visa, Family Migration இன்போது புள்ளிகள் சேர்த்துக் கொள்ளப்படும்.

மாசி மாதப் பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களுக்கு 23.04. 2014 அன்று பிள்ளையார் இன் இல் நடைபெறும். டிசம்பர் மாதம் பரீட்சைக் குத் தோற்றியோருக்கான சான்றிதழ்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

**இணைப்பாளர்:-0772116733** (6172)

**ALLIANCE FRANÇAISE DE JAFFNA**

THE ONLY OFFICIAL FRENCH CENTRE.

FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

af — Alliance Française de Jaffna

திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும்; French கற்கவிரும்புவோர். யாழில் AF 1976 முதல் இயங்கிவருகிறது.

- உலகில் FRENCH கற்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கிகரிக்கும் முதல்தர சர்வதேச நிறுவனம் AF மட்டுமே. இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் கிளைநிறுவனங்களைக் கொண்டு உலகப் புகழ் பெற்ற நிறுவனமாக FRENCH EMBASSY இன் கீழ் இயங்குகின்றது. உயர் தகைமையுடைய பல ஆசிரியர்களைக் கொண்ட ஒரே சர்வதேச நிறுவனம் எமதே.
- வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி,வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) இங்கு படிக்கிறார்கள்.
- **Certificates & International Diplomas(DELF A1,A2)**

புதிய வகுப்புகள் 26.04.2014 8.30 am இன்றே பதிவுசெய்யுங்கள்

வடமாகாணத்தில் ஒரே முகவரி தான்...

61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.

(இவ்வீதியில் கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

அச்சுத்துறையில் பல விலைக்கழிவை அறிமுகப்படுத்தும்

**M கொழும்பு பிறிண்டேர்ஸ்**

**போட்டோக் கொப்பி இருபக்கம் 2/=**




**கலர் பிறிண்ட் 10/=** (C-7118)

இல. 666 கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

தொ.பே : 0771974875 E.Mail:mcprinters4@gmail.com

**கணினி திருத்தம்**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்களது வீடுகளுக்கே வந்து திருத்தி தருகிறோம்.

அழையுங்கள் 0779086737

GUNAA BEST PC Computer Repair

52,Hospital Road,Jaffna. (C-7119)

**காணி விற்பனைக்கு**

கிந்தியவத்தை, வல்வெட்டி, சமரபாகுவிலுள்ள பனங்காணி 58பரப்பு முழுமையாகவோ பகுதியாகவோ உடன் விற்பனைக்கு உண்டு. (6186)

**T.P: 0213734108**

Digital விஷேட கட்டண சலுகைகள்

**இண்டர்நஷனல் எக்ஸ்பிரஸ் பொதி விநியோக சேவை**



- 200க்கும் மேற்பட்ட நாடுகளுக்கான உலகின் முதற்தர கூரியர் நிறுவன்ம் மூலம் தபால் மற்றும் பொதி விநியோக சேவையினை தரமாகவும் பாதுகாப்பாகவும் அனுபப்பிட நாடுங்கள்
- நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
- மிகச்சிறந்த வாடிக்கையாளர் சேவை
- அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்

WESTERN UNION MONEY TRANSFER

மிக விரைவான பணப்பரிமாற்ற சேவையினை நம்பிக்கையாகவும் பாதுகாப்பாகவும் பெற்றுக்கொள்ள முடியும்

62/16 ஸ்ரான்லி வீதி (சம்பத்வங்கி முன்பாக) யாழ்ப்பாணம் தொடர்புகளுக்கு - 021 753 8330, 0777 151 101 (C-7116)

வாழ்க வளமுடன்

- * கணக்காய்வு பரீட்சகர் சேவை தரம் II இற்கான ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை 2014
- * மருத்துவவியல் தொழில் வல்லுநர் துணை மருத்துவ சேவை பயிலுநர் 2014 (A/L உயிரியல் பிரிவு)
- * பரீட்சைத் தரவுகள் உதவியாளர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை 2014
- * மொறட்டுவ பல்கலைக்கழகம் தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதி 2014-2015
- * இலங்கை விவசாயக் கல்லூரிகளில் அனுமதி பெறுவதற்கான போட்டிப் பரீட்சை 2014. தேசிய டிப்ளோமா கற்கைநெறி 2014 - 2017
- * பெறுபேறு மீளாய்வு (சா.தற) 2013 ஆகிய விண்ணப்பப்படிவங்கள் மற்றும்
- * S.சுரேஸ்குமார் BSc (Hons). MBA (Lon) இன் A/L Chemistry பல்தேர்வு வினாக்கள் விளக்கமான விடைகளுடன் கூடிய நூல்.
- * மற்றும் சகல விதமான பாடப் பயிற்சிப் புத்தகங்களும் பாடசாலை உபகரணங்களும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் (C-7117)

நியூ அருள்நாயகி புத்தக நிலையம்

கண்டி வீதி,கொடிகாமம்.

0775144093,0774937585


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org